விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித நாமல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவ்வனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-5809)

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 10 ஞாயிற்றுக்கிழமை (24.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

## மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து
## இலங்கை சரியான நேரத்தில்
## நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்
### அமெரிக்கா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து இலங்கை சரியான நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்வது நாட்டின் எதிர்காலத்திற்கு சிறந்ததாகும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக்கு அரசு என்ன செய்தது?
### மகிந்த அணி கேள்வி

(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு செய்தது என்னவென கூறமுடியுமா என அரசாங்கத்திடம் எதிர்க்கட்சி கோரியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 15☛

## 10 நாட்களுக்கு மின்வெட்டு தொடரும்

(கொழும்பு)


நாட்டின் பல பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின் வெட்டு இன்னும் 10 நாட்களுக்கு தொடரும் என மின் சக்தி அமைச்சர் ரவி கருணா 15☛

## நாட்டு மக்களுக்கு நாங்கள் ஜனநாயக உரிமையை பெற்றுக்கொடுத்துள்ளோம்
### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அனைவருக்கும் சொந்தமாக காணி உரிமையை வழங்க வேண்டும் என்பதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற 7 ஆயிரம் பேருக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் பிரதமர் இதனை கூறியுள்ளார்.



நாட்டு மக்களுக்கு நாங்கள் ஜனநாயக உரிமையை பெற்றுக் கொடுத்தோம். தற்போது பிரதான பணியாக காணி உரிமைகளை வழங்கி வருகின்றோம்.

இதன் பின்னர் நாங்கள் கொண்டு வரும் புதிய சட்டத்தின் மூலம் உங்கள் அனைவருக்கும் சொந்தமாக காணிகளை வழங்குவோம். 15☛

## இணை அனுசரணைக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் – சரத்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்குவதற்கு ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாத



நிலையில், வெளிவிவகார அமைச்சு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமை சட்டத்திற்கு முரணானது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வெகு விரைவில் இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடவுள்ளோம் என ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். (ம-3)

## காணாமல் போன வயோதிப மாது சடலமாக மீட்பு

(கரணவாய்)

மூன்று தினங்களிற்கு முன்னர் காணாமல் போன வயோதிப மாது ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 15☛

### யுத்த காலத்தில் காட்டாத அக்கறையை
## மனித உரிமை அமைப்புகள் இப்போது காட்டுகின்றன
### ரோஹித அபேகுணவர்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)



நாட்டில் மூன்று தசாப்தகாலமாக யுத்தம் நிலவிய போது எவ்வித அக்கறையும் காட்டாத மனித உரிமை அமைப்புக்கள் தற்போது யுத்தம் முடிந்த பின்னர் அக்கறை காட்டுவதாக 15☛

## விபத்தில் இறந்த இளைஞன் வீட்டில் வாள்வெட்டுக் குழு கொள்ளை
### யாழில் மரண வீட்டில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மரணச் சடங்கு நடந்த வீட்டில் ஆயுதங்களுடன் சென்ற நபர்கள் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அளவெட்டிப்பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. விபத்தில் உயிரிழந்த நபரின் மரணச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் 15☛

## மக்களுக்கு அறிவிக்காது மின்விநியோகம் துண்டிப்பு
### பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொது மக்களுக்கு அறிவிக்காது மின் விநியோகம் துண்டிக்கப்படுவதாக, பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்தநிலையில் மின்சார விநியோகம் துண்டிப்பது குறித்து இலங்கை மின்சார சபையிடம் அறிக்கை ஒன்றை 15☛

## மனித உரிமை பேரவையுடன் இணைந்து இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும்
### சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

(கொழும்பு)

காலதாமதம் ஏற்படாத வகையில் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப் பிராந்திய பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் மூன்று தசாப்த காலமாகத் 15☛

## தமிழருக்கு புலி முத்திரை
### பிரதியமைச்சர் புத்திக


(கொழும்பு)

தமிழர் ஒருவர் ஊடக நிறுவனத்தின் தலைவராக காணப்படும் பட் 15☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா நாயகனை

## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.சண்.தயாளன்

(யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்)

விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்து பல மாணவர்களை சாதனையாளர்கள் ஆக்கிய பெருமைக்குச் சொந்தக்காரரான யாழ் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.சண்.தயாளன் அவர்கள் கடந்த 04.03.2019 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார். இவரைக் கௌரவிக்கும் மணிவிழா நிகழ்வு இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஞான வைரவர் ஆலயத்தில் இருந்து இலங்கை வேந்தன் கலைக் கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மணிவிழா நாயகனை பாராட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்விச் சமூகத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து மணிவிழா நாயகனை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- மணிவிழா குழு

(சி-5866)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



### சீகான் மா.இரத்தினசோதி

7th DAN (W.K.F), 8th DAN (S.L.K.F)

மனித மேம்பாட்டு மற்றும் அஸ்ராங்க யோகா மந்திரினால் சுவாமி சிவாநந்தா (இந்தியா) அவர்களின் திவ்விய ஜீவன சங்க பாரம்பரிய கதயோகா நெறிகளும் அவை தொடர்பான சகல நெறிகளையும் பூர்த்தி செய்தமைக்காக டிப்ளோமா பட்டமளிப்பு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் (இந்திய தூதரகம்) இலங்கை கிளையில் பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.மா.இரத்தினசோதி தனது 76ஆவது வயதில் 01.03.2019 அன்று பெற்றுக்கொண்டார்.

-தற்காப்பு கலையக மாணவர்கள்

(8095)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

(8094)

## வைத்திய சேவையும் பராமரிப்பும்

உங்கள் வயது முதிர்ந்த நோயாளர்களை வீடுகளில் வைத்து பராமரிப்பதில் கஷ்டப்படுகிறீர்களா? எங்கள் இடத்தில் வைத்து பராமரிக்கப்படுவர். Phisiotherapy வசதியும் உண்டு.

அழையுங்கள்: 077 873 0129

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் மானிப்பாய் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கூடுதல் விலை கோரிக்கைக்கு வழங்கப்படும். தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்புகளுக்கு

075 047 5868

(8093)

## வேலைவாய்ப்பு

இலங்கையில் பல மாவட்டங்களில் வியாபித்துள்ள எங்களது நிறுவனத்தில் உங்கள் திறமைக்கு ஒரு வாய்ப்பு.


- உங்கள் திறமைக்கு மட்டும் முதலிடம்.
- உங்களது விடாமுயற்சி, பயிற்சியுடன் பதவி உயர்வு.
- குறுகிய காலத்தில் கூடிய சம்பளத்தினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு (45,000/=)
- உங்களுகென்று ஒரு புதிய வாகனம் ஒன்றினை பெறும் வாய்ப்பினை கூடிய விரைவில் பெறலாம்.
- வாழ்க்கையில் ஒரு தடவை மட்டும் கிடைக்கும் இந்த வாய்ப்பினை நழுவ விட்டுவிடாதீர்கள்.

தொடர்புகளுக்கு

076 459 7725

(C-5867)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## அம்பலவாணர் சிவலோகநாதன்

தோற்றம் : 27.11.1948
மறைவு : 27.03.2016

சேராத செல்வமெல்லாம்
சேர்த்துவிட்டு சேர்ந்திருக்க
மறந்து நீங்கள் சென்றதெங்கே?
பாரினிலே பந்தங்கள்
பலவிருக்க பக்கத்துணை நீங்கள்
இன்றி பயனேது எமக்கு!!!
அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தந்தையே
நீங்கள் இல்லாத உலகம்
என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம்,
உங்கள் மலர்ந்த முகத்தை?
வருடங்கள் மூன்று ஆனாலும்
எம்முடன் இன்றுவரை வாழ்ந்து
கொண்டிருக்கின்றீர்கள் அப்பா!

சூராவத்தை, சுன்னாகம்

- குடும்பத்தினர்

(8201)

## நிர்வாக இயக்குநர்

**கல்வித்திறமையும் சமூக சேவை மனப்பான்மையும் உள்ள இந்து மதத்தைச் சார்ந்த பெண்மணி தேவை.**

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மஹாகாளி அம்மா ஆலயத்தின் முக்கால பூஜைகளையும் உற்சவங்களையும் ஆகம முறைப்படி நிர்வகிப்பதோடு, ஆலயத்தினை மையமாக கொண்டு ஆலயத்தின் அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் சமய, சமூக, கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்த நிலைக்கு உரிய பணியாகும்.

இயக்கச்சியில் இருந்து 20கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தில் இருந்து விண்ணப்பிப்பது விரும்பத்தக்கது.

**தகுந்த ஊதியத்துடன் முகாமைத்துவ சபையின் அங்கத்துவமும் வழங்கப்படும்.**

தொடர்பு கொள்ளவும்

பெயர் : Mr.N.Sivakumaran
மின்னஞ்சல் : md@isfindustries.com
தொலைபேசி : 077 207 8455, 077 207 8451
தபால் முகவரி : 3/4, Rockwood Place, Colombo -7

(8096)

# புதைகுழி அகழ்வு இடைநிறுத்தம்!

(மன்னார்)

மன்னார்- மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் அனைத்தும் மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மன்னார் நீதவானின் தலைமையில் நடைபெற்ற இப்புதை குழி தொடர்பிலான கூட்டத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த மூன்று மாதத்துக்குள் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரின் தொல்பொருள் அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.(ம-285)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# யாழில் தனிநபர், குடும்ப வருமானம் மிகக் குறைவாகக் காணப்படுகிறது

## தயாசிறி எம்.பி.சுட்டிக்காட்டு

- யுத்த சம்பவங்களுக்காக மன்னிப்புக் கோரல்
- யாழ்.பொது நூலகத்தை எரித்தது ஐ.தே.கவே



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தனிநபர் வருமானம் மற்றும் குடும்ப வருமானம் என்பன மிகக்குறைவாகக் காணப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயல்ாளர் தயாசிறி ஜெயசேகர எம்.பி. தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு செயற்றிட்ட மகாநாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் தனிநபர் மாத வருமானம் 11 ஆயிரம் ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில் மேல் மாகாணத்தில் 21 ஆயிரம் ஆகக் காணப்படுகிறது. அதேபோல் யாழில் மாதாந்த குடும்ப வருமானம் 46 ஆயிரம் காணப்படும் அதேவேளையில் மேல் மாகாணத்தில் அது 87 ஆயிரம் வரை உயர்ந்து செல்கிறது. சிறந்த வாழ்க்கை நடத்துவதற்கு போதுமான வருமானம் வடக்கு மாகாணத்தில் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த அரசாங்கத்தின் முதல் வேலையாக வடக்கு மக்களின் வருமானம் உயர்த்தப்படும்.

வடக்கில் நல்ல குடிநீரைப் பெற முடியாத மக்கள் உள்ளனர். அதேபோல் வடக்கில் 8 சதவீத மக்கள் மின்சாரம் இல்லாமல் இருக்கிறார்கள். வடக்கில் முப்பது வருட கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களே அதிகம். யுத்த அவலங்கள் உங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. நாம் இரவில் அமைதியாகத் தூங்கிய வேளையில் நீங்கள் யுத்தத்தால் நித்திரையைத் தொலைத்தீர்கள்.

நான் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் வர வேண்டும் என நினைப்பவன். எனவே யுத்த சம்பவங்களுக்காக மன்னிப்புக் கேட்கிறேன். எந்தவொரு அரசாங்கமும் ஆயுதத்தை கையில் எடுத்தால் அதைத் தடுக்க முயல்வார்கள். இந்த அரசாங்கமும் அப்படித்தான் செயற்பட்டது. 1971 காலப் பகுதியில் தென்பகுதி இளைஞர்கள் ஆயுதத்தைக்கையில் ஏந்திய போதும் அரசாங்கம் அதற்கு எதிராகத்தான் செயற்பட்டது. சுதந்திரம் என்பது காலையில் எழுந்து மதியம் உணவுண்டு இரவில் தூங்குவது அல்ல. சுதந்திரம் என்பது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்பகுதி நீரை வடக்கிற்கு கொண்டுவர வடபகுதி அரசியல்வாதிகள் தடுக்கின்றனர்.

தண்ணீரில் வடக்கு-தெற்கு என்ற பாகுபாடு வேண்டாம். வடக்கில் வேலையில்லாப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க தொழிற்பேட்டைகளை உருவாக்குவது எமது நோக்காகக் காணப்படுகிறது. அரசாங்க வேலையை மாத்திரம் கொடுத்து வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வடக்கில் பெண்கள் வறுமை நிலையில் உள்ளனர். நுண்கடனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தின் பின்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளது. வடக்கு மக்களை அழிக்கவே போதைப்பொருள் பாவனையை திட்டமிட்டு கொண்டு வந்துள்ளனர்.

ஜனாதிபதி செயலணியின் கீழான பொலிஸ் பிரிவினரால் தற்போது அளவிற்கு அதிகமான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. இலங்கையில் நாம் சுதந்திரத்தைப் பெற்ற போதிலும் மொழி ரீதியாக பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டு அது பின்னர் பாரிய இனப்பிரச்சினையாக உருவெடுத்தது. இந்த இனப் பிரச்சினையை வடக்கு மற்றும் தெற்கு அரசியல்வாதிகள் அரசியல் மயப்படுத்தி அரசியல் தேவைக்காகப் பயன்படுத்துகிறார்கள். தற்போதும் சிலர் சில காரணங்களைக் கூறி தமிழ்-சிங்கள மக்களைப் பிரிக்க முயற்சிக்கிறார்கள். சுதந்திரக்கட்சி நூலகங்களை ஒருபோதும் எரிக்கவில்லை. 1983 இல் இனக் கலவரத்தை ஏற்படுத்தி தமிழரை கூண்டோடு அழிக்க முற்பட்டவர்கள் ஐ.தே.கட்சியினர். யாழ். பொது நூலகத்தை தீ மூட்டி எரித்தவர்களும் அவர்களே என தயாசிறி மேலும் தெரிவித்தார். (இ-30)

# நான் தமிழ் மக்கள் மத்தியில் கொடூரமானவனாக சித்திரிக்கப்பட்டேன்

## கோத்தபாய கவலை



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற 30 வருட கால பயங்கர யுத்தத்தை வெற்றிகொண்டதைத் தொடர்ந்தே நான் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கொடூரமானவனாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராலும் ஏனைய தமிழ்க் கட்சிகளினாலும் சித்திரிக்கப்பட்டேன் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கட்சிகளாலேயே நான் தமிழ் மக்கள் மத்தியில் கொடூரமானவனாக சித்திரிக்கப்பட்டேன்.

இதில் எவ்வித பொது நோக்கமும் இல்லை, முற்றிலும் அரசியல் நோக்கங்களை மையப்படுத்தி அவர்கள் அவ்வாறு செய்தார்கள்.

அதற்காகவே என்னை ஒரு தீவிரவாத போக்கு கொண்டவனாக தொடர்ந்து காண்பிக்கின்றனர். நான் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்ல, அதற்கான அவசியமும் இல்லை.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு பிரதான காரணம் தமிழ் மக்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். இக் கருத்தானது மிகவும் தவறானது. நகர் பிரதேசத்தின் சிங்கள இனத்தவர்களின் ஆதரவு எமக்கு கிடைக்கப்பெறவில்லை.


பாரியளவிலான வாக்குகளால் ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை, குறுகிய அளவிலான வாக்குகளே கடந்த அரசாங்கத்திற்கு எதிராக கிடைக்கப்பெற்றது.

தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியும் என்று நான் குறிப்பிட்டதாக பொய்யான வதந்திகள் சமூக வலைத்தளங்களில் வெளிவந்துள்ளன. இந் நிலைப்பாட்டைஅனைவரும் திருத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டில் ஒட்டுமொத்த மக்களின் ஆதரவுடனேயே நாட்டின் தலைவர் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற கொள்கையை எமது அரசியல் செயற்பாடாக முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கொலைக் குற்றவாளி! கோத்தாவை ஜனாதிபதியாக்க மக்கள் முட்டாள்கள் அல்லர்

## விக்கிரமபாகு கருணாரட்ன காட்டம்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக நியமிக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் முட்டாள்கள் இல்லை என்று இலங்கை சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "யுத்த காலத்தின் போதும் கோத்தபாய ராஜபக்ஷ பயனற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டார். நாட்டில் பல கொலைகளைச் செய்தார். இதற்கான சாட்சிகளும் இருக்கின்றன. இவ்வாறான கொலைக் குற்றவாளி நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக வருவார் என்று நான் நம்பவில்லை.

இதுபோன்ற ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்கும் அளவுக்கு நாட்டு மக்களும் முட்டாள்கள் இல்லை. மக்கள் அறிவாளிகள். கோத்தபாய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன களமிறக்கினால், அந்தக் கட்சிக்கு இருக்கும் வாக்குகள் கூட கிடைக்காமல் போய்விடும்.

ஒருவகையில், இவ்வாறான ஒருவர் வேட்பாளராக களமிறங்குவது நன்மையே என்றும் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான், இவரை எதிர்த்துப் போட்டியிடும் தலைவர் ஒருவரால் இலகுவாக வெற்றி பெற முடியும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான பிரச்சினை இன்னும் நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

இதனால்தான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தக் கூட்டணி தொடர்பாக ஒரு முடிவுக்கு வர இதுவரையில் முடியாமல் இருக்கிறது.

அதையும் மீறி ராஜபக்ஷக்களில் ஒருவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது வேட்பாளராக களமிறக்கப்பட்டால், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு பாரிய பின்னடைவாகவும் ஏமாற்றமாகவுமே அமையும்.

இதனால், மைத்திரி அணியினருக்கு பொதுஜன பெரமுனக் கூட்டணியிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமைகூட ஏற்படலாம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)




# தாஹிர், ஜடேஜா, ஹர்பஜன் 'சுழல்ஜாலம்'

## சென்னையிடம் பெங்களூர் 'சரண்டர்'



இந்தியன் பிரிமியர் தொடரின் முதல் போட்டியில் சென்னை அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஜோராக வெற்றி பெற்றது. சென்னை அணியின் ஹர்பஜன் சிங், இம்ரான் தாகிர், ஜடேஜா 'சுழலில்' மிரட்டினர்.

இந்தியாவில் பிரிமியர் தொடரின் 12ஆவது சீசன் நேற்று ஆரம்பமானது. சென்னையில் நடந்த முதல் போட்டியில் சென்னை, பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**சரிந்த துடுப்பாட்டம்**

பெங்களூர் அணிக்கு அணித் தலைவர் ஹோலி, பார்த்திவ் படேல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. சுழலில் மிரட்டிய ஹர்பஜன், முதலில் ஹோலி (6), அடுத்து மொயீன் அலியை (9) திருப்பி அனுப்பினார். தொடர்ந்து மிரட்டிய இவர் 'அபாய' டி வில்லியர்ஸையும் (9) அவுட்டாக்கினார்.

ஹெட்மயர் (0) ரன் அவுட்டாக, ஷிவம் துபே (2) ஓட்டங் களுக்கு, இம்ரான் சுழலில் சிக்கினார். தன் பங்கிற்கு பந்தை சுழற்றிய ஜடேஜா, கிராண்ட்ஹோமை (4) வீழ்த்தினார். பின்வரிசையில் சைனி (2), சகால் (4), உமேஷ் யாதவ் (1) என யாரும் நிலைக்கவில்லை. கடைசியில் பார்த்திவ் படேல் (29) ஆட்ட மிழந்தார். பெங்களூரு அணி 17.1 ஓவர்களில் 70 ஓட்டங்களுக்கு சுருண்டது. சென்னை சார்பில் ஹர்பஜன், இம்ரான் தாகிர் தலா 3, ஜடேஜா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**வோட்சன் 'அவுட்'**

எளிய இலக்கைத் துரத்திய சென்னை அணிக்கு வோட்சன் (0) அதிர்ச்சி கொடுத்தார். இம்ரான் ஓவரில் அடுத்தடுத்து இரு பவுண்டரி அடித்த ரெய்னா (19) கைவிட்டார். சைனி பந்தில் சிக்சர் விளாசிய அம்பதி ராயுடு 28 ஓட்டங்களுடன் போல்டானார். உமேஷ் பந்தில் கேதர் ஜாதவ் ஒரு பவுண்டரி விளாசினார். முடிவில் சென்னை அணி 17.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்கள் எடுத்து, 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கேதர் ஜாதவ் (13), ஜடேஜா (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பெங்களூரின் துடுப்பாட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்ட சென்னை அணியின் ஹர்பஜன் சிங் விக்கெட் ஒன்றை கைப்பற்றிய மகிழ்வை வெளிப்படுத்திய போது...

### 5000

நேற்று 15 ஓட்டங்கள் எடுத்த சென்னை வீரர் ரெய்னா, பிரிமியர் அரங்கில் 5000 ஓட்டங்கள் எடுத்த முதல் வீரர் ஆனார். இவர் 177 போட்டிகளில் ஒரு சதம், 35 அரைசதம் உட்பட 5004 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அடுத்த இரு இடத்தில் பெங்களூரு அணியின் ஹோலி (164ல் 4954), மும்பையின் ரோகித் சர்மா (173ல் 4493) உள்ளனர்.

**'ஐவ்வாக...'**

துடுப்பாட்ட வீரர்களுக்கான பிரிமியர் தொடரில் 'பவர் பிளே' ஓவர்களில் (6) வழக்கமாக 50 முதல் 60 ஓட்டங்கள் சாதாரணமாக எடுப்பர். நேற்று குறைந்த இலக்கை துரத்திய சென்னை அணி 6 ஓவரில் 16/1 ஓட்டங்கள் மட்டும் தான் எடுக்க ரசிகர்கள் வெறுப்பு அடைந்தனர். பிரிமியர் தொடரில் சென்னை அணியின் இரண்டாவது குறைந்தபட்ச 'பவர் பிளே' ஓட்ட எண்ணிக்கை இது தான். கடைசியில் சென்னை அணி 17.4 வது ஓவர்களில்தான் வெற்றி பெற்றது.

### 7

கடந்த 2014க்குப் பின் சென்னைக்கு எதிரான பிரிமியர் போட்டிகளில் பெங்களூரு அணி வெற்றி பெறவே இல்லை. நேற்றும் வீழ்ந்த இந்த அணி, சென்னைக்கு எதிராக தொடர்ச்சியான 7ஆவது தோல்வியை பதிவு செய்தது.


## மணிவிழா வாழ்த்து



(8702)

**சண். தயாளன்**

(உதவிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி)

விளையாட்டுத் துறையில் சாதனை பல புரிந்து பல மாணவர்களை சாதனை யாளராக்கியவரும்யாழ். இந்துவில் எனது STS நண்பனுமாகிய **சண். தயாளன்** அவர்களின் மணிவிழா இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. அவரின் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**வி. தயாபரன் குடும்பம்**

தயா அச்சகம் (தயா வெளியீடு)
90 (150), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1963 - 09 - 10 | 2019 - 03 - 23 |



### திருமதி முருகவேள் ஜெயசிறி (ஜெயா)

(ஜெயா தையல் உரிமையாளர்)

ஊரெழு கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகவேள் ஜெயசிறி அவர்கள் நேற்று *(23.03.2019)* சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கருணாகரன் முருகவேளின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான இரத்தினம் - திரவியம் தம்பதிகளின் மூத்த மகளும் கருணாகரன் - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும் கிருஷாந் (நீர்ப்பாசனத் திணைக்களம்), தனுஷாந் (ஆசிரியர் - திருக்குடும்ப கன்னியர் மடம்), நிரூஜா, நிதர்சன், நிலக்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மலரவனின் (தேனு களஞ்சியம்) அன்பு மாமியும் உதயசூரியன், ஜெயரஞ்சிதம், விஜயசூரியன், ஜெயகௌசலா, ஜெயசிலோசனா, கமலசூரியன் (பிரான்ஸ்), ஜெயசித்திரா (கனடா), விமலசூரியன், ஜெயநிலா (ஜேர்மன்), றமணசூரியன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரதீஸ்வரன், செல்வம், ரவிச்சந்திரன், தயாளன், சாந்தி, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று *(24.03.2019)* ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5835)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:- குடும்பத்தினர்
0772365382, 0772487148

## மரண அறிவித்தல்



திருமதி

### தையல்நாயகி செண்பகவரத சேனாதிராசா

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரம், முடிப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் கந்தர்மடம், குமாரசாமி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி செண்பகவரத சேனாதிராஜா அவர்கள் நேற்று *(23.03.2019)* சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:-
077 8456481, 0779905565

தகவல்:
செ. சத்தியன் (மகன்), செ. சயந்தன் (மகன்), சு. விபூசனி (மகள்)

## மணமகள் தேவை

பிறப்பு -1985-07-07 யாழ்.
இந்து (கௌரவம்)
நட்சத்திரம்- சதயம்
உயரம் - 5' 6"
கி.பா-42
சூரி, செவ் 3இல்
தகைமை-பொறியியலாளர் அரச தொழில்
எதிர்பார்ப்பு- தகுந்த மணமகள் தேவை (8051)

**T.P. NO- 077 025 5934**
**077 348 6008**


# தந்திரோபாயமாக சு.கவின் வேட்பாளரை தெரிவு செய்வோம்

## திலங்க சுமதிபால தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பின், தமது கட்சியின் வேட்பாளரை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தந்திரோபாயமாக மேற்கொள்ளப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

20 விடயங்கள் தொடர்பாக முன்வைத்த யோசனைகளை ஏனைய கட்சிகளுடன் பேசி கொள்கை ரீதியான இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்போம்.

இரண்டு கட்சிகளுக்கு இடையிலான மூன்றாவது சுற்று பேச்சுவார்த்தை ஏப்ரல் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தற்போதைய அரசாங்கம் முன்னோக்கிச் செல்ல முடியாத நிலைமையை எதிர்நோக்கியுள்ளது. இதனால், மக்கள் புதிய அரசாங்கத்தையும் புதிய நாட்டையும் எதிர்பார்த்துள்ளனர்.

புதிய நாடாக இலங்கையை மாற்றியமைக்க தேவையான பின்னணியை உருவாக்கும் பொறுப்பு உள்ளது. இரண்டு கைகளையும் நீட்டி ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

பொதுஜன பெரமுனவுடன் மூழ்கிப் போன அனைவரையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணையுமாறு அழைப்பதாகவும் சுமதிபால மேலும் தெரிவித்துள்ளார். (இ)


**'அரியாலை மக்களின் உணர்வுடன் கலந்த உலகச் சரித்திர புகழ்மிக்க வரலாற்றுச் சாதனைப் பெருவிழா'**

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா- 2019

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**



அரியாலை நூற்றாண்டு சுதேசியத்தின் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
07.04.2019 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2 மணி
இடம்:- அரியாலை திறந்த வெளி முன்றல்
(உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்திற்கு அருகில்)
- போட்டிகள் A,B,C,D என நான்கு பிரிவுகளும் நடைபெறும்.
- ஒவ்வொரு பிரிவுகளுக்கும் தனித் தனி பரிசில்கள் வழங்கப்படும்.
- நான்கு பிரிவுக்குமான மொத்தப் பணப்பரிசில் ரூபா. 280,000
- பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் 31.03.2019 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

அனுமதிக் கட்டணம் ரூ.1000

அரியாலை நூற்றாண்டு சுதேசியத்தின் "அஞ்சல் ஓட்டப் போட்டி"
(ரிலே காணிவேல்)
2019.04.10 புதன்கிழமை காலை 9 மணிமுதல்
இடம்:- யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு
- பங்குபற்றவிரும்பும் பாடசாலை மற்றும் கழகங்கள் பதிவுகளை ¼ uØï V^ á ¡ D.
- விண்ணப்ப முடிவுத்திகதி 31.03.2019.
- பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.





கராத்தே சுற்றுப்போட்டி 06.04.2019 சனிக்கிழமை 9 மணிமுதல்
இடம்:- அரியாலை பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன் ஆலய திருமண மண்டப வளாகம்.
- பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
- பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி:- 31.03.2019

**மேலதிக விபரங்களுக்கு: 077 617 6988, 077 309 5745**

சுதேசிய திருநாட் கொண்டாட்ட T-20 கிரிக்கட் இறுதிப் போட்டி

இடம்:- யா/ மத்திய கல்லூரி மைதானம்
இறுதிப் போட்டி மற்றும் மூன்றாம் நிலைக்கான போட்டி 06.04.2019 சனிக்கிழமை காலை 9 மணி முதல்



(C-5863)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் — அரியாலை மக்கள் சார்பாக
சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டுவிழாக் குழு.


## இராசி பலன்

**மீனம்:** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மேடம்:** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகைவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு.

**தனுசு:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், தொழில் சார்ந்த பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | | செவ் | ராகு |
| சுக், புத | இராசி பலன் | | |
| | கிரகநிலை | | |
| சனி, குரு, கேது | | சந் | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி
பின்னிரவு 5.23 மணிக்கு
விருச்-சந்

**24.03.2019**
பங்குனி 10, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.43 மணிவரை
சுவாதி முற்பகல் 11.48 மணிவரை
சுபநேரம் 9.16-10.46 மணிவரை
இராகுகாலம் 4.46-6.16 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

# புன்னாலைக்கட்டுவன் மயான விவகாரம்; மேன்முறையீடு செய்ய தவிசாளர் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் மயான விவகாரம் தொடர்பாக மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யத் தீர்மானித்துள்ளதாக வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.தர்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு புன்னாலைக்கட்டுவன் ஜே/208 பிள்ளையான் கட்டு இந்து மயானத்துக்கு எதிராக குறித்த மயானப் பகுதியிலுள்ள மக்களால் மல்லாக நீதவான் நீதிமன்றில் இறந்த மனித உடல்கள் எரியூட்டுவதை தடுக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளரை நீதிமன்றம் அழைத்தபோது 6 மாத காலப்பகுதியினுள் குறித்த மயானத்தில் மின்சாரம் மூலம் தகனம் செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்துவதாக மன்றிடம் தெரிவித்தார்.

இந் நிலையில் குறித்த காலப் பகுதிவரை விறகில் எரியூட்டுவதற்கான அனுமதியை மன்று வழங்கியது.

இந் நிலையில் குறித்த காலப் பகுதி முடிவுற்றும் செயலாளரினால் மன்றில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மின்சார எரியூட்டல் கருவி பொருத்தப்படாமையால் இறுதிச் சட்டங்கை எவ்வாறு செய்வதெனக் கேள்வி எழுப்பிய பொதுமக்கள் கடந்த புதன்கிழமை வலி.தெற்குப் பிரதேச சபை வாயிலைப் பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் வலி.தெற்கு தவிசாளரிடம் கேள்வி எழுப்பியபோது சபை அமர்வுகள் இடம்பெறாத காலத்தில் தான் செயலாளரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் குறித்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த மயானத்தில் மின்சார எரியூட்டல் கருவி பொருத்துவதாயின் ஏறக்குறைய 4 கோடி ரூபா செலவாகும் என்பதால் தமது சபையினால் இத் திட்டத்தை முன்னெடுப்பது கேள்விக்குறியாக உள்ளதாகத் தெரிவித்தார். இந் நிலையில் தமது சபை நிலை தொடர்பில் நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்தும் முகமாக யாழ்.மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (5-10)



வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

# பௌத்தர்கள் இல்லாத வலி.மேற்கில் திரிபீடக கௌரவிப்பு வாரம் இல்லை சபை உறுப்பினர்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

திரிபீடகத்தை உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட திரிபீடகத்தை கௌரவிக்கும் வாரம் வலி.மேற்கு பிரதேச சபையில் அனுஷ்டிப்பதில்லை என எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த வாரத்தில் சபையில் அது தொடர்பான எந்தவொரு நிகழ்வுகளும் நடைபெறவில்லை.

தேரவாத பௌத்த திரிபீடகம் கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் திகதி ஜனாதிபதியால் தேசிய மரபுரிமையாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

அதை உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்தும் நோக்கில் இம்மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரையான நாட்களை பௌத்த திரிபீடகத்தை கௌரவிக்கும் வாரமாக அனுஷ்டிக்குமாறு ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருந்தது.


இந்த வாரத்தில் அனைத்து நிறுவனங்களையும் பௌத்த கொடிகளால் அலங்கரிக்குமாறும் 22 ஆம் திகதி பௌத்த சமய நிகழ்ச்சிகள் மற்றும் தர்ம போதனையை நடத்துமாறும் கூறப்பட்டிருந்தது.

வலி.மேற்குப் பிரதேச சபையின் அமர்வு கடந்த 15 ஆம் திகதி தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது, மேற்படி சுற்றுநிருபம் செயலாளரினால் சபைக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

இதன்போது, வலி.மேற்குப் பிரதேச சபை தமிழர் பிரதேசத்தில் அமைந்திருப்பதால், இங்கு பௌத்தர்கள் எவரும் பணியாற்றாத நிலையில் இங்கு பௌத்த நிகழ்வுகளை நடத்துவதற்கும் சபை அலுவலகத்தை பௌத்த கொடிகளால் அலங்கரிப் பதற்கும் முடியாது என உறுப்பினர் ந.பொன்ராசா கருத்து முன்வைத்தார்.

அவரைத் தொடர்ந்து மேலும் பல உறுப்பினர்கள் இதே கருத்தை முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து இங்கு திரிபீடகத்தை உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தும் வாரத்தை வலி.மேற்குப் பிரதேச சபையில் அனுஷ்டிப்பதில்லை என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (5-9)



"சலுகைகள் அல்ல எம் கோரிக்கை" என தலைப்பிடப்பட்ட பிரசுரங்கள் வடமராட்சியின் சில பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என அடிக்குறிப்பிடப்பட்டுள்ள அப் பிரசுரத்தில் வேலை வாய்ப்பு, இளைஞர்களின் உரிமை, சமூக சமத்துவம், பெண்களின் உரிமை, வறுமையில்லாத வாழ்வு, மக்களின் உரிமை என அதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

# நடைபாதை வியாபாரிகளுக்கு வலி.தெற்கில் அனுமதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கான அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் வலி.தெற்கு பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பகுதியை நிரந்தர வதிவிடமாக கொண்வர்களுக்கு சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய அனுமதி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-10)




## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலக பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக ரி.எம்.செல்வராசா, செயலாளராக பொ.கணேஸ்வரலிங்கம், பொருளாளராக வ.மார்க்கண்டு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# பரு. வைத்தியசாலையில் கண் சிகிச்சை ஆரம்பம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீண்டகாலமாக கண் சிகிச்சைப் பிரிவால் திருப்திகரமான சேவையை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. தற்பொழுது வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி த.குகதாசனின் வழிகாட்டலில் யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சந்திரகுமாரின் ஆலோசனையின் ஆரம்ப கண் சிகிச்சைகள் இந்த வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் நடைபெறுகின்றன. இச் சிகிச்சையானது நேற்று வைத்தியசாலை அத்தியட்சகரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச் சிகிச்சையானது வாரம்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பொதுமக்களுக்கும் சனிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களுக்கும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும். இச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுவதனால் வடமராட்சி பகுதி மக்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-60)

# வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இருந்து வந்த நபர் ஒருவருக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படாத நிலையில் தகரக் குடிசையில் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வருகிறார்.

வன்னியில் இருந்துவந்து கரணவாய் செல்வாபுரம் பகுதியில் வசித்துவரும் விஜயபாகு நிறோஜன் என்பவருக்கே இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை.

அவர் தற்போது கரணவாய் செல்வாபுரம் பகுதியில் உள்ள தகரக் குடிசைக்குள் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வருகின்ற நிலையில் அவருக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும். (5-60)



ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றிய மாநாடு நேற்று முற்பகல் 11 மணியளவில் ஸ்ரீலக்சுமி பிளாசா மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகர கலந்து கொண்டார். இதில் பிரதேசசபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், மகளிர் அமைப்பினர், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

## 500 கிராமங்களை அமைத்து

# ஏற்றுமதி வருமானத்தை 34,000 மில்லியனாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு

## அமைச்சர் தயா கமகே தெரிவிப்பு



(கொழும்பு)

இவ்வருடத்தில் ஏற்றுமதி வருமானம் 17 ஆயிரம் மில்லியனாக உள்ளதுடன் 2020 இல் இதனை இரண்டு மடங்காக 34 ஆயிரம் மில்லியனாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தயா கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த வருட இறுதியில் எட்டரை இலட்சம் பேருக்கு சமுர்த்தி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடத்தில் நாடளாவிய ரீதியில் 20 ஆயிரம் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் விதவைகள் உள்ளனர். எமது அமைச்சு அவர்களுக்கென தனியான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

எமது அமைச்சுக்கு இம்முறை 'வரவு-செலவுத் திட்டத்தில் 87 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாடு பெற்றுக்கொண்டுள்ள கடன்களை மீளச் செலுத்த வேண்டுமானால் நாம் எமது பொருளாதாரத்தில் ஏற்றுமதி வருமானத்தை 50 வீதமாக அதிகரிப்பது அவசியம். இதுவே பிரதமரின் இலக்காகும்.

இந்த வருடத்தில் மாத்திரம் நாம் 17 ஆயிரம் மில். அமெரிக்க டொலரைக் கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது. மேலும் 5 ஆயிரத்து 600 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகச் செலுத்த வேண்டியுள்ளதுடன் 2 ஆயிரத்து 600 டொலர் மில்லியன் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவி பெறுவோர் நாட்டில் 14 இலட்சம் பேர் உள்ளனர். இந்த வருடத்தின் இறுதிக்குள் மேலும் 8 இலட்சம் பேருக்கு சமுர்த்தி உதவி வழங்கப்படவுள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்தன 'ஜனசவிய' திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கடந்த அரசாங்கம் அதனைப் பெயர் மாற்றி நடைமுறைப்படுத்தியது. அத்திட்டம் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அரசியலாக்கப்பட்டிருந்தது. 500 ஏற்றுமதிக் கிராமங்களை அமைத்து ஏற்றுமதித்துறையை முன்னேற்றுவதே எமது இலக்கு என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

## க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம்

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளே அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

பழைமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்
(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848
வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

## வைத்தியம்

நீண்டகாலம் குணமாகாத நோயினால் அவதிப்படுகிறீர்களா? பயம் வேண்டாம், அதி உன்னத பக்க விளைவுகளற்ற அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தரத்தீர்வு கிடைக்க எம்மிடம் வாருங்கள்.

நீரிழிவு, உடல் பருமன் குறைத்தல்/கூட்டுதல்,மூல வியாதி, சுவாச கஷ்டம், மூட்டு வியாதி, முள்ளந்தண்டு நசிவு/நோ, நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகப் பிரச்சினை, சரும நோய்கள், ஆண்மை குறைபாடு, குழந்தையின்மை, தலைமுடி உதிர்வு, கை/கால் விறைப்பு போன்ற எல்லா வகையான நோய்களுக்கும் குறைபாடுகளுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு. முன்பதிவு அவசியம்.

(ஞாயிறு தினங்களில் 6pm-8pm வரை இலவச ஆலோசனை)
தொடர்பு:- Shan's Health Care
T.P:- 077 035 7307, 077 407 2058
(7441)

255, காங்கேசன் துறை வீதி,
கொக்குவில்.

## மணமகள் தேவை

1988ஆம் ஆண்டு பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

T.P : 078 191 7368
(8001)

## வைத்தியர்கள் தேவை

வவுனியாவில் ஆரம்பிக்கப்படவுள்ள பிரபல வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர்.

- * MBBS வைத்தியர்கள்
- * RMP's வைத்தியர்கள்
- * AMP's வைத்தியர்கள்
- * வேலை அனுபவமுள்ள சான்றிதழ்கள் பெற்ற வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள்.

சிறந்த வேதனம் வழங்கப்படும்
(நேரில் பேசி தீர்மானிக்கப்படலாம்)
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
(C-5864)

முகாமைத்துவப் பணிப்பாளர்,
ஆர்கழி தனியார் வைத்தியசாலை,
வவுனியா.
தொலைபேசி இல: 076-6658562

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:கேட்டை 1
கி.பா: 13 ¾
தகைமை/தொழில்:A/L, Computer Technician
எதிர்பார்ப்பு:A/Lபடித்தபெண்
தொ.இ: B/1285

பிறப்பு: 1964 இந்து
நட்சத்திரம்:உத்திராடம் 3
கி.பா: 32 ½ உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L,சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: அரசதொழில் விரும்பத்தக்கது
தொ.இ: B/1290

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா: 10 ¼ உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L,தனியார் நிறுவன முகாமையாளர்
எதிர்பார்ப்பு: A/Lபடித்தபெண்
தொ.இ: B/1318

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:அத்தம் 4
கி.பா: 79 ¼செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L,காசாளர்
எதிர்பார்ப்பு: A/Lபடித்தபெண்
தொ.இ: B/1335

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 49.
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:பட்டதாரி,அரச ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், சைவபோசனம்
தொ.இ: G/3289

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்:உத்தராடம் 1
கி.பா: 65
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: சொந்ததொழில்
தொ.இ: G/3323

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:பூரம் 3
கி.பா: 27 ¾செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA பட்டதாரி, அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரசதொழில் /வெளிநாடு
தொ.இ: G/3345

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 4
கி.பா: 5 ¼
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: சொந்ததொழில்
தொ.இ: G/3352

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக அனைவரும் இணைந்து குரல்கொடுப்போம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமது நியாயமான உரிமைகளுக்காகவும் ஜனநாயக அடிப்படையிலான கோரிக்கைகளுக்காகவும் குரல் எழுப்பிப் போராடுகின்ற அனைத்துத் தரப்பினருக்கும் எதிராக, ஜனநாயக விரும்பிகளை அச்சுறுத்தும் வகையில் இலங்கையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (CTA) கொண்டுவரப்படுகிறது.

ஜனநாயகத்தையும் சட்ட ஆட்சியையும் பாதுகாத்து வருவதாக உரத்துக் கூறிக் கொண்டே ரணில் தலைமையிலான இன்றைய அரசாங்கம் மிக மோசமான காட்டுச் சட்டமாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முன்நிற்கிறது.

பொலிஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் அவர்களது விருப்பு, வெறுப்பிற்கு ஏற்றவாறு இச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏற்றவாறான பரந்த பொருள் கோடல்களை இச் சட்டத்தின் விதிகள் வழங்குகின்றன. தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து வீதிக்கு இறங்கி, நீதி நியாயம் கேட்கும் எவரையும் இச்சட்டத்தின் மூலம் இருபது வருடச் சிறைத்தண்டனை வரை தண்டிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இச்சட்டமூலத்தைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களும் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி நிற்கும் தேசிய இனங்களும் ஒன்றிணைந்து எதிர்த்து, அதனை மீளப் பெறுவதற்கு வலியுறுத்த வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.

1979 ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக ஜே.ஆரின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் (PTA) கொண்டுவந்தது. கடந்த நாற்பது வருடங்களில் அக் கொடூர சட்டத்தால் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெறப் போராடிய தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டனர். இன்றும் நூற்றுக்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் அச்சட்டத்தின் கீழ் நீண்ட பல வருடங்களாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே, இன்றைய ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற மும்முரம் காட்டி நிற்கிறது. இத்தகைய ஒடுக்குமுறைச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கத்திற்கு தமது ஆதரவுக் கரங்களை உயர்த்தி வரும் தமிழ், முஸ்லிம், மலையகப் பாராளுமன்றக் கட்சிகள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றன? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக் காட்டுமிராண்டிச் சட்டத்தை ஆதரிக்கப் போகிறதா? அதேபோன்று மலையகத்தின் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் தமது மக்களுக்குத் தமது புற முதுகுகளைக் காட்டித்துரோகழிழைக்கப் போகின்ற னவா?

எனவே, தத்தமது கோரிக்கைகளுக்காகப் போராடிவரும் தொழிலாளர்களும் ஏனைய உழைக்கும் மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களும் ஒன்றிணைந்து பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வருவதை நிறுத்து என உரத்துக் குரல் கொடுத்துப் போராடுவது அவசியமாகும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# காதல் ரோஜாவைத் தேடிய தயாசிறி

## யாழில் சுவாரசியம்


(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்பு செயற்றிட்ட மகாநாட்டில் கலந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகர எம்.பி.தமிழ் காதல் பாடல் ஒன்றினை முழுமையாகப் பாடி தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பின்னர் தமிழ் சினிமா பாடல்கள் மீது தனக்கு ஆசை எனவும் தான் உங்கள் முன்னால் பழைய தமிழ் பாடல் ஒன்றைப் பாட ஆசைப்படுவதாகவும் கூறி "காதல் ரோஜாவே எங்கே நீ எங்கே, கண்ணீர் வடியுதடி கண்ணே. நெஞ்சுக்குள்ளும் நீ தான், கண்ணீரில் நீ தான்..." என்ற பாடலை மக்களின் கை தட்டலுடன் பாடி முடித்தார். நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# கானாவில் இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

## 60 பேர் பரிதாபமாகப் பலி!





(அக்ரா)

மேற்கு ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான கானாவின் தென் பகுதியில் நேற்று முன்தினம் பேருந்துகள் நேருக்குநேராக மோதிய விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர்.

கானா நாட்டின் தெற்குப் பகுதியில் அண்மையில் கிழக்கு போனோ என்னும் தனி மாகாணம் உருவாக்கப்பட்டது.

இந்த மாகாணத்தின் வழியாகச் சென்ற இரண்டு பேருந்துகள் நேருக்குநேராக மோதிய விபத்தில் 60 பேர் உயிரிழந்ததாக கிழக்கு போனோ பொலிஸ் உயரதிகாரி ஜோசப் அன்ரனி கியாவு தெரிவித்துள்ளார்.

அம்போமா நகரின் அருகே நடந்த இந்த விபத்தில் காயமடைந்த சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

# முதியோர் ஆறுதல் மண்டபம் திறப்பு





(யாழ்ப்பாணம்)

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் அமைக்கப்பட்ட முதியோர் ஆறுதல் மண்டபத்தை வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினத் தினம் அண்மையில் திறந்து வைத்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் றஜீவ், சமூகசேவை உத்தியோகத்தர் வரதபாஸ்கரன், நிர்வாக கிராம அலுவலர் ரவிக்குமார், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்தகுமார், முதியோர் பேரவை செயலாளர் க.பாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (5-60)



நல்லூர் நாயன்மார்க்கட்டு எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராம முன்பள்ளியின் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் இடம்பெற்றது. யாழ்.மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தாவடி செய்தியாளர்)

## புதுவீதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கில் புதிதாக அமைக்கப்பட்ட சங்கனாவத்தை வீதி இன்று 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.16 தொடக்கம் முற்பகல் 10.46 மணிவரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படும்.

இதில் விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஸ், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அ.பரம்சோதி, வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினரும் ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமான தி.கமலநாதன், வலி.கிழக்கு பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ச.காந்தீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## கைக்குண்டுடன் ஒருவர் கைது

(வெலிபென்ன)

வெலிபென்ன, நுகஹலந்த பிரதேசத்தில் வைத்து வெளிநாட்டு தயாரிப்பான கைக்குண்டுடன் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டதுடன், மத்துகம-வெலிகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது டைவர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (இ)

# இலங்கை அரசு நடத்தியது இனப்படுகொலை தான்!

## ஐ.நாவில் கருணாஸ் இடித்துரைப்பு



(ஜெனிவா)

போர்க்குற்றம் தொடர்பான நீதி விசாரணையை இலங்கை அரசு நீர்த்துப் போகச் செய்வதாக, தென்னிந்திய நடிகரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான கருணாஸ் ஐ.நாவில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40 ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில், குறித்த கூட்டத்தில் பார்வையிடும் பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே கருணாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டில் உலகமே நினைத்து பார்க்காத வகையில் தமிழீழத்தில் தமிழ் இனப்படுகொலை நடந்தேறியது. இனப்படுகொலையை தடுத்து நிறுத்த வேண்டிய சர்வதேச சமூகம், தங்களது கடமையில் இருந்து தவறியுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

இனப்படுகொலை நடந்தேறி 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இலங்கை சிங்கள அரசு நடத்தியது இனப்படுகொலைதான் என்பதற்கு பல வகைகளில், அடுக்கடுக்கான ஆதாரங்கள், நேரடி விசாரணைகள் - சாட்சிகள் என அனைத்தும் அடுக்கி வைத்த பிறகும் நீதிக்கான விசாரணைக்கு காலம் கடத்தும் காரணமென்ன? ஆனால் ஐ.நாவின் உள்ளக விசாரணை நீர்த்துப் போகச் செய்வதற்கான அனைத்து வேலைகளையும் பெரும் வலைப்பின்னல் அமைத்து தொடர்ந்து தடுத்து வருகிறது இலங்கை அரசு.

கடந்த 2015 ஆம் ஆண்டு வட அமெரிக்காவின் முன்முயற்சியால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்படி, சிங்கள அரசு தன்னைத் தானே விசாரித்துக் கொள்ளும் பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமெனக் கோரியது. 2017 ஆம் ஆண்டு வரை அது அமைக்கப்படவில்லை.

எனவே, இரண்டாண்டு கால அவகாசமும் வழங்கப்பட்டது! ஆனால் இப்போது மீண்டும் இரண்டாண்டுகள் இலங்கைக்கு காலஅவகாசம் ஏன் வழங்க வேண்டும்.

சர்வதேச சிறப்பு குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவுதலே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான வழிமுறையாகும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

இலங்கைக்கு மீண்டும் கால நீட்டிப்பு வழங்கப்படக்கூடாது. இலங்கை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு, அல்லது போர்க்குற்றப் புலன் விசாரணைக்கென்று இலங்கைக்காக அமைக்கப்படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டோரின் துயரம் குறித்தும், ஏனைய சர்வதேச மனித உரிமை, மனித நேயச் சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக்கொரு முறை அறிக்கையளிக்கும் பொறுப்பில் இலங்கைக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும்.

இன அழிப்புச் சான்றுகளை அழியவிடாமல் காக்க ஒரு நடுநிலையான பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கப்படவேண்டும். இலங்கையில் நடைபெற்றது வெறும்போர்க்குற்றமோ மனித உரிமை மீறலோ மட்டுமல்லாது அதுதிட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்பதை ஐ.நா. பொது சபை அறிவிக்க வேண்டும்.

சர்வதேச விசாரணையும் பொது வாக்கெடுப்புமே தமிழ் மக்களுக்கான ஒரேதீர்வு. நீதிக்கான மனித நேயக்குரலை இந்த ஐ.நா. அறமன்றம் ஓங்கி உயர்த்தி இவ்வுலகுக்கு உரைக்கும் என்று உறுதியாக நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பேருந்து திடீரென தீப்பிடித்ததில் 26 பேர் உடல் கருகி உயிரிழப்பு

## 28 பேர் படுகாயம்; சீனாவில் சோகம்

(பீஜிங்)

சீனாவில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பேருந்து ஒன்று திடீரென தீப்பிடித்ததில் 26 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகம் தகவலை வெளியிட்டுள்ளது.



சீனாவின் ஹூனான் மாகாணம் சாங்தே நகரில் 50 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளுடன் நேற்று முன்தினம் மாலை பேருந்து ஒன்று நெடுஞ்சாலையில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தபோது பேருந்தின் ஒரு பகுதியில் தீப்பிடித்தது. வேகமாகச் சென்றதால் காற்றின் வேகம் காரணமாக சிறிது நேரத்தில் பேருந்து முழுவதும் தீப்பரவியுள்ளது.

தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து கடுமையாகப் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் 26 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

28 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக இருவரைக் கைது செய்த பொலிஸார், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ)

## கலாசார மண்டபத்தை இயங்க வைக்க அரச அதிபரிடம் மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

பருத்தித்துறை ஆத்தியடியில் அமைக்கப்பட்டு இன்னும் பதினைந்து வீதமான வேலைகள் முடிக்கப்படாத நிலையிலுள்ள கலாசார மண்டபம் தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு மண்டபத்தை இயங்க வைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு யாழ்.அரச அதிபர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் பருத்தித்துறை ஆத்தியடியில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு 85 வீதமான வேலைகள் நிறைவடைந்த நிலையிலுள்ளது.

இதனால் கலாசார சீரழிவுகளும் விரும்பத்தகாத செயல்களும் நடைபெறுவதாக பொது மக்களால் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் இது சம்பந்தமான வேலையை பூரணப்படுத்தி குறித்த மண்டபத்தில் கலை, கலாசார நிகழ்வுகளை நடத்த உதவி புரியுமாறும், இது தொடர்பில் சகலதரப்பினருடனும் கலந்துரையாடித் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு மண்டபத்தை இயங்க வைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு யாழ்.அரச அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# மேலும் 27 வகையான மருந்துகளின் விலை விரைவில் குறைக்கப்படும்-ராஜித



(ஜாஎல)

எதிர்வரும் நாட்களில் மேலும் 27 வகையான மருந்துகளின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக ஏழு பில்லியன் ரூபா அந்நியச் செலவணியை மீதப்படுத்திக் கொள்ள முடிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஜாஎல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விலை குறைக்கப்பட்ட மருந்து வகைகளின் எண்ணிக்கை 100 ஆக அதிகரிப்படவுள்ளதாக அமைச்சர் அண்மையில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஐ.தே.க.அமைப்பாளராக மேர்வின்



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, ஐக்கிய தேசியக் கட்சியின் கதிர்காமம் தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்படவுள்ளார்.


இது சம்பந்தமான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கதிர்காமம் தொகுதியின் அமைப்பாளராக பதவியேற்கவுள்ளதால், மேர்வின் சில்வா, கதிர்காமத்தில் தனது செயற்பாடுகளை அதிகரித்துள்ளார். அத்துடன் மேர்வின் சில்வா அண்மையில் கதிர்காமம் கந்தன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கங்களில் அமைச்சராக பதவி வகித்த மேர்வின் சில்வா. அண்மைய காலமாக மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரைக் கடுமையாக விமர்சித்து வருவதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்துப் பேசி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

மறைந்தார் மாண்பு



ஆறுமுகநாவலர் வழியில் சைவத்தின் காவலனாய்த் திகழ்ந்த சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் 01.03.1949 ஆம் ஆண்டு சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதியருக்கு பிறந்தார். குப்பிளான் விக்னேஸ்வர மகா வித்தியாலயத்திலும் யாழ். இந்துக்கல்லூரியிலும் கற்று 1971 ஆம் ஆண்டு எட்டியாந் தோட்டையில் ஆசிரிய நியமனம் பெற்றார்.

1977 ஆம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி 1988 ஆம் ஆண்டு யாழ்.இந்துக்கல்லூரியில் கற்பிக்கும் காலத்தில் நல்லாசிரியராக தொழிற்பட்ட அன்னாரை பலாலி ஆசிரிய கலாசாலைக்கு ஆசிரிய மாணவருக்கு விரிவுரையாற்ற அழைத்தனர். அங்கு விரிவுரையாளராயிருந்து உப அதிபராக பதவி உயர்வு பெற்றார். இவரது திறமைகளைக் கண்டு முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தம் திணைக்களத்திற்கு உதவிப் பணிப்பாளராக நியமித்தார்.

சைவ சமயத்தில் பக்தி கொண்டது மட்டுமன்றி சைவசமயத்தை ஆழமாகக் கற்றுத் தேறியவர் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்று பின்னாளில் வருகை தரு விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். சைவ தமிழ் சைவசித்தாந்த அறிவுப்புலமை மிக்கவர். யாழ்ப்பாணத்தில் இவரைப் போல் திருமந்திரத்தை அறிந்தவர்கள் இல்லை எனுமளவிற்கு திருமந்திரத்தை கற்றது மட்டுமன்றி கருத்தரங்குள், சொற்பொழிவுகள், மகாநாடுகளில் பேசியவர். நூல்களை எழுதி வெளியிட்ட பெருமை அன்னாரைச் சாரும்.

சைவாலயங்கள் தோறும் நாவலர் வழியில் உருத்திராட்சம் அணிந்து சைவப் பிரசங்கங்களை 40 வருடமாக நிகழ்த்தியவர். இதனால் சிவத்தமிழ் வித்தகர் திருமந்திரவாரிதி, சைவகாவலன், திருவருள் வாசகர் என இருபதிற்கும் மேற்பட்ட கௌரவ பட்டங்களைப் பெற்றவர்.

ஈழமணித் திருநாட்டில் மட்டுமன்றி கடல்கடந்து லண்டன், கனடா நாடுகளுக்கும் பல முறை சென்று சைவப்பிரசங்கங்கள் ஆற்றியவர். 2016 ஆம் ஆண்டு பிரித்தானிய சைவத்திருக் கோயில் ஒன்றியம் விருது வழங்கிக் கௌரவித்து இலங்கை அரசாங்கம் கலா பூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

50 ஆவது வயதில் திருமுறைச் செல்வம் எனும் நூலை எழுதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியீடு செய்தார். என்றும் காணமுடியாத அளவுக்கு கைலாசபதி கலை அரங்கமே நிறைந்து வழிந்தது. தொடர்ந்தும் 9 நூல்களை எழுதி இலங்கையின் பல பாகங்களிலும் வெளியீடு செய்துள்ளார். கனடா இந்து சமயப் பேரவையினர் மறுபதிப்பு செய்து வெளியிட்டுள்ளனர். ஆறுமுக நாவலர் வழியில் சைவப்பிரசாரகர் பலரை தன் வழியில் உருவாக்கினார்கள். இன்றும் செ.கந்த சத்தியதாசன், ச.லலீசன, கு.பாலசண்முகன் ஆகியோர் சைவப்பிரசங்கங்கள் நிகழ்த்தி வருகின்றார்கள்.

சிவத்தமிழ் வித்தகர் இழப்பு சைவத்திற்கும் தமிழுக்கும் பேரிழப்பு.

சைவப் புலவர்
செ.கந்தசத்தியதாசன்.

# மனைவி தாக்கி கணவன் பலி!

(பன்னிப்பிட்டிய)

கொட்டாவ, பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் அவரது மனைவியால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மனைவியுடன் குறித்த நபருக்கு கருத்து மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.


பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குற்றம்சாட்டப்பட்ட பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொட்டாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

## ஜனாதிபதித் தேர்தலில்

# எதிரணியினருக்கு தோல்வி நிச்சயம்

## ரஞ்சன் நம்பிக்கை



(கொழும்பு)

எதிர் அணியினர் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வாறான வேட்பாளரைக் களமிறக்கினாலும் அவர் நிச்சயமாக வெற்றி கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்த நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, கோத்தபாய ராஜபக்ஷவால் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப்பெற்றுக்கொள்ள முடியாது என்றும் தமிழர்கள் அவருக்கு ஆதரவினை வழங்க மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களின் விருப்பத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய வேட்பாளரையே நாங்கள் இம்முறை வேட்பாளராக களமிறக்குவோம் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு அஞ்சல் திணைக்களத்தில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு அஞ்சல் திணைக்களத்தில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள தனது அமைச்சின் மூலம் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சின் ஏற்பாட்டில் அஞ்சல் திணைக்களத்தில் சிற்றூழியர்களுக்கான பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. இதில் மலையக இளைஞர், யுவதிகளையும் இணைத்துக்கொள்வது தொடர்பில் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சுடன் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக்கான அஞ்சல் திணைக்களத்தின் சிற்றூழியர் சேவையின் தேவைக்காக தினசரி சம்பள அடிப்படையில் கடமைகளை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2019.04.01 முதல் பிரதேச அத்தியட்சகர் பிரிவு மட்டத்தில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு ஊவா மாகாணம், மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் உட்பட மலையகத்தின் அனைத்து இளைஞர், யுவதிகளும் விண்ணப்பிக்க முடியும். இச்சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வில்பத்து வனப்பகுதியில் ஓர் அங்குலத்தையேனும் இதுவரை வழங்கவில்லை

## றிசாத் மீதான குற்றச்சாட்டு அர்த்தமற்றது–அமரதுங்க

(கொழும்பு)

எமது அரசாங்கத்தில் வில்பத்து வனப் பகுதியில் ஓர் அங்குலத்தையேனும் இதுவரை வழங்கவில்லை என வனப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் மீது குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. ஏனெனில், எமது அரசாங்கத்தில் அவருக்கு வில்பத்து வனப் பகுதி இடத்தில் எதனையும் வழங்கவில்லை.

நான் வனப் பகுதியைப் பொறுப்பேற்றதன் பின்னர் அமைச்சர் றிசாத் பதியுதீன் என்னிடம் வில்பத்து வனப் பகுதியிலிருந்து முஸ்லிம்களுக்கு விடுவித்துத் தருமாறு கேட்கவும் இல்லை. கேட்டாலும் நாம் வழங்கப் போவதுமில்லை.

வில்பத்து வனப் பகுதியில் ஒரு அங்குல நிலத்தைக் கூட யாருக்கும் வழங்கப் போவதில்லை. கடந்த அரசாங்க காலத்திலேயே இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 110 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 150 | 200 |
| தக்காளி | 80 | 50 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 | 60 |
| கோவா | 60 | 70 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 15 | 40 |
| புடோல் | 80 | 70 | 50 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 65 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 70 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 140 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 60 | 60 |
| கீரை–1பிடி | 30 | 50 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 50 |
| இராசவள்ளி | 140 | 130 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 120 | 70 | 110 | 120 |
| முள்ளங்கி | 50 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 15 | 30 |
| ஈரப்பலா | — | — | 70 | 80 |

# மாகாண சபை தேர்தல் ஒத்திவைப்பு அரசாங்கத்திற்கு எதிராக வழக்கு

## பாக்கியசோதி எச்சரிக்கை



(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எச்சரித்துள்ளார்.**

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் அமைச்சர், தேர்தல் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த வழக்குத் தொடரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாதது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. அத்துடன் இதன் ஊடாக நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் ஒன்றின் கீழ் மக்கள் இவ்வாறான ஒன்றை எதிர்பார்க்கவில்லை.

இது முற்றிலும் ஜனநாயகத்திற்கு எதிரானது எனவும் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

ஏற்கனவே 6 மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிந்துள்ளதுடன் அவை ஆளுநர்களின் கீழ் இயங்கி வருகின்றன.

ஏனைய மூன்று மாகாணங்களின் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முடிவடையவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# அனைத்து இன மக்களும் ஏற்கும் ஒருவரை நாம் களமிறக்குவோம்

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து வாசு

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வா்சுதேவ நாணயக்கார, அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளும் வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக களமிறக்குவோம்.



அத்துடன் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அவரவர் தனிப்பட்ட கருத்துக்களாகும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# தண்டவாளத்தில் சடலம்



(கொழும்பு)

கொழும்பு - புத்தளம் மார்க்க லுனுவில - தும்மோதர ஆகிய பிரதேசங்களுக்கிடையிலான ரயில் தண்டவாளத்திலிருந்து நபர் ஒருவரின் சடலத்தை நேற்றுக் காலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கிரிமெடியான பிரதேசத்தைச் சேரந்த 31 வயது நபரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் சிலாபம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தூக்குத்தண்டனை அமுல்படுத்தப்படாது

## மைத்திரிக்கு எதிராக மேர்வின்

(கண்டி)

பௌத்த சமய நூலான திரிபீடகத்தை தேசிய உரிமையாக அறிவித்ததால் நாட்டுக்கோ, மக்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி திரிபீடகத்தை தேசிய உரிமையாக்குவதற்கு பதிலாக அதனை நெருக்கமானதாக மாற்றியிருக்க வேண்டும்.

திரிபீடகத்தை பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளித்து, மாணவர்களுக்கு வழங்கி சங்க ஆணை பிறப்பித்திருக்க வேண்டும்.

அதனை விடுத்து, ஜனாதிபதி பலனளிக்காத நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

தூக்குத் தண்டனையை அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதி கூறுவது மற்றுமொரு வாய் வார்த்தை மட்டுமேயன்றி அது செயற்படுத்தப்படாது என்றும் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# வறுமை ஒழியும்வரை பொருளாதார வளர்ச்சி குறித்து மகிழ முடியாது

## கோத்தபாய கூறுகிறார்

(கொழும்பு)

வறுமை முழுமையாக ஒழியும்வரை அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு எவரும் மகிழ்ச்சியடைய முடியாது என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நாம் எப்போதும் அடித்தட்டு மக்களை முன்னேற்ற வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

புள்ளிவிபரங்கள் அடிப்படையில் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி குறித்துப் பேசினாலும், வறுமை ஒழியும் வரை இவற்றை வெற்றி என்று எம்மால் ஒருபோதும் கூறமுடியாது.


நாம், இதற்காகத்தான் கடந்த காலங்களில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டோம். அரசாங்க வேலையை மட்டும் வழங்காமல், தொழில் வாய்ப்புக்களை அதிகமாக ஏற்படுத்திக் கொடுத்தோம்.

இதற்கு முதலாவதாக எமது கல்வி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இது எதிர்காலத்தில் அமையவுள்ள அரசாங்கத்துக்கு சவாலான ஒன்றாகவே இருக்கிறது.

விவசாயத் துறையை மாணவர்களிடத்தில் ஊக்குவிக்க வேண்டும். இதுவும் எமது சமூகத்துக்கான கட்டாயமான தேவையாகவே இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# ஜெனிவா தீர்மானம் குறித்து பலருக்கு எதுவும் தெரியாது

## அமைச்சர் அர்ஜுன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய நரடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கை குறித்த தீர்மானம் பற்றி பேசும் பலருக்கு அது பற்றி எதுவும் தெரியாது என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானம் பற்றி கதைக்கும் பலர் அதைப் பார்த்தது கூடக் கிடையாது.

நாட்டுக்கு தீங்கு ஏற்படக்கூடிய விடயங்களுக்கு நாம் ஒரு போதும் ஆதரவளிக்கப் போவதில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானம் தேர்தலை இலக்கு வைத்தே பேசப்படுகின்றது.

இன்னும் ஒரு மாதம் கடந்து விட்டால் அது பற்றிப் பேசப்பட மாட்டாது என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ)

# பலத்த காற்றால் 18 வீடுகள் சேதம்



(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடுகல பிரதேசத்தில் பலத்த காற்று வீசியதில் 18 வீடுகள் சேதமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் மழை பெய்து கொண்டிருந்த வேளையில் திடீரென பலத்த காற்று வீசியதாகவும், இதன்போதே 18 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# புதையல் தோண்டிய நால்வர் கைது புதையல் பொருட்களும் கைப்பற்று

## காஞ்சிரமோட்டை கிராமத்தில் புளியங்குளம் பொலிஸார் அதிரடி



(குருமன்காடு)

வவுனியாவில்புதையல்தோண்டிய நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் புதையல் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு மருதோடை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரமோட்டை கிராமத்தில் புதையல் தோண்டிய நால்வரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புளியங்குளம் பகுதியில் புதையல்களுடன் ஆட்டோவில் சென்ற நால்வரை புளியங்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கைது செய்து அவர்களிடமிருந்த புதையல் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நான்கு நபர்கள் காஞ்சிரமோட்டை காட்டுப்பகுதியில் பெக்கோ இயந்திரத்தின் மூலம் புதையல் தோண்டியுள்ளனர்.

இதன்போது பழைய காலத்து புத்தர் சிலை, கல்வெட்டு, கலசம், விளக்கு மற்றும் மலையாள மாந்திரிக புத்தகங்கள் போன்ற பல பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றிய பொருட்களை ஆட்டோவில் கடத்திச் செல்ல முற்பட்ட சமயத்தில் புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற புளியங்குளம் பொலிஸார் குறித்த நான்கு நபர்களை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்த வாகனம் மற்றும் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் நேற்றைய தினம் வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.அனுர அபயவிக்கிரம தலைமையில் அவரது அலுவலகத்தில் ஊடகவியலாளருக்கு காண்பிக்கப்பட்டது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய 35,35,40,42 வயதுகளையுடைய தலவாக்கலை, திருகோணமலை, மட்டக்களப்பு, நெடுங்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களிடம் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் பெக்கோ, ஆட்டோ போன்றவற்றை வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், புதையல் பொருட்கள் என சந்தேகிக்கப்படும் பொருட்களை தொல்பொருள் திணைக்களகத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர். (2-250)

## சர்வதேச பெண்கள் தினம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைக்கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

"பெண்களின் குரல்" எனும் தலைப்பில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் 12 தலைப்புக்களில் கருத்துரைகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பெண்களாக எதிர் கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைக்கப்பட்டது. (2)

## 'மாநிலம் பயனுற வாழ் மகளிர்' முல்லை.மாவட்ட செயலருக்கு விருது



(கண்டாவளை)

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச மகளிர்தின விழாவில் மாதரறம் மாண்புற சோராது செயலாற்றும் செவ்வியத்தை பாராட்டி "மாநிலம் பயனுற வாழ் மகளிர்" எனும் விருதினை பெற்றுக்கொண்ட மாவட்ட செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் நிகழ்வு கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்வுக்கு மேலதிக மாவட்ட செயலாளர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மி.யேசு ரெஜினோல்ட் வாழ்த்துரை வழங்கி கௌரவித்தார். (2-315)

## யாழ்.பல்கலை.பொறியியல் பீடத்தில் இலவச குறும்பாட நெறி நிகழ்வில் இந்தியப் பேராசிரியர்கள் பங்கேற்பு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடமும் இந்தியத் தொழில்நுட்ப நிறுவகமும் இணைந்து நடத்தும் "உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் செயற்கைப் புவியிழையின் பிரயோகம்" எனும் தலைப்பிலான குறும்பாட நெறி நாளை 25 ஆம் மற்றும் மறுநாள் 26 ஆம் திகதிகளில் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தில் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

இதில் நாளை 25 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரையும் மறுநாள் 26 ஆம் திகதி தொடக்கம் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையும் மேற்படி குறும்பாட நெறி இடம்பெறவுள்ளது.

இந்தியத் தொழில்நுட்ப நிறுவகத்தைச் சேர்ந்த (IIT) குடிசார் பொறியியல்துறைப் பேராசிரியர்களான ஜி.வி.ரா.எம்.வெங்கட்ராமன் மற்றும் அமிற் பிரசாண்ட் ஆகியோர் பாடநெறியின் வளவாளர்களாகச் செயற்படவுள்ளனர்.

குறித்த பாடநெறியின் நோக்கம் பங்கேற்பாளர்களுக்குப் புவிசார் பொருட்கள் வடிவமைப்பு மற்றும் கட்டுமான அடிப்படைகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதும், சர்வதேச மற்றும் தேசிய சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்துவதுமாகும்.

சிக்கனமான, நீண்டகாலம் நிலைக்கக் கூடிய குடிசார் பொறியியல் துறை மற்றும் நீர் வளங்கள் சார்ந்த கட்டமைப்புக்களில் பலதரப்பட்ட செயற்கைப் புவியிழைகளில் பொறியியலைப் புரிந்து கொள்ளுதல், ஆதாரக் கட்டுமானங்கள், மென்மையான தரை மீதான கட்டுமானங்கள், வடிகால், வடிகட்டுதல், நடைபாதை, அணைகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றின் வழிகாட்டல், தேவைப்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல், அவற்றை அமைப்பதற்கான கட்டுமான நடவடிக்கைகளைச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செவ்வனே மேற்கொள்ளலுமாகும்.

இந்தப் பாடநெறியில் சிரேஷ்ட தொழில் வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், குடிசார் பொறியியல்துறை மாணவர்கள் மற்றும் துறைசார் ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து கொண்டு பயன்பெற முடியும். மேற்படி பாடநெறி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் குடிசார் பொறியியல் துறைத் தலைவர் கலாநிதி என்.சதிபரனின் 077 492 9868 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9)




## முகாம் கழிவுகளை குவிப்பதால் பாடசாலைச்சூழலில் துர்நாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியில் முகாம் அமைத்துள்ள படையினரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த முகாம் கழிவுகளை ஓர் இடத்தில் குவிப்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதே வேளை பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் அவற்றை எரிப்பதனால் பாடசாலை சூழல் மாசடைவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர். பாடசாலைபிரதான வாயில் அமைந்துள்ள பகுதியில் இவ்வாறு துர்நாற்றம் காணப்படுவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

விசேட பாடசாலை நாளான நேற்றையதினம் சனிக்கிழமை பாடசாலைக்கு பெற்றோர் சென்றிருந்த சமயம் நச்சுமருந்து கலந்த வித்தியாசமான காற்றை சுவாசித்தது போன்ற உணர்வு காணப்பட்டதாக பெற்றோர் பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

பாடசாலை சூழலை மாசுபடுத்தும் வகையில் படையினர் முகாம் அமைத்துள்ள பகுதியில் அண்மை நாட்களாக துர்நாற்றம் வீசுகின்றமை தொடர்பில் நானும் உணர்ந்துள்ளேன்.

பல பெற்றோர், மாணவர்கள் இவ்விடயம் தொடர்பில் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் பெற்றோரிடம் தெரிவித்த பாடசாலை அதிபர், இவ்விடயம் தொடர்பில் மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களிற்கு தரமான பாடசாலை சூழலை ஏற்படுத்தி தருமாறும், படையினர் வசமுள்ள பாடசாலை காணியை விடுவித்து பௌதீக வளபற்றாக்குறைகளை சீர் செய்து தருமாறும் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-315)

## ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் நினைவேந்தலும் நூல் அறிமுகமும்



(கண்டாவளை)

உயிரிழந்த ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தலும், நூல் அறிமுகமும் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி ஊடகவியலாளர்களும், நண்பர்களும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் ஊடகவியலாளர் கஜன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் "ஜெனிவா மாயைகளும், உண்மைகளும்" எனும் தலைப்பில் நிலாந்தன் அரசியல் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

குறித்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (2-315)

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும்
ஆட்டி விடுவதுபோல...

*- தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பன்னாட்டு நீதிமன்றுக்கு கொண்டு போவீர்களோ!

இணை அனுசரணைக்கு இணங்கி இலங்கை அரசு கையொப்பமிட்டால், அது கலப்பு நீதிமன்றை ஏற்றுக்கொள்வதாகவே பொருள்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

கலப்பு நீதிமன்றுக்கு உடன்பட மறுத்தால், பன்னாட்டு நீதிமன்றுக்கு எடுத்துச் செல்வோம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நல்லது. தமிழனத்தின் அழிப்பை; வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை; ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனதை; போர்க்குற்றம் நடந்ததை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றுக்குக் கூட்டமைப்பு எடுத்துச் சென்றால் அது வரவேற்கத்தக்கது.

ஆனால் அது நடக்குமா? உங்களால் அது முடியுமா? என்பதுதான் நம் கேள்வி.

இலங்கையில் நடந்த போர்க்குற்றத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்வோம் என்று இப்போது கூட்டமைப்பினர் மார்தட்டுகின்றனர்.

இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்குவதற்கு மறைமுகமாக உதவி செய்துவிட்டு, பாராளுமன்றத்தில் வைத்து அப்படிச் செய்வோம். இப்படிச் செய்வோம் என வீராப்புப் பேசுவது உங்கள் மனச்சாட்சிக்கு ஏற்புடையதா? என்பதை கூட்டமைப்பே தீர்மானிக்க வேண்டும்.

வெளிநாட்டு நீதிபதிகளும் பங்கேற்கக் கூடியதான கலப்பு நீதிமன்றை இலங்கை அரசு நிராகரித்தால், பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றுக்குக் குறித்த விவகாரத்தைக் கொண்டு செல்வோம் என்று கூறுகின்ற கூட்டமைப்பினர்,

இதுவரைக்கும் அப்படியொரு முடிவை எடுக்காததற்குக் காரணம், வன்னியில் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை காணாதா? அல்லது காணாமல்போனவர்களின் எண்ணிக்கை போதாதா? அல்லது தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைத்துவிட்டதா என்ன?

செய்ய வேண்டியதை செய்யாமல், கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தாமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு ஈனம் செய்து விட்டு, இப்போது அரசாங்கத்தை எச்சரிப்பதென்பது நகைப்புக்குரியது.

அன்புக்குரிய கூட்டமைப்பினரே! கலப்பு நீதிமன்றை நிராகரிக்கிறோம் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் திலக் மாரப்பன ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்தொடரில், பன்னாட்டுப் பிரதிநிதிகள் முன்னிலையில் கூறியுள்ளார்.

ஆக, திலக் மாரப்பன கூறியதை மறுக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா ஆணையர் அல்லது வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடையதாகும். ஆனால் அவர்கள் திலக் மாரப்பனவின் உரையை நிராகரிக்கவில்லை. நிலைமை இதுவாக இருக்கையில்,

கலப்பு நீதிமன்றை நிராகரிப்பதாக திலக் மாரப்பன இலங்கையில் கூறியதுபோல கூட்டமைப்புக் கருத்துக்கூறுவது எந்த வகையிலும் பொருத்தமற்றதும் தமிழ் மக்களை ஏமாற்றுவதுமான செயலாகும்.

# ஜெனிவாவில் இலங்கை குறித்த பிரேரணை துரதிர்ஷ்டவசமானது

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு விடயமாகும் என்று இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளராக களமிறங்க தயாராகவே உள்ளதாகவும் அவர் கூறினார். கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க நான் தயாராகவே இருக்கிறேன். மேலதிக விபரங்களை எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடமே கேட்க வேண்டும்.

இப்போதைய நிலைமையில், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை விட, ஸ்திரமான அரசாங்கத்தை எவ்வாறு ஸ்தாபிக்க வேண்டும் என்பதே முக்கியமானதொரு விடயமாகும்.

கொள்கை ரீதியாக முதலில் நாம் ஒன்றிணைய வேண்டும். மேலும், ஜெனிவா தொடர்பாகவும் கருத்து வெளியிட வேண்டும்.

அதாவது, உலகிலுள்ள முக்கியமான நாடுகள் பயங்கரவாதத்துக்கு முகம் கொடுத்து அதற்கு எதிராக போரிட்டுள்ளன.

அப்படியான நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிரான தமது போராட்டங்களை வெற்றிகரமான ஒன்றாகவே இதுவரை கருதுகின்றனர்.

ஆனால், உலகிலுள்ள மிகவும் மோசமான பயங்கரவாத அமைப்பை நாம் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் தோற்கடித்துள்ளோம்.

இந்நிலையில், இந்த பயங்கரவாதத்தை தோற்கடித்த தரப்பினருக்கு எதிராகவே சர்வதேசத்தினால் தற்போதுபிரேரணையொன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

இது மிகவும் பக்கச்சார்பானதும் துரதிர்ஷ்டவசமானதுமான ஒரு விடயமாகவே நாம் கருதுகிறோம். நாம் யுத்தத்தை மட்டும் வெற்றி கொள்ளவில்லை.

யுத்தத்துக்கு பின்னர் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டோம். இவை அனைத்தும் மறக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் எந்தவொரு தரப்புக்கும் நன்மையளிக்கும் வகையில் செயற்படவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

# வடக்கு - கிழக்கு பாடசாலைகளை மத்திய அரசிடம் வழங்குவது தவறு

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கிலிருந்து எந்தவொரு பாடசாலையையும் மத்திய ஆட்சியின் கீழ் தேசிய பாடசாலையாக எடுக்கக் கூடாது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "தமிழ் மக்கள் முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென போராடி வருகின்றனர்.

மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்கு கீழ் பாடசாலைகள் வருகின்றன. அவற்றை மீண்டும் மத்திய அரசிடம் வழங்குவது தவறானதாகும்

தமக்கு தேவை ஏற்படின் பாடசாலை நிர்வாகம், இராஜாங்க அமைச்சர்களிடம் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்குமாறு கேட்பது சரியானதாகும். அதிகார பகிர்வுக்காக நாம் போராடி வரும் நிலையில், பாடசாலைகளை மத்திய அரசிடம் வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

# 6 பவுண் தாலி மற்றும் காப்பு கோண்டாவில் பகுதியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் 6 பவுண் தாலிக்கொடி மற்றும் காப்பு என்பன திருட்டுப் போயுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் உள்ளவர்கள் உறவினர் ஒருவரின் திருமண வீட்டுக்குச் செல்வதற்காக கணவன் வெளியில் சென்றுள்ள நிலையில் மனைவி திருமண வீட்டுக்கு செல்வதற்கு புடைவைகளை தயார்படுத்திக் கொண்டிருந்த வேளை முகத்தினை கறுப்புத் துணியினால் கட்டிக் கொண்டு வீட்டின் உள்ளே வந்த திருடன் ஒருவரைக் கண்டு குறித்த பெண் அதிர்ச்சியில் மயங்கி கீழே விழுந்துள்ளார்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி உள்ளே நுழைந்த திருடன் அங்கு மறைத்து வைக்கப்பட்ட 6 பவுண் தாலிக்கொடி மற்றும் காப்பு என்பவற்றை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் தடயவியல் பரிசோதனைகளை மேற்கொண்டதோடு விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-78)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பெரிய கரைசல், புதுககாமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# நடமாடும் சேவை

(கொடிகாமம்)

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்குரிய வயற் காணிகளுக்கான ஏக்கர் வரியினை அறவிடுவதற்கான நடமாடும் சேவை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 25ஆம் திகதி திங்கட்கிழமை உசன் கமக்கார அமைப்பிற்கு உசன் பொது நோக்கு மண்டபத்திலும் வரணி வடக்கு கமக்கார அமைப்பிற்கு கும்பிட்டான் பிள்ளையார் கோவில் முன்பாகவுள்ள மண்டபத்திலும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாவற்காடு கமக்கார அமைப்பிற்கு நாவற்காடு பொது நோக்கு மண்டபத்திலும் சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளுக்கு சரசாலை வடக்கு சனசமூக நிலையத்திலும் தாவளை இயற்றாலை பிரிவுக்கு தாவளை இயற்றாலை பொது நோக்கு மண்டபத்திலும் கரம்பகம் கெற்பேலி பிரிவிற்கு கரம்பகம்பொது நோக்கு மண்டபத்திலும் மந்துவில் வடக்கு, கிழக்கு பிரிவுகளுக்கு மந்துவில் வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் மிருசுவில் வடக்கு பிரிவிற்கு மிருசுவில் வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் 27 ஆம் திகதி புதன்கிழமை மட்டுவில் வடக்கு பிரிவிற்கு கணணகை சனசமூக நிலையத்திலும் 28ஆம் திகதி வியாழக்கிழமை எழுது மட்டுவாழ் வடக்கு பிரிவிற்கு எழுதுமட்டுவாழ் வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

குறிப்பிட்ட திகதிகளில் குறித்த பிரிவிற்குரிய விவசாயிகள் மற்றும் வயற்காணி உரிமையாளர்கள் 2019 ஆம் ஆண்டிற்குரிய ஏக்கர் வரியைச் செலுத்துமாறு சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.(இ-10)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- உங்கள் நெறியில் (சமயத்தில்) அநியாயமாக எதையும் மிகைப்படுத்தாதீர்கள்.
- (இறைவனின் அடியார்கள்) செலவு செய்யும் போது வீண்விரயமும், கஞ்சத்தனமும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவு இந்த மிதமிஞ்சிய இருநிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.
- உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால், விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக இறைவன் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை.
- உமது தொழுகையில் உமது குரலை மிக உயர்த்த வேண்டாம் மிகத் தாழ்த்தவும் வேண்டாம். இவ்விரண்டுக்கும் இடையே மிதமான தொனியைக் கடைபிடிக்கவும்.
- உனது நடையில் மிதமான நிலையை மேற்கொள். உனது குரலை சற்றுத் தாழ்த்திக் கொள். திண்ணமாக, அனைத்துக் குரல்களிலும் மிகவும் அருவருப்பானது கழுதையின் குரலாகும்.

# விநாயகர் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி கிழக்கு விநாயகர் விளையாட்டு கழக மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியர் திருமதி இரவீந்திரன் மகேஸ்வரி தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினராக கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் நா.கருணாகரன், கௌரவ விருந்தினர்களாக கைதடி தெற்கு கிராம அலுவலர் செல்வி விஜயசிறி நியூறிசா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ர.அனுராகரன், கைதடி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம், விநாயகர் விளையாட்டுக் கழக செயலாளர் செல்வன் க.தமிழ்ச்செல்வன், உவரி மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி திருமதி முத்துராமலிங்கம் குகனேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்வர். (க-10)

# ஐ.பி.எல்லை துறந்த மலிங்க

உலகக்கோப்பை தொடரில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் மலிங்க ஐபிஎல் தொடரின் மும்பை அணி விளையாடும் முதல் ஆறு போட்டிகளில் விளையாடமாட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வருட ஐபிஎல் சீசனில் மூன்றில் ஒரு பங்கு போட்டிகளில் மட்டுமே மும்பை அணிக்காக ஆட முடியும் எனவும் மீதமுள்ள போட்டிகளுக்கு தான் இருக்க முடியாது.இலங்கை அணிக்காக ஆட செல்வதாக மலிங்க குறிப்பிட்டு விட்டு தனக்கான மாற்று வீரரை தேடிக் கொள்ளுமாறு மும்பை நிர்வாகத்திடம் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

முதலில் ஐபிஎல் தொடருக்காக டெஸ்ட் தொடரிலிருந்து ஓய்வு பெற்றதாக கூறப்பட்ட மலிங்க, தற்போது இலங்கை அணிக்காக ஐ.பி.எல் தொடரை தூக்கி வீசியுள்ளார் என்றே கூறலாம். (க)

## அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட துடுப்பாட்டம்

# கார்மேல் போய்ஸ் அணி சம்பியன்



அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழா திருநாட் கொண்டாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் படத்தை வென்றது.

அரையிறுதியில் கலை ஒளி அணியின் இமாலய இலக்கினை ரகீம்,அஜன்,சுறேந்திரன் போன்றோரின் அதிரடியுடன் வெற்றி கொண்டு இறுதியில் கொலின்ஸ் அணியினை எதிர் கொண்ட கார்மேல் போய்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் 48 ஓட்டங்களை பெற்றது. 49 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல்போய்ஸ் 4.4 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது. அரியாலை சுதேசிய துடுப்பாட்ட கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. கார்மேல் போயஸ் அணி சார்பாக செல்ரன் 26 ஓட்டங்களையும், ரகீம் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக நட்சத்திர வீரர் செல்ரன் தெரிவு செய்யப்படார். (க-ம)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட அஞ்சலோட்ட நிகழ்வுகளுக்கு விண்ணப்பம்கோரல்

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் அஞ்சலோட்டப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

பாடசாலை மற்றும் கழகங்களுக்கிடையில் நடைபெறும் இப்போட்டியில் 12, 14, 16, 18, 20 வயதிற்குட்பட்ட ஆண், பெண்களுக்கான போட்டியாகவும் 20 வயது ஆண், பெண் கலப்பு நிகழ்வாகவும் நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதி, பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் மற்றும் அடையாள அட்டையுடன் சமுகமளிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக ச.சுதேஸ்குமார், 67, சுப்பிரமணியம் வீதி, அரியாலை அல்லது இ.அருளம்பலம், 458, கண்டிவீதிஅரியாலைஆகியோர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். தகவல்களுக்கு 077 617 6988 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும். (க)





தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 2019 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்கான "எல்லே" போட்டிகள் மல்லாகம் ஆர்.டி.எஸ். மைதானத்தில் நடைபெற்றது. பெண்களுக்கான இறுதிப்போட்டியில் சென்சேவியர் இளைஞர் கழகமும் அளவெட்டி கலைவாணி இளைஞர் கழகமும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் சம்பியனாக அளவெட்டி கலைவாணி இளைஞர் கழகமும் 2 ஆம் இடத்தை சென்.சேவியர் இளைஞர் கழகமும் பெற்றுக் கொண்டன. (க-105)





கீரிமலை நகுலகிரி இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நகுலகிரி இளைஞர் கழகத் தலைவர் அ.தர்ஷன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் பொ.ஆதவன், கௌரவ விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர்களான த.துவாரகன், வ.அபிராமி, ர.ரதீஸ்வரன், செ.காயத்திரி, சவாரி சங்கத் தலைவர் கதிர்காமநாதன் மற்றும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-30)

## காணாமல்போன...

களையாவோடை புலோலி கிழக்கை சேர்ந்த விசாலாட்சி சோமஸ்கந்தர் (வயது80) என்ற மூதாட்டியாவார்.

கடந்த புதன்கிழமை வீட்டில் இருந்து வெளியேறிய குறித்த மூதாட்டி நேற்று சனிக்கிழமை காலை மாதனை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சடலமாக காணப்பட்டதை தொடர்ந்து சடலத்தை மீட்ட பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## மனித உரிமை...

தொடர்ந்த யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான செயற்பாடுகளின் முக்கியமானதொரு படிமுறையாக 40(1) தீர்மானத்தைக் கருதமுடியும்.

ஐ.நா தீர்மானத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய கடப்பாடுகளை குறித்த காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற காலவரையறை விதிக்கப்படாமை கவலையளிக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மின்வெட்டு தொட...

நாயக்க தெரிவித்தார்.

மின் உற்பத்தியை விடவும் மின்சாரத்துக்கான கேள்வி அதிகமாக காணப்படுகின்றது. இதனால், இன்னும் 10 நாட்களுக்கு மின்வெட்டு நடைமுறையில் இருக்கும்.

இந்நிலைமையை சீரமைப்பதற்கு பொது மக்களும் தங்களது ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டுகோள் விடுகின்றோம். பயன்பாட்டில் உள்ள குளிரூட்டிகளில் ஒன்றை தற்காலிகமாக செயற்படுத்தாமல் நிறுத்தி வைக்குமாறும், பயன்பாட்டில் உள்ள மின் விளக்குகள் இரண்டை அணைத்து வைக்குமாறும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுகின்றேன் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

இவ்வாறு செய்வது தேசிய ரீதியில் மின்சாரத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை சீர்செய்ய பெரும் உதவியாக அமையும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.(ம-3)

## மக்களுக்கு அறி...

கோரவும் தீர்மானித்துள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அந்த ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் நாட்களில் பொது மக்களுக்கு அறிவிக்காது மேற்கொள்ளப்படும் விநியோக துண்டிப்புக்கள் குறித்து கவனம் செலுத்தி அதுதொடர்பில் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் அணைக்கட்டுக்களை அண்மித்த பகுதிகளில் போதிய மழை வீழ்ச்சி இன்மை காரணமாகவே, மின்சார விநியோகம் துண்டிக்கப்படுவதாக மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் நெருக்கடியான சந்தர்ப்பங்களி லும் பொது மக்களுக்கான மின்சார விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## மனித உரிமை...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மக்கள் சுமுகமானதொரு வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கின்ற போது தேவையின்றிய தலையீடாகவே இது அமைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் குறித்து கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போதைய தலையீடானது இனங்களுக்கிடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடு என்றே கருதவேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனவே அரசாங்கத்திற்கு முதுகெலும்பு உண்டெனில் ஸ்திரமான தீர்மானமொன்றை மேற்கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து விலக வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40வது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து பிரித்தானியாவால் சமர்ப்பிக்கப்பட்ட 40/1 தீர்மானம் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு இன்னும் இரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இலங்கை சரியா...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான வாக்குறுதியை இலங்கை மீள புதுப்பித்துக் கொண்டுள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இந்தப் பிரச்சினைகளை தீர்க்க சரியான நேரத்தில் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான, செழிப்பான எதிர்காலத்தையும் பெற முடியும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## விபத்தில் இறந்த...

கொண்டிருந்தன.

இதன் போது வாள்களுடன் நுழைந்த கும்பல் ஒன்று, அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி 10 பவுண் நகை மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளதுடன் உயிரிழந்த இளைஞனின் தந்தைக்கும் கையில் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் நடந்த விபத்தில் உயிரிழந்த இளைஞனின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றது.

இறந்தவரின் சடலம் வீட்டுக்கு வந்து சேர்வதற்கு முன்னர் இந்தச் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3-10-110)

## ஜனநாயக உரி...

பயிர் செய்யும் காணிகளின் உரிமையை வழங்குவோம். மக்கள் அனைவருக்கும் வீட்டு உரிமையை வழங்கி வருகிறோம். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோருக்கு கிராமங்களிலும் நகரங்களிலும் மலையகத்திலும் வடக்கு, கிழக்கிலும் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

13 வருடங்கள் கல்வியை கட்டாயமாக்கியுள்ளோம். அதேபோல் டிஜிட்டல் மயப்படுத்தலின் உரிமையை வழங்கியுள்ளோம். தற்போது அனைத்து வீடுகளிலும் தொலைபேசிகள் உள்ளன.

பொருளாதாரமும் டிஜிட்டல் மயமாகி வருகிறது. டிஜிட்டல் மயமாகும் இடமே அபிவிருத்தியடையும். எவருக்காவது டிஜிட்டல் அறிவு இல்லை என்றால், அவர் சமூகத்தில் இருந்து விலக்கப்படுவார்.

கிராம மட்டங்களில் டிஜிட்டல் முறைமை அறிமுகப்படுத்த உள்ளோம். அத்துடன் எந்த சமயத்தையும் பின்பற்றும் உரிமை தற்போதுள்ளது.

கலாசாரத்தை கடைபிடிக்கும் உரிமையுள்ளது. இந்த உரிமைகள் அனைத்தையும் நாங்கள் வழங்கியுள்ளோம். வேறு யார் உரிமைகளை கொடுத்தனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கமே இந்த உரிமைகளை பெற்றுக்கொடுத்துள்ளது. இதனை பாதுகாத்து நாம் முன்னோக்கி செல்ல வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடக்குக்கு அரசு...

குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், வடக்கில் கைத்தொழில் துறையும் கூட்டுறவுத்துறையும் பலம்பெற்றிருந்தது. அங்கு கண்ணாடித் தொழிற்சாலை கூட இயங்கியது.

ஏனைய தொழிற்சாலைகள் இயங்கின. ஆனால் நல்லாட்சியின் கடந்த நான்கு ஆண்டுகளில் வடக்கில் ஒரு கைத்தொழில் பேட்டையாவது உருவாக்கப்பட்டுள்ளதா?

தமிழ் மக்களுக்காக இந்த அரசாங்கம் ஏதேனும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதா? அரசாங்கம் என்ற வகையில் அங்கு நீங்கள் செய்தது என்ன என்பதனைக் கூற முடியுமா? இன்று வீடு வீடாகச் சென்று கடன் கொடுக்கின்றனர்.

இதில் மத்திய வங்கி தலையிட்டுள்ளதா? வெறுமனே மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் வேலைத்திட்டங்களே முன்னெடுக் கப்படுகின்றது. இவை குறித்து அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது வேடிக்கை பார்க்கின்றது என தெரிவித்துள்ளார்.(ம-3)

## தமிழருக்கு புலி...

சத்தில் அந்நிறுவனத்திற்கு புலி முத்திரை குத்தப்படுவதாக பிரதியமைச்சர் புத்திக பத்திரன சாடியுள்ளார்.

அத்துடன், ஊடக நிறுவனங்களை பெரும்பான்மை இனத்தவர்கள் மாத்திரமா கொண்டு நடத்த வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வினவியுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், பிராந்திய ஊடகவியலாளர்களை பலப்படுத்துவதற்கு மானிய கடன் திட்டங்கள் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இம்முறை அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில், அவர்களுக்கான காப்புறுதி போன்ற பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.


இதேவேளை, கடதாசிக்கான வரி அதிகரிப்பினால் நாளிதழ்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. எனவே இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

அதுமாத்திரமின்றி ஊடகவியலாளர்களுக்கு வீடு, தொலைபேசி மற்றும் அதிவேக இணைய வசதிகளை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களாக தமிழர்கள் காணப்படும் பட்சத்தில் அந்த ஊடக நிறுவனங்களுக்கு புலி முத்திரை குத்தப்படுகிறது. ஏன் சிங்களவர்கள் மாத்திரமா ஊடக நிறுவனங்களை கொண்டு நடத்த வேண்டும்.

எதிர்காலத்தில் முஸ்லிம் இனத்தவர் ஒருவர் ஊடக நிறுவனத்திற்கு உரிமையாளரானால் அந்நிறுவனத்திற்கு ஐ.எஸ். முத்திரை குத்தப்படும் எனத் தெரிவித்தார். (ம-3)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் நேற்று (23.03.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிஐயா - அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், இரதாஜினி, பார்த்திபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றொஜன் அவர்களின் அன்பு மாமனும், அகீஸ், அகானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

சித்தன்கேணி (சி-5867) குடும்பத்தினர்.

கொவிசெத
திகதி 2019.03.23
சீட்டிழுப்பு இலக்கம் 2072
ஆங்கில எழுத்து F
வெல்லப்பட்ட இலக்கங்கள் 28 31 57 60
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2019/03/23
சீட்டிழுப்பு இலக்கம் 1414
எழுத்து 09
வெற்றி இலக்கம் 12 19 25 54
04 66
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23-03-2019
சீட்டிழுப்பு இலக்கம் 928
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 0 3 7 4 4 0
தேசிய லொத்தர் சபை

செவண
திகதி 2019/03/23
சீட்டிழுப்பு இலக்கம் 172
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 15 23 53
தேசிய லொத்தர் சபை

## காணி விற்பனைக்கு

சுற்று மதில் கிணற்றுடன் 2 1/2 பரப்பு காணி பலாலி றோட் கோண்டாவிலில் விற்பனைக்கு உண்டு.

**077 452 7317**

(8084)

## ரலண்ட் அக்கடமி

**Talent Academy**

**விசுவமடு மல்லாகம்**

**077 214 0675**

**2021, 2020 A/L**

**வரலாறு**

**S.B.Sanu** (வரலாறு சுமையானது அல்ல சுவையானது)

(8052)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**வங்கியியல் கற்கைநெறிகள்**

**Banking Courses**

**IABF & DABF**

(Tamil&English Medium)
Qualification :- G.C.E O/L 6 Passes with 5 Credits including Maths
ஆரம்பம் :- 23.03.2019

**கணக்காளர் கற்கைநெறிகள்**

**Chartered Accounting Courses**

Executive Level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes
ஆரம்பம்:-23.03.2019

**Certificate Course in English**
18 Batches have Successfully Completed the Course. Started 23.03.2019

**Further Details:**
Jaffna College
Undergraduate Dept.
464,Hospital Road,
Jaffna.
0212223382/0212229149

(C-5843)

## விற்பனைக்கு

கணனி மேசைகள், அயன் சேவ் (பாதுகாப்பு பெட்டகம்) பித்தளைப் பொருட் கள், புத்தகங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:

**076 389 5962**

(C-5852)

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றிற்கு நிறுவன உதவியாளர் (ஆண்) தேவை.

- தகைமைகள்

1. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. A/L சித்தி 3. வயதெல்லை - (18-35)

தொடர்புகளுக்கு :

077 427 5311, 076 690 8986

(C-5855)

## ஓம் சக்தி எலக்ரோனிக்ஸ்

சகல விதமான

**Fridge, Washing Machine** கள்

அனைத்தும் உங்கள் வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

**தரன்**

**077 800 0748**

**071 800 0748**

கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.

(8080)

## கலந்துரையாடல்

யாழ் மத்திய கல்லூரியில் 1999ஆம் ஆண்டு O/L கல்வி கற்ற மாணவர்களுக்கும் 2002ஆம் ஆண்டு A/L கல்வி கற்ற மாணவர்களுக்குமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| இடம் | :- | இல. 70, கோவில் வீதி, யாழ்ப்பாணம். |
| காலம் | :- | 24.03.2019 |
| நேரம் | :- | 6.00 PM |

| | | |
|---|---|---|
| வினோத் | :- | 077 902 5712 |
| மனோதீபன் | :- | 077 936 1201 |
| தினேஸ் | :- | 077 668 4302 |

(8089)

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-5806)

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER **070 330 5500** WESTERN UNION MONEY TRANSFER

**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

(C-5807)



## ஸ்ரீ கொல்லிமலை மாந்திரீக ஜோதிடர்



**மாந்திரீக சித்தர்**
**யாழ்ப்பாணம் வருகை**

ஜாதகம், குறிப்பு, கைரேகை, ஆண், பெண் வசியம். தொழில், கணவன், மனைவி, பிரபலம் மற்றும் குழந்தை பாக்கியம், வெளிநாட்டு யோகம் ஆகிய அனைத்தும் சிறந்த முறையில் சொல்லப்படும்.

**நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை**

ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
(கொழும்பு வேர்க் ஷாப் எதிரில்)

**தொ.பே: 076 495 1787, 077 897 1672**

(8091)

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்.......

அமரர் திருமதி

## தயாளன் ரூபாவதி (சாந்தி)

[திதி : 26.03.2019]



தோற்றம் : 18.02.1969
மறைவு : 07.03.2018

அன்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய்
இன்முகம்காட்டி எம்மை எல்லாம் வாழ வைத்த
அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டொன்றாகி விட்டன.
உங்கள் பிரிவின் துயரை எங்களால்
ஏற்க முடியவில்லை அம்மா

கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம்
காத்துவந்தீர்கள் இப்போது பட்டமரம் போல்
வலுவிழந்து தவிக்கின்றோம் அம்மா
எப்போதும் உங்கள் நினைவலைகளால்
தவித்து நிற்கின்றோம்.

"ரூபமஹால்" வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை, பருத்தித்துறை. T.P. No : 077 652 9017

கரையும் கண்ணீரில் நிறையும் நினைவுகளுடன்
கணவர் - இ.தயாளன் மற்றும் பிள்ளைகள்,
ராஜன் வீடியோ ஸ்ருடியோ - பருத்தித்துறை.

(C-5856)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 210

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 24.03.2019 | தொலைபேசி : 021 222 3378

## காலம் கடத்த அவகாசம்

2019 - 2021



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** இலங்கையில இனி தமிழினம் வாழ முடியாது.

**மூப்பர்:** ஏன் விதானையார் அப்படிக் கூறுகிறீர்கள்.

**விதானையார்:** ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையத்தில இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது தெரியும் தானே.

**மூப்பர்:** நாங்கள் என்ன செய்யிறது. எங்களுக்காகக் கதைக்க வேண்டிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அற்ப சொற்ப சலுகைகளுக்காக அரசாங்கத்தோட சேர்ந்து நின்று எங்களுக்குக் கெடுதி செய்யுது. கோடாலிப் பிடி போல் நிண்டால் என்னெண்டு எங்கட இனம் வாழ்றது.

**விதானையார்:** அது தானே! ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் மிகத் தெளிவாகச் சொல்லிப் போட்டார். போர்க்குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்காவிட்டால், அது சிறுபான்மை மக்களுக்குப் பேராபத்தாக முடியுமெண்டு.

**சாத்திரியார்:** பிறகேனாம் இரண்டு வருட கால அவகாசம் கொடுத்தவியள்.

**பண்டிதர்:** இரண்டு வருட காலஅவகாசம் கொடுக்கிறதுக்கு முன்னதாக கூட்டமைப்பின் முக்கியஸ்தரோட சிலர் கதைச்சிருப்பினம். அதன்போது கால அவகாசம் வழங்குவதற்கு கூட்டமைப்பு தன்ர ஆதரவை வழங்கிறதாகக் கூறியிருப்பினம். பிறகெதற்கு வாக்கெடுப்பு. ஏகமனதாக இரண்டு வருட கால அவகாசத்தை இலங்கை அரசுக்கு ஐ.நா. மனிதவுரிமை ஆணையம் கொடுத்திருக்குது.

**வாத்தியார்:** அப்ப எங்கட சுமந்திரனாரின்ர கருத்தில கூறுகிறதாக இருந்தால், இலங்கை அரசை ஐ.நா. மனிதவுரிமை ஆணையம் மேற்பார்வை செய்யப் போகுது. அப்படித்தானே!

**கங்காணி:** அப்படித்தான். ஏற்கனவே இரண்டு வருட மேற்பார்வை முடிஞ்சுது. இப்ப 2019 இல இருந்து 2021 வரை மேலும் இரண்டு வருட மேற்பார்வை. இப்படியே காலம் போக இலங்கை முழுவதும் சிங்களமயமாகிப் போகும்.

பிறகென்ன கூட்டமைப்பும் அரசாங்கத்திற்கு வழங்கிய சத்தியம் நிறைவேறும் தானே!

**பண்டிதர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள். என்ன, சத்தியம் செய்து கொடுத்தவியளோ.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா உங்கட கேள்விக்குரிய பதிலை உரிய நேரத்தில சொல்லுவன். அப்ப நீங்கள் மட்டுமல்ல தமிழ்மக்களும் அது பற்றி அறிவினம்.

**மூப்பர்:** தெரியாமல் தான் கேட்கிறன் 2021 ஆண்டிற்குள்ளும் இலங்கை அரசாங்கம் ஐ.நா.மனிதவுரிமை ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றாமல் விட்டால் என்ன நடக்கும்?

**விதானையார்:** மேலும் இரண்டு வருடம் ஐ.நாவின்ர மேற்பார்வைக்கு இடம் வழங்கப்படும். இலங்கை அரசை ஐ.நா. மேற்பார்வை செய்யிறது நல்லது தானே!

**சாத்திரியார்:** அப்ப இப்படியே காலம் கடத்துறது தான் நோக்கம் போல.

**வாத்தியார்:** சாத்திரியார் முதலில எங்களிட்ட ஒற்றுமை ஏற்படவேண்டும். எங்கடையள் பிரிந்து நின்று பணத்திற்கும் படோபகாரத்திற்கும் விலை போனால் எப்படி எங்கட இனத்திற்கு விமோசனம் கிடைக்கும். எல்லாரும் பச்சைத் துரோகம் செய்யினம். இந்த இடத்தில சொல்லுறன் தமிழினத்திற்குத் துரோகம் செய்யிறவியள் கந்தறுந்து காவடி எடுப்பினம். இது சத்தியம்.

(வாத்தியார் வைத்திலிங்கம் ஆக்ரோஷமாகப் பேசியதும் ஆலடி மாநாடு நிசப்தமாகியது.

வாத்தியாரின் கோபத்திலிருக்கக்கூடிய நியாயத்தை உதாசீனம் செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொண்ட ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் தொடர்ந்தும் அமைதியைப் பேண கங்காணி கார்த்திகேயன் அந்த அமைதியைக் கலைத்தார்)

**கங்காணி:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஆனால் கூட்டமைப்பில இருக்கிற எல்லாரையும் நாங்கள் குறைபட முடியாது.

**[வா]த்தியார்:** ஏன் கங்காணியார் அப்படிச் சொல்லுறியள். கூட்டமைப்பின்ர எல்லா உறுப்பினர்களையும் நாங்கள் குற்றம்சாட்ட முடியாது என்றால் அங்க நடக்கிற அநீதியை எதிர்த்தல்லோ இருக்கவேணும்.

கூட்டமைப்பின்ர தலைமை சொல்லுவதற்கெல்லாம் ஆமாம் போட்டால் கூட்டமைப்பின்ர போக்குக்கு எல்லா உறுப்பினர்களும் சம்மதம் என்பதுதானே பொருள்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறதுதான் உண்மை. என்னைப் பொறுத்தவரை எங்கட தமிழ் மக்கள் ஒருக்கால் தேர்தலில பாடம் புகட்டினால் எல்லாம் சரியாக வரும்.

**பண்டிதர்:** விதானையார் நீங்கள் அப்படிச் சொல்லுறியள். நாட்டில, உலகத்தில என்ன நடக்குதென்பது பற்றி எதுவும் அறியாமல் தேர்தல் வந்தால் போய்ப் புள்ளடிகளைப் போடுகின்றவர்கள் தானே அதிகம். அப்ப பிறகெப்படி எங்கட சனங்கள் பாடம் படிப்பிக்குமெண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா! நீங்கள் என்னதான் சொன்னாலும் இந்தமுறை எங்கட சனங்கள் தக்க பாடம் படிப்பிப்பினம். அப்ப தெரியும் தமிழன் ஆரெண்டு.

**மூப்பர்:** பாடம் படிப்பிக்கிறது எண்டால் அதுக்கு எங்களிட்ட பலமான அரசியல் இருக்கவல்லோ வேணும்.

**விதானையார்:** ஏன் இல்லை. எங்கட நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்மக்களுக்காக ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்திருக்கிறார். இனி அந்தக் கட்சியைப் பலப்படுத்த வேணும்.

**கங்காணி:** அதுக்கும் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேரவேணுமெல்லோ.

**விதானையார்:** கங்காணியார் தமிழ்க் கட்சிகள் எண்டு மட்டும் சொல்லாதீங்கோ. இலங்கைத் தமிழரசுக் கட்சியும் விக்னேஸ்வரன் ஐயாவோட சேரவேணும்.

**சாத்திரியார்:** இதென்ன நடக்கிற கதையோ?

**விதானையார்:** சாத்திரியார் தமிழ்மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேணும் எண்டு நினைக்கிறவர்களும் தமிழரசுக் கட்சியில இருக்கினம். இருந்தும் அவையளால இப்ப எதுவும் செய்ய முடியல்ல.

அதால தான் சொல்லுறன் அவர்கள் எல்லாரும் விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியில சேர்ந்து தமிழ் மக்களின்ர ஏகோபித்த ஆதரவோட தமிழ் அரசியல் தலைமையை பலப்படுத்த வேணும்.

**பண்டிதர்:** அப்ப விதானையார் சம்பந்தர் ஐயாவின்ர நிலைமை என்ன?

**விதானையார்:** சம்பந்தர் ஐயாவுக்கும் வயது போட்டுது. அவரின்ர காலத்தில அரசியல் தீர்வு வரும் என்பது ஒருபோதும் சாத்தியமாகாது என்பது தெரிந்து விட்டது.

கொடுத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பறிச்சுப் போட்டினம். வயது போன நேரத்தில இருந்த பதவியை இழக்கிறது என்பது இருக்கிற ஆயுள் காலத்தையும் குறைத்து விடும்.

ஆகையால தன்ர இறுதிக் காலத்திற்குள்ள சம்பந்தர் ஐயா தமிழ்மக்களுக்கு ஏதேனும் நன்மை செய்யிறதா இருந்தா அவரும் விக்னேஸ்வரன் ஐயாவோட சேர்ந்து ஒரு பலமான அரசியல் தலைமையை தமிழ்மக்களுக்கு அடையாளம் காட்டுறது தான்.

இப்படி விதானையார் விசுவலிங்கம் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## தமிழரசுக் கட்சியினரும் விக்னேஸ்வரன் ஐயாவோட சேரவேணும்

ஆதித்தன்

# ஐ.நாவின் கால அவகாசம்

## தமிழர்கள் மனங்களை வெல்லுமா இலங்கை






ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40பவது கூட்டத் தொடரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைக்கு சாதகமானதொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது. புதிய பிரேரணையூடாக இலங்கை வெளிக்காட்டிய முன்னேற்றங்களுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பிரேரணையின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் உரிய காலப் பகுதிக்குள் நிறைவேற்றும் என்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன அதன்போது உறுதியளித்திருக்கின்றார்.









இலங்கை குறித்த புதிய பிரேரணை மூலம் வெளிக்காட்டிய முன்னேற்றங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. 47 உறுப்பு நாடுகள் இலங்கை குறித்த புதிய பிரேரணை தொடர்பில் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளதால் பிரேரணை வாக்கெடுப்பெதுவுமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை விடயத்தில் மேலும் சிறிது காலமேனும் அவகாசமளிக்கப்பட வேண்டுமென்பதில் பல நாடுகள் ஆர்வம் காட்டிவந்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்தக் காலஅவகாசத்தை இலங்கை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

புதிய கால அட்டவணைப்படி இலங்கை அரசாங்கம் இறுதி நேரம் வரை காத்திராமல் முடிந்தளவுக்கு நேரகாலத்தோடு பிரேரணையில் இணங்கப்பட்ட விடயங்களை முழுமையாக நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இரண்டு வருடகால அவகாசம் என்பது மிக நீண்டதொரு சந்தர்ப்பமாகும். இப்போதுதானே வாய்ப்புக் கிட்டியுள்ளது. போதிய காலம் இருப்பதாக நினைத்து காலத்தை வீணடித்து விடாமல் சம்பந்தப்பட்ட தரப்புகளை வெற்றி கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும்.

இலங்கை அரசுக்கு இதுவிடயத்தில் மற்றொரு முக்கிய கடப்பாடு காணப்படுகின்றது. அது பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான இலங்கை தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுப்பதாகும். தமிழ் மக்களின் ஆறாத வேதனைக்கு மத்தியிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மீண்டுமொரு கால அவகாசத்தை இலங்கைக்கு வழங்கியிருக்கின்றது. தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க முடியாது போனால் யார் என்ன சொன்னாலும் இதிலிருந்து இலங்கை விடுபடவே முடியாது போகும்.

புதிய பிரேரணையின் உள்ளடக்கம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாட்டைக் கொண்டுள்ளது. அறிக்கையில் நான்கு செயற்பாட்டு பந்திகள் காணப்படுகின்றது. 30/1 பிரேரணையை முழுமையாக அமுல்படுத்துவதை வலியுறுத்துவதே முதல் விடயமாகும். அடுத்தது மனித உரிமை, உண்மை, நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றை பாதுகாத்து ஊக்குவிப்பதில் இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்துடன் ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டியதாகும். இவ்விரண்டு விடயங்களையும் பொறுப்புடன் கையாளும் போது நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இலங்கை அரசாங்கம் இவ்விடயத்தை அரசியல் நோக்குடன் பார்க்க முற்படக்கூடாது. கடந்த காலத்தில் பெரும்பான்மை சமூகத்தைத் திருப்திப்படுத்தும் நோக்கில் செயற்பட முனைந்ததன் காரணமாகவே இலங்கை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. நீதிப்பொறிமுறை குறித்து என்னதான் பேசினாலும் பாதிக்கப்பட்ட தரப்பு நம்பிக்கை இழந்து காணப்படுவதால் மூன்றாம் தரப்புத் தலையீடு தானாகவே நுழைய வேண்டிய தேவை ஏற்பட்டு விடுவதை தவிர்க்க முடியாது போகும்.

தமிழ் மக்களின் பத்து வருட காலக் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். அடுத்த இரண்டு வருடங்களுக்கும் இந்தக் கண்ணீர் தொடரக்கூடாது. மனம் வைத்தால் 24 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டிய தேவை கிடையாது. நட்புறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியுமானால் நான்கே மாதத்திற்குள் அப்பாவி தமிழ் மக்களின் கண்ணீரை நிறுத்திவிட முடியும். 30 வருட கால யுத்தத்தில் துயருற்ற மக்கள் போர் முடிந்து பத்து வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் அத்துயரிலிருந்து விடுபட முடியாத நிலை தொடருமானால் மனிதாபிமானம் செத்துவிட்டதா என்ற கேள்விதான் எழுகின்றது.

தமிழ் உறவுகள் என்ன கேட்கின்றார்கள்? தங்களது காணாமல் போனவர்கள், ஒப்படைக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத்தானே கேட்கின்றனர். இதற்குப் பதிலளிப்பதற்கு இவ்வளவு நீண்டகால அவகாசம் தேவைதானா? மனச்சாட்சியை தொட்டுப்பார்த்துப் பேசினால் சரியான பதில் கிடைக்கும். அவர்களும் மனிதர்கள் தானே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன, மத, மொழி பேதம் கடந்து அனைத்து மக்களும் இலங்கையர்கள், இந்த மண்ணின் மைந்தர்கள் எனச் சிந்தித்து நீதியான, நியாயமான தீர்ப்புக்குரிய மனவெளிப்பாட்டைக் காட்டுவோமானால் நிச்சயமாக தமிழினத்தின் மனங்களை வெற்றிகொள்ள முடியும். இல்லாததை, இழக்கப்பட்டதை தொடர்ந்தும் மூடி மறைப்பது மனங்களை தூரமாக்குவதற்கே வழிவகுக்கும். இதனை மறந்துவிடக்கூடாது.


எனவே இலங்கை அரசாங்கம் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். காலஅவகாசமாக வழங்கப்பட்ட இரண்டு வருடங்கள் வரை காத்திராமல் காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டும். பொறுப்புக் கூறலை சரிவர நிறைவேற்ற முன்வரவேண்டும். சகல பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். இந்த இரண்டு வருட கால அவகாசம் சாதகமான, வெற்றியளிக்கும் காலமாக மாறவேண்டுமென்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும்.

# பரமனின் பாதமடையும் பாலம் தானம்

“தான தருமம் செய்” என்று நம் முன்னோர்கள் சொல்வார்கள். நாம் தாய், தந்தையர்கள் ஏதாவது மகிழ்ச்சியடைந்தால் அல்லது துக்கமடைந்தால்தான தர்மம் செய்வதைப் பார்த்திருக்கிறோம். இவ்விரு சொற்களும் தருமம் என்ற தலைப்பின் கீழ் தானமும் உண்டு. மனித தர்மத்துள் தானம் ஒன்று. அவ்வாறு இருக்க தானத்தை தனியாக குறிப்பிடுவது அதன் மகிமையை நமக்கு உணர்த்துகின்றது.

தருமங்கள் எண்ணற்றவை! அவ்வாறு இருக்க தானத்தை மட்டும் சிறப்பாக கூறுவதால் தானம் என்றால் என்ன? என்ற வினா எழுகிறது.

பொதுவாக நமக்கு சொந்தமான பொருளை பிறருக்குக் கொடுப்பது தானம். பிறருடைய பொருளினை நாம் தானமாகக் கொடுக்க முடியாது. சிலர் தமக்குத் தேவையில்லாத மற்றும் பழைய பொருட்களைக் கொடுப்பார்கள்.



உண்மையில் நமக்கு மிகவும் பிடித்தமான பொருட்களைத் தானமாகக் கொடுக்கவேண்டும். நாம் தானம் செய்வது நல்லாசி பெறுவதற்காகத்தான். பழைய உபயோகமல்லாத பொருட்களைக் கொடுத்தால் வாங்குபவர்கள் மனதிலிருந்து எப்படி நல்லாசி கிடைக்கும்.

நம்முடைய பொருள் என்ற அர்த்தத்தை ஆழ்ந்து நோக்கினால் நமது என்று இவ்வுலகில் எதுவுமில்லை. யாவையும் இறைவனால் படைக்கப்பட்டவை. பின்பு எதுதான் எனது என்று நோக்கின் அது தான் தானத்தின் உட்பொருள்.

நம்முடைய மமதையை அழிக்கவே தானம் செய்கின்றோம். பொருட்களின் மேல் உள்ள பற்றைத் துறத்தல் கடவுளிடம் செல்வதற்கு முதல்படி. தற்போது கலியுகத்தில் சிலர் மமதையை விடப்போய் அகங்காரத்தின் பிடியில் அகப்படுகின்றார்கள். இதற்காகத்தான் வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

இப்போது யாருக்குத் தானம் கொடுக்க வேண்டும் என்ற வினா எழுகின்றது. பொதுவாக நம்மிடம் வந்து உதவி கேட்பவர்களுக்குக் கொடுக்கலாம். அவர்களிடம் இருக்கிறது தானே ஏன் நாம் கொடுக்கவேண்டும் என நினைப்பது மடைமை.

இந்திரன் மாறுவேடத்தில் கர்ணனிடம் வந்து கவச குண்டலங்களால் யாசிக்கும் போது தன் காதை வெட்டி பிரித்து கொடுக்க வேண்டும் என்ற கவலையில்லாமல் வந்திருப்பது இந்திரன் என தெரிந்தும் கர்ணன் கவச குண்டலங்களையளித்தார்.

ஆகவே நாம் தானம் கொடுக்க யாரையாவது தடுத்தால் சுக்கிராச்சாரியாருக்கு ஒரு கண் போன வரலாறு கண்கூடு. பலிச்சக்கரவர்த்தி வாமனுக்கு மூன்றடி மண்கேட்டு கொடுக்கும் பொழுது தாரைவார்க்க தண்ணீர் கெண்டிக்குள் வண்டாக அடைத்த சுக்கிராச்சாரியார் தண்ணீர் கிடைக்காமல் தெற்பைப்புல்லால் பலிச்சக்கரவர்த்தி குத்த ஒரு கண் குருடாகியது.

அதிகாரிகள் ஒரு வயதான மூதாட்டியார் வீட்டில் யாசகம் கேட்டபோது மூதாட்டி தான் உண்பதற்காக வைத்திருந்த ஒரே ஒரு நெல்லிக்காயை மனமுவர்ந்து அளித்ததன் காரணமாக ஆதிசங்கரர் வஷ்மிதேவியை பிரார்த்தித்து கூரையில் இருந்து பொற்காசு பொழிந்ததை அறிவீர்கள்.

எனவே நம்முடைய அகந்தை, மமதையை அழித்து கடவுளிடம் ஒன்று சேர இறைவனே எமக்கருளிய அரிய வாய்ப்பு “தானம்” நாமும் எமது சக்திக்கு ஏற்ப தானம் செய்து இறையருள் பெறுவோமாக.

-சிவனடியார்-




# நேர்மையால் கிடைத்த அதிர்ஷ்டம்



பல ஆண்டுகளுக்கு முன் நீர்வளமும் செல்வச் செழிப்பும் மிகுந்த மதுராபுரி நாட்டினை வரகண பாண்டியன் எனும் மன்னன் ஆட்சி செய்து வந்தான். ஒரு நாள் அவனும் அவனது மனைவியும் உரையாடிக்கொண்டிருந்த போது மகாராணி மன்னரைப் பார்த்து கேட்டார், நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்புவரா? என்று கேட்டார். அப்பொழுது வரகண பாண்டிய மன்னனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

அச் சந்தேகத்தினால் மன்னருக்கு இரவில் தூக்கமே வரவில்லை. ஆதலால் அடுத்த நாள் அரச சபை கூட்டப்பட்டது. அப்பொழுது மன்னர்தனதுசந்தேகத்தினை அரச சபையில் கூறினார்.

அது என்னவென்றால் தகுதி உள்ள மனிதனிடம் அதிர்ஷ்டம் இருக்குமா? இல்லை நேர்மை உள்ள மனிதனிடம் அதிர்ஷ்டம் இருக்குமா? என்பதாகும். இதனைக்கேட்ட அறிஞர்கள் அனைவரும் தகுதி உள்ளவனுக்கே என்று கூற, ஒரு அறிஞர் மட்டும் நேர்மை உள்ளவனுக்கு என்று கூறினார்.


மன்னருக்கு ஆச்சரியம். இவ்வளவு அறிஞர்களும் தகுதி உள்ளவனுக்கு என்று கூற நீங்கள் மட்டும் ஏன் நேர்மை உள்ளவன் என்று கூறுகின்றீர்கள். இதை நீங்கள் நிரூபிப்பீர்களா? எனக் கேட்க, ஆம் நிரூபிக்க முடியும் எனக் கூறிய அறிஞர், அங்குள்ள காவலாளியிடம் ஒரு அவிந்த ரொட்டியையும் ஒரு அரை அவியல் ரொட்டியையும் கொண்டு வரும்படி கூறினான். பின் அரை அவியல் ரொட்டிக்குள் தான் வைத்திருந்த விலைமதிப்பு மிக்க மோதிரத்தை வைத்து காவலாளியிடம் அறிஞர் கொடுத்தார். அரை அவியல் ரொட்டியை தகுதி உள்ள பிச்சைக்காரனுக்கும் நன்கு அவிந்த ரொட்டியை நேர்மையுள்ள பிச்சைக்காரனிடமும் கொடு என்றான்.

அதன்படி காவலாளி கொடுத்தான். தகுதியுள்ள பிச்சைக்காரன் அரை அவியல் ரொட்டியை தன்னால் சாப்பிட முடியாது எனக் கூறி நேர்மை உடைய பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டு அவனிடம் இருந்த ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டு விட்டுச் சென்றுவிட்டான்.

அதன்பின் நேர்மையான பிச்சைக்காரன் தனது மனைவியுடன் சேர்ந்து உணவு அருந்தும் போது அதில் ஒரு மோதிரம் இருந்தது. இது அரசனிடம் இருந்து வந்ததால் இது அரசனுடையது என்று கூறி அதை அரசனிடம் கொடுக்க அரச சபைக்கு வந்தார். அரசனிடம் அந்த நேர்மையான பிச்சைக்காரன் நடந்தவற்றைக் கூறினான்.

பின்னர் தான் கொண்டு வந்த மோதிரத்தை அரசனிடம் கொடுத்தார். பின்னர் அரசனின் சந்தேகம் தீர்ந்தது. அந்த மோதிரத்தையும் ஆயிரம் பொற்காசுகளையும் பிச்சைக்காரனிடம் கொடுத்தார். அத்துடன் சந்தேகம் தீர்ந்து விட்டது எனக் கூறி சந்தோசப்பட்டார். இக்கதை ஊடாக நீங்களும் நேர்மையாக இருங்கள் சிறுவர்களே.

பி.கிரிதரன், இணுவில்.



**சசிகுமார் றொசான்,**

**தரம் 7**

**யா/சிறீலங்கா மகாவித்தியாலயம், அல்வாய் வடக்கு.**









**ஐ.நா. அவகாசத்தைக் கேள்விப்பட்டதும் உங்களுக்கு யாரில் கோபம் வந்தது?**

**ஐ.நாவின் அவகாசம் ஏற்றுக் கொள்ளக் கூடியதா?**

**ஆட்சி மாற மாற ஐ.நாவின் கால அவகாசம் கூடுமா?**

**சிறிராம் — பருத்தித்துறை**

**இந்த ஆண்டு வரவு - செலவு அறிக்கை தமிழர்களுக்கு சாதகமானதா? பாதகமானதா?**

இந்த ஆண்டல்ல வேறு எந்த ஆண்டும் தமிழ்மக்களின் ஆதங்கங்களையும் அவசியத்தையும் திருப்திப்படுத்தும் திட்டம் வரவே வராது என்பதுதான் உண்மை.

**கோகுலன் — வரணி**

**இன்று எல்லாம் தலைகீழாக நடக்கிறதே?**

வெளவால்கள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு உலகமே தலைகீழாக நடக்கிறது என்றும் தான் தான் சரியாக நடக்கிறேன் என்றும் எண்ணித் திருப்தி கொள்ளுமாம். இதுதான் இன்றைய மனிதரின் நிலையும்.

**சுதன் — குப்பிளான்**

**தமிழ்த் தலைமை ஏன் மாணவர் சக்தியுடன் இணைய பின்னிற்கிறது?**

மாணவர்கள் தான் மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுகின்றார்களே. மக்களின் நிலை மறந்து பேரினத்தின் கயிற்றை விழுங்கிவிட்டு நிற்பவர்கள் எப்படி மக்கள் குறை தீர்க்க முன் வருவார்கள் சொல்லுங்கள்.

**தர்ணிகா — கௌந்தில்**

**தமிழ்மக்களின் வழிக்கு கூட்டமைப்பு வருமா?**

தமிழ்மக்கள் வழியில் இருந்து தடம் மாறி விட்டது அது. இனி மாற்றுத் தலைமை இன்றி இந்தத் தலைமையால் தமிழர் வழிக்கு வரமுடியாது என்பதே எமது கருத்து. இதுவே மக்களின் நிலைப்பாடும் என்பது சமீபகால செயற்பாடுகள் விளக்குகின்றன.

**ஜீபா — கரவெட்டி**

**ஆட்சி மாற மாற ஐ.நாவின் கால அவகாசம் கூடுமா?**

ஒரு சிறு பிரதேசத்தில் மக்களை முடக்கி வைத்து பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்ற போர்வையில் இன அழிப்பைச் செய்தவர்களுக்கு ஐ.நா. அவகாசம் கொடுக்கிறது என்றால் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் நடந்த எதையும் ஐ.நா. கவனத்திற்கொள்ளவில்லை என்பதே பொருள். அடுத்த பிறவியிலேனும் தமிழ் இனம் பேரினமாக பிறக்க கடவுளை வேண்டுவோம். இதைவிட வேறில்லை.

**திரு — யாழ்ப்பாணம்**

**காதலிப்பவர்கள் எல்லாம் திருமணம் முடிக்கிறார்களா?**

அப்படியென்றால் கல்லறைகளும் காவியங்களும் இருந்திருக்காதே.

**திகழன் — யாக்கரு**

**கூட்டமைப்பு இன்னும் சிங்களத் தலைவர்களை நம்புகிறதா?**

தம்பி இவர்களுக்கு யதார்த்தம் புரியாதென்றில்லை. நன்றாகப் புரியும். ஆனாலும் சிங்கள அரசுக்கு முட்டுக்கொடுப்பதை இவர்களால் நிறுத்த முடியாது. ஏனென்றால் இது இவர்களுக்கு ஒரு மேனியாவாக மாறிவிட்டது. இனி காலங்காலமாக முட்டுக்கொடுப்பதைச் செய்து கொண்டே இருப்பார்கள் அவ்வளவுதான்.

**சித்திரா — வட்டுக்கோட்டை**

**தமிழனின் சாபக்கேட்டை யாரிடம் முறையிட?**

ஏதோ ஐ.நா.தான் எமது கடவுள். சர்வதேசம் முழுவதும் கைகோர்த்து நிற்கிறது. எல்லோரும் இணைந்து தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வாங்கித் தருவார்கள். குற்றம் செய்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்பார்கள் என்றெல்லாம் நம்பி இருந்தோமே.

இறுதியாய் என்ன நடந்தது? தவறு செய்தவர்களுக்கும் தவறு செய்யத் தூண்டியவர்களுக்கும் இவர்களைப் பாதுகாத்தவர்களுக்கும் இன்னும் இரண்டு வருடம் நாசமறுத்ததை விட வேறில்லை.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**நிலா — சுழிபுரம்**

**சமயங்கள் பிரிவினையைத் தூண்டவா, அறநெறியை வளர்க்கவா இருக்கிறது?**

என்ன செய்ய. மதம் என்ற மதம் மனிதனை ஆட்டிப் படைக்கிறது. கடவுளர்கள் மதம் கொண்ட மனிதனை விரும்புவதில்லை. ஏனோ மனிதன் மதம் கொண்டு தன் மதத்தை பரப்புவதற்கு பாய்ந்து திரிகிறான்.

மதம் பரப்ப வீடு வீடாகத் திரிபவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். மதம் பரப்புவதால் பரவுவதல்ல பக்தியால் பரவுவதே என்பதை.

**விஸ்ணுப்பிரியா — பருத்தித்துறை**

**ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணைப் பிடித்திருந்தால் அது காதலாகத் தான் இருக்கவேண்டுமா?**

இந்த சமூகத்தின் தவறான கண்ணோட்டம் இதுதான். ஒரு ஆணைப் பிடித்திருந்தால் அதைக் காதல் என்ற வட்டத்திற்குள் அடைத்து விடுவது.

ஒரு பெண்ணுக்கு முதலாவதாகப் பிடிக்கும் ஆண் அவளின் தந்தை. அவள் தனது தந்தையை றோல்மொடலாகக் கொண்டு தனது வாழ்வைச் செதுக்க முயல்வாள். இவையெல்லாம் சின்னத்தனமுடையவர்களுக்கு எங்கே புரியப் போகிறது.

**கலை — மிருசுவில்**

**ஐ.நாவின் அவகாசம் ஏற்றுக்கொள்ளக் கூடியதா?**

எம் இனத்தைக் கருவறுத்தவர்களின் எகத்தாளப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு எப்படிப் பொறுமையாக இருக்கமுடியும். நடந்தது ஒரு இன அழிப்பு. அதை யாராலும் மறைக்க முடியாது.

ஒரு தேசத்தில் இன அழிப்பைச் செய்துவிட்டு அதற்கு நியாயம் புகட்டும் ஆட்சியாளர்களா எங்களுக்குரிய உரிமைகளைத் தரப்போகிறார்கள்.

ஒருவேளை இவர்கள் எங்களுக்கான உரிமைகளைத் தருவார்கள் என நம்புவோமா இருந்தால் அது காளை மாட்டில் பால் கறப்பதற்குச் சமமானது என்பதை இவ்விடத்தில் பதிவிடுகிறோம்.

**தமிழன் — பருத்தித்துறை**

**நித்திரையா தமிழா நீ...?**

தமிழனாவது நித்திரையால் எழும்பிறதாவது. எழும்ப வேண்டிய நேரத்தில் எழும்பாமல் எல்லாம் முடிந்த பின்பு எழும்பி ஏதப் பிரயோசனமும் இல்லை. வீட்டிற்குள் முடங்குவதை விட வேறொன்றும் இல்லை.

**சயன் — யாழ்ப்பாணம்**

**ஐ.நா. அவகாசத்தைக் கேள்விப்பட்டதும் உங்களுக்கு யாரில் கோபம் வந்தது?**

இரண்டு மூன்று மூஞ்சி கண் முன் வந்து நின்றது. செய்தி: சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கையை நிறுத்தாமல் விடமாட்டோம் - கூட்டமைப்பு

வடிவேலு,இன்னுமாடா இந்த உலகம் நம்மள நம்பிட்டிருக்கு என்ற பகிடியே நினைவில் வந்தது.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## மணமகள் தேவை



மண்வெட்டி வேலைசெய்ய
பலமுடையான்
மண்வள காணிநிறை
வளமுடையான்

மாடுகோழி வளர்ப்பதிலே
திறனுடையான
மண்ணைப் பண்படுத்திவிடும்
தரமுடையான்

கையெழுத்து வைக்கும்படி
படிப்புடையான்
காளைகளை அடக்கிவிடும்
துடிப்புடையான்

பாலியல் மாத்திரையிவர்க்கு
வேண்டுவதில்லை
பாவையொருத்தி உரசிடினும் படி
தாண்டுவதில்லை

விறகுவெட்ட இன்னொரு ஆண்
பிடிப்பதில்லை
வேலையில்லை எனச்சொல்லி
படுப்பதில்லை

கொத்துரொட்டி கூல்சோடா
உண்பதில்லை
கூழ்குடிக்கும் பழக்கமதை
வெறுத்ததில்லை

கைபேசியில் கைவைத்து
விழிப்பதில்லை
காலையிலே அறுகம்புல்
தவிர்ப்பதில்லை

வேட்டியணியும் பழக்கமதை
விட்டதில்லை
வேறொருத்தி நிழலையிவன்
தொட்டதில்லை

வெளிநாட்டு விசாதேடி
அலையாதவன்
உள்நாட்டு உழைப்பதிலே
சளைக்காதவன்

கட்டவரும் மனைவிக்கு
மணக்கொடை வேண்டாம்
மாட்டிற்கு புல்லிடும்
மதியிருந்தால் போதும்

மேட்டுக் காணியிரண்டை
பரிசளிக்க வேண்டாம்
வீட்டுப்பயிர் காத்திட
விவேகமிருந்தால் போதும்

கொடுப்பதற்கு நகைகளவள்
கொண்டுவர வேண்டாம்
கோழிஅடை வைத்துப்பெருக்கும்
குணமிருந்தால் போதும்

**யோ.புரட்சி**

## தமிழ்மொழி

வண்ணத் தமிழ் பாட்டுரைக்க
வண்டினங்கள் மெட்டிசைக்க
சங்கத் தமிழ் வந்த கதை
காப்பியங்கள் கூறுதுவே

ஆண்டவனே தாயாகி வந்தமொழி
தாலாட்டின் முதன்மைமொழி
வேதியர்கள் வகுத்த மொழி
வேதங்கள் கூறும் மொழி

மேல்நாட்டுப் பாணியிலே
மோகம் இங்கு கூடியதால்
ஆராரோ பாட்டும் இங்கே
வேற்றுமொழி ஆகிடுமோ!

உயிரோடு மெய்சேர்ந்து உயிர்மெய்யாகி
அஃேனமும் (ஃ) வேற்றுமையின்றி ஒன்றாகி
அகிலத்தையே உறவாக்கும்- ஆதியிலே
தமிழனென்றே உரைப்பதில் தயக்கமென்ன

**த.லக்ஸ்மன் நல்லூர்**

## அர்த்தமற்ற அவகாசம்

தமிழ்யோகி
மடத்துக்கடவையான்

திட்டமிட்ட இனப்படுகொலைக்கு
தீர்வின்றி தவிக்கும் இனம் (இங்கே)
வட்டமேசை இட்டு அதை மறைக்க
திட்டம் தீட்டும் அரச தலைவர்கள் (அங்கே)
சட்டங்கள் பல படித்து பட்டங்கள் சில பெற்று
எட்டப்பன் கூட்டத்தை காப்பாற்ற
எத்தனிக்கும் பெருந்தகைகள்

பொய்நாவில் எழுகின்ற வார்த்தைகண்டு
ஐ.நாவே நீ அசந்து போகாதே
எம் இனம் அழிவதற்கு கூட்டு அம்பு
எய்த நாளை மறக்க முடியுமா?
எய்தவனை நாம் அறிவோம்
எய்வித்தவனை நீ அறிவாய்

செய்த தவறுகளை மறைக்க
செயற்படும் குழுக்களுக்கு
மீண்டும் ஒரு அவகாசமா
மாண்டுபோன உறவுகளே
மன்னிக்கமாட்டார்கள் இச்செயலை

## நீரெடுக்கப் போறவளே

தென்றலில் வண்ணச் செடிகள் அசைந்தாட
ஒற்றைவழிப் பாதை தன்னில்
அன்னம் அதன் நடைபோட்டு
அழகாய் நடந்து வரும் என் க(பெ)ண்ணே

பட்டுப்போல் பாதம் பதித்து
உன் சிற்றிடையில் குடம் தாங்கி
நீரெடுத்து வந்திடவே தனியாக போகின்றாய்
உனக்கு துணையாக நானும் வந்திடவா

முத்து நிகர்த்த புன்னகை சிந்தியே
காலில் கொலுசு தானும் சிணுங்கிடவே
உன் கையில் வளைகள் ஆர்ப்பரிக்கவே
நீயும் ஒய்யாரமாய் நடை போடுகின்றாய்

சேலை தானும் அழகாய் உடுத்து
மின்னல் இடை தானும் அசைந்தாட
மயிலின் சாயல் கொண்டு நீயும்
விரைந்து என்னிடம் வந்து சேர்ந்திடடி

**இரா. நிசாந்தன்**
**இராமநாதபுரம்**

கவிதைக் கலசம்

## என்னவள்

வெண்ணிலவும் நாணி
தலைகுனிந்து போகும்
என்னவளின் அழகினால்
கயலும் நீரினுள் தற்கொலைக்கு
முயற்சிக்கும் என்னவளின்
விழிபார்த்து
கலாபமும் வெட்கித் தூரம்
செல்லும் என்னவளின்
குழல் கண்டு
பூக்களும் வாடி புன்னகை
இழக்கும் என்னவளின்
புன்னகை கண்டு
அன்னமும் தன்நடை
மறக்கும் என்னவளின்
நடை கண்டு
என் உடலும் தன்
உயிரை மறக்கும்
என்னவளின் வெட்கம் கண்டு

**ஆ.துஜேசன், உரும்பிராய், யாழ்ப்பாணம்**

## முந்திரிக்கொட்டையாய்...

கல்தோன்றி மண்தோன்றா
காலத்து முன்தோன்றிய
மூத்த குடியோ
இன்று பண்பாடுகளை இழந்து
பாழ்பட்டுப் பேசகிறது

மண்பற்றுக்கொண்ட
மக்களுக்காய் தம்முயிரை
தாரைவார்த்த மக்கள் நாயகர்கள்
வாழ்ந்த மண்ணில்
வாள்கொண்டு திரிகிறது
வஞ்சகப்பட்ட
இனமொன்றின் வாரிசுகள்


பிறக்கிறது புதுவருடம்
அடுத்ததென்ன தீர்வே- என
அரைத்த மிளகாயை
தடவுகிறது தமிழர் தலையில்
தலைமை ஒன்று

கிழிந்த துணியை
தைத்துவிட நூலின்றி
தவிக்கிறது இனமொன்று
பறக்கிறது காற்றில் அவர் மானம்

நெல் விளைத்து
நேசக்கரம் நீட்டிய மண்ணில்
கந்தகப் புகையைக்
கக்கிவிட்டு- இல்லை என்று
கைவிரிக்கிறது போதி
கருணையின்றி அவர்க்கு
முட்டுக்கொடுத்து
முந்திரிக்கொட்டையாய்
முந்தி நிற்கிறது தமிழ் தலைமை

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்- 440



## வாழ்வின் கொடுமை

கொடூரர்களின் கோரப்பிடியில்
சிக்கித் தவிக்கும்- இந்த
சின்னஞ்சிறு சிறார்கள்
எத்தனை எத்தனை
கனவுச் சாரல்களை
தங்கள் உள்ளத்தில்
தூவியவண்ணம்
ஒருவேளை சாதத்திற்கும்
பெற்றோர்களின் அரவணைப்பிற்கும்
எதிர்காலத்தினை
எட்டிப்பார்த்த நிலையில்
முள்வேலிக்குள்
முடங்கிக் கிடக்கிறார்கள்

**திருமதி இ.றதீபனா**
**பாரதிபுரம்**

## மௌனத்தின் தேடல்-441



இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## அம்மாவாகித் தாலாட்ட

அண்ணன் நெஞ்சில் அழும் குழந்தை
அம்மாவாகித் தாலாட்ட
உண்ண உணவு கிடைக்குமா?
உன்னிப்பாக வழிநோக்க
தண்ணீராதல் பசி ஆற்றத்
தருவார் யாரும் உளராமோ?
எண்ணி ஏங்கும் பிஞ்சுகளின்
இந்த நிலையது பாரீரோ?

**த.சிவகாமி,நல்லூர்**

## காரணம் என்ன?

சிட்டாய்ப் பறக்கும் வயதில்
இந்தச் சிறார்கள்
முள்ளுக் கம்பிக்குள்
அடைபட்டுக் கிடக்கின்றனரே
பாவம் இதுதான்
அவர்களின் தலைவிதியா?
இல்லை காலம் செய்த சதியா?

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## வறுமையும் பொறுமையும்

தெம்பைத் தரும்
அன்பிற்கிங்கு
பஞ்சமென்பது
கொஞ்சமுமில்லை
ஆயினும் நாளாந்தம்
தாயினும் சாலச்சிறந்த
வதிவிடங்கள்
விதிமுறையின்றி
பல்வேறு ரூபங்களில்
இல்லையென்றவதாலும்
வறியவருக்கான
வீட்டுத்திட்டங்களும்
கிட்டாமல்
இழுபறிப் படுவதாலும்
வறுமை வாட்டுகையில்
பொறுமை காட்டுவது
பொருந்துவதாயில்லை

**க.நாகராசா, நுணாவில்**

## பச்சைப் பயங்கரவாதிகள்

ஐயகோ! இதை
யார்க்கெடுத்துரைப்போம்
இந்தப் பச்சைப்
பாலகர்களும்
பயங்கரவாதிகளோ அன்றில்
வருங்காலத்
திறஸ்தவாதிகளோ? என்று
அன்று புனிதராம்
யேசு கிறிஸ்துவை
சிலுவையில்
முட்கம்பிகளால்
பிணைத்தது
போன்றல்லவா பிணைத்துப்
பெருமிதம்
அடைகின்றனர்
கயவர்கள் கூட்டம்

**த.து.ஜெகநாதன்**
**தொண்டைமானாறு**

## பிள்ளை உள்ளம்

முள் மீதுறங்கும்
முல்லைப் பனிமலரே
சிற்பிக்குள் பிறந்த
சிங்காரச் சொல்லழகே
பிஞ்சு மொழி பேசும்
பிள்ளைக்கனியமுதே
கள்ளங்கபடமில்லா
வெள்ளையுள்ளமே
கடவுள் நிலையுள்ள
பிள்ளையுள்ளம்
நஞ்சுகலவா
நல்லுள்ளத்தே
துயரண்ட வழியேது
துணைதான் உமக்கார்

**சி.திவ்வியா**
**யா/ப.மெ.ம.வி.**

## சற்றுப் பொறுத்திருங்கள்

பிதுங்கி விழி
பதுங்கி ஒதுங்கி
பீதிச்சுமையை
வீதித்துளையுள் ஏந்தும்
பேணி இல்லாப் பிஞ்சுகளே
கூனி விடாதீர்கள்
முட்கம்பி வரிகளில் தான்--எம்
முழு வாழ்க்கைச் சரிதங்களும்
வெளியே
வேதனைப் பெருஞ்சமையல்
சற்றுப் பொறுத்திருங்கள்
சரிந்தே உறங்கிடுங்கள்
நெற்றிக்கண் நெடும்பதியை
நேர்ந்து துணிந்திடுங்கள்
உற்றவலி அறும்
உண்மை வழிசேரும்

**செல்வா செல்வறமணன்**



# கல்லாதது உலகளவு

சிறுகதை



நேரம் பிற்பகல் ,3.30 ஐத் தாண்டியிருந்தது. எனினும் சூரியக் கதிர்களின் கோபக் கனல்கள் சற்றும் குறைந்ததாய்த் தெரியவில்லை.

"உந்தப் பெரிய வீட்டைக் கட்டியும் வீட்டுக்குள் இருக்க முடியலயே" என்று தனக்குத் தானே சலித்துக்கொண்டவாறு வெளியில் நிற்கும் வேப்பமர நிழலின் கீழ் சாய்மனைக் கதிரையைப் போட்டார் ஆறுமுகத்தார். கைகளில் இருந்த அந்தப் புதினப் பத்திரிகையை உதறி விரித்தவாறு மூக்குக் கண்ணாடியின் கீழ்ப் பக்கத்தால் கண்களை இடுக்கிப் பார்த்தார். வாய்க்குள் முணுமுணுத்தவாறு வாசிக்கத் தொடங்கினார். எனினும் அவரின் மனம் பத்திரிகை வாசிப்பில் லயிக்கவில்லை. தனது நெஞ்சின் மீது பத்திரிகையைப் போட்டவாறு வேப்பமர உச்சியை வெறித்துப் பார்த்தவாறு படுத்திருந்தார். வேப்பமர உச்சியில் அணில் குஞ்சுகள் இரண்டு ஓடிப்பிடித்து விளையாடிய வண்ணம் இருந்தன.

" என்னப்பா! கப்பல் கவிழ்ந்து போச்சே, இத்தனை யோசனை" என்றவாறு சரஸ்வதியம்மா பக்கத்தில் வந்து பாயைப் போட்டு அமர்ந்தாள். தான், கொண்டு வந்த வெற்றிலைத் தட்டத்தில் இருந்த பாக்கை பாக்குவெட்டியால் இலாவகமாக வெட்டினாள். வெற்றிலையில் சிறு அளவு சுண்ணாம்பைத் தடவி பாக்குச் சீவலை வைத்து சுற்றி கணவனுக்கு கொடுத்தாள். தானும் சிறிதளவு போட்டுக் கொண்டாள். எப்போதாவது வாய் நமைச்சலாக இருக்கும் போது இவ்வாறு போட்டுக் கொள்வார்கள். தாம்பூலம் தரித்தல் தமிழர் பண்பாடு ஆச்சே!

ஆறுமுகத்தார் குடும்பம் அழகான சிறிய குடும்பம். ஆறுமுகம் ஓய்வு பெற்ற ஆசிரியர். சமூகத்தில் நல்ல மரியாதைக்குரியவர். சரஸ்வதி அவர் உளமறிந்து நடக்கும் நல்ல துணைவி. நாட்டுக் குழப்பங்களால் பிள்ளைகள் இரண்டையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு தனிமையில் தவிப்பவர்கள். பிள்ளைகள் இருவரும் திருமணமாகி வெளிநாட்டிலேயே வசிக்கிறார்கள். எப்போதாவது வந்து போவார்கள். மற்றைய பொழுது தொலைபேசியில் கதைப்பதுண்டு.

ஆறுமுகத்தார் ஊரில் உள்ள பாடசாலை ஒன்றில் நீண்டகாலமாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஆறுமுகம் சேர் என்றால் பாடசாலையே நடுங்கும். அந்தளவு கண்டிப்பானவர். கனிவானவரும் கூட. மாணவர் ஒழுங்கு நடத்தைக்குப் பொறுப்பான டிசுப்பிளீன் ரீச்சர். அவர் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதில் கைதேர்ந்தவர். மாணவருக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் அவர் முன்னுதாரணம்.

அவர் தான் இன்று தெரிந்தோ தெரியாமலோ ஓர் தவறு இழைத்துவிட்டார்.

" என்னப்பா, என்ன பிரச்சினை?" என்று மனைவி ஆறுமுகத்தாரை உலுப்பினார்.

"ஒன்றுமில்லையடியப்பா இன்று சந்தையில ஒரு சின்ன தப்பு நடந்திட்டுது"

"என்னெண்டு சொன்னாத்தானே தெரியும்" சரஸ்வதி அவரை அவசரப் படுத்தினாள்.

**ஆறுமுகத்தார் என்னென்று சொல்வதற்கு முன்பு நாம் ஒரு வருடம் பின்னோக்கிச் சென்று வருவோம்.**

ஆறுமுகத்தார் எப்போது ஓய்வு பெற்றாரோ அப்போதே அவர் ஒரு வருத்தக்காரன் போல் ஆகிவிட்டார். ஒருமுறை இவரது குடும்ப வைத்தியர் "நீங்க சும்மா இருக்காதை யுங்கோ" சின்னதா ஓர் வீட்டுத் தோட்டம் செய்யலாமே? என்றார். இவரது ஓய்வு தான் வரு த் தம் எனப் புரிந்து கொண் டுள்ளார் வைத் தியர். "சுத்தமான சத்தான மரக்கறிகளை கூட பெற்றுக் கொள்ள முடி யும்" என்றார்.

" என்ர ஐயா பெரிய தோட் டக் காரன் தெரியுமோ" என்று கூறிய வாத்தியார் தன் வீட்டிற்குப் பின்னால் இருந்த சிறு காணியில் கத்தரி, பூசணி, தக்காளி, கீரை, கொஞ்ச வாழை என்று சிறு தோட்டக்காரனாக மாறிவிட்டார். மரக்கறிகளை எல்லாம் வீட்டுத் தேவைக்கு எடுத்துக்கொண்டு சொந்த பந்தங்களுக்கும் கொடுத்தார்.

வாத்தியாரின் வாழைகள் எல்லாம் அந்த மாதிரிக் குலைகள் போடத் தொடங்கி விட்டன. இவர் அதனைச் சந்தைக்கு கொண்டு போகத் தயாரானா ர்.

சந்தைக்கு எப்படிப் போறது? வாத்தியாராகவா? இல்லை தோட்டக்காரனாகவா? சந்தைக்குத் தோட்டக்காரனாகத்தான் போகவேண்டும் என்று எண்ணிப் பழைய சாரம் மற்றும் பழைய சேட் ஒன்றை அணிந்து கொண்டு புறப்படத் தயாரானார் வாத்தியார்.

இதைப் பார்த்த சரஸ்வதி. " என்னப்பா இது என்ன கோலம். நீங்க வாத்தியார் தானே?" என்று பொரிந்து தள்ளினாள்.

"எடியப்பா, சந்தைக்குப் பின்ன என்ன பட்டுவேட்டி சேட்டுடனா போவாங்கள்"

" அதுக்கு உந்த ஊத்த உடுப்புடனே? ஊத்த வாத்தியார் என்று தான் சொல்லுவாங்கள்" சரஸ்வதி விட்டபாடில்லை.

இறுதியில் சுமாரான சேட்டும் நீளக் காற்சட்டையும் அணிந்து சந்தைக்குச் சென்றார் வாத்தியார்.

"மாஸ்ரர் வாங்கோ… வாங்கோ… எனக்குத்தான் வாழைக்குலை" என்று ஓடிவந்தான் ஓர் இளம் வியாபாரி. பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது இருக்கலாம்.

"என்னடா இவன் மாஸ்ரர் என்கிறானே… என்னட்ட படிச்சிருப்பானோ?" என்று எண்ணு வதற்குள் இவரது சைக் கிளை நிறுத்தித் தானே வாழைக்கு லையையும் இறக்கி வைத்தான். இங்கும் பண்பானவர்கள், உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள் இருக் கத்தான் செய்கிறார்கள். ஆறுமுகத்தாருக்கு புல்லரி த்தது.

"வாங்கோ மாஸ்ரர் நிறுப்பம்" என்று அவ ரின் சொல்லுக்கு காத் திராது தராசு இருக்கும் இடம் தூக்கிச் சென்று நிறுத்தான். வாத்தியார் மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்புபோல் அவனின்பின்சென்றார்.

" கழிவுநீக்கி 20 கிலோ. இந்தாங்கோ மாஸ்ரர் 600 ரூபா. வரத்தியார் விக்கித்து நின்றார்.

நேற்றுத்தான் மனைவிக்கு கோயில் அர்ச்சனைக்கு ஒரு கிலோ 80 இற்கு வாங்கியவர். வரும் போது மனக்கணக்கில் ஒரு கிலோ 60 ரூபா படி 1200 இற்கு கணக்குப் போட்டவர்.

"நாராயணா… நாராயணா… என்றான் பக்கத்தில் நின்ற வியாபாரி.

தனக்கு நாமம் போடப்பட்டதை உணர்ந்தார் ஆறுமுகத்தார்.

இதற்கிடையில் அந்த வியாபாரி இன்னொரு தோட்டக்காரனிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தான். அவன் தலையிலும் நாமம் போடு வானோ என்று ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தார் வாத்தியார்.

சிறிது நேரம் கழித்து அந்தத் தோட்டக் காரனி டம் "என்ன விலைக்குக் கொடுத்தீர்கள்"

" ஒரு கிலோ 50 ரூபா" என்று கூறி அப்பாற் சென்றான் தோட் டக்காரன்.

வாத்தியார் மனமுடைந்து நின்றார். உள்ளம் "பகற்கொள்ளை" என்று ஊளையிட்டது. பெரிய பட்டப்படிப்பு எல்லாம் படிச்சும் எத்தனை மாணவரைக் கட்டுப் படுத்தி வைத்திருந்த என்னைச் சொற்ப நேரத்தில் ஏமாற்றிவிட்டானே என்று மனம்வெம்பினார்.

இதனை அவர் மனைவியிடம் இருந்து மறைத்திருந்தார். ஒரு வியாபாரியிடம் தாம் ஏமாந்ததை மனைவியிடம் சொல்ல அவர் மனம் விரும்பவில்லை. அதனை முழுமையாக இருட்டடிப்புச் செய்திருந்தார்.

இது நடந்து ஒரு மாதம் இருக் கும். இன்று மீண் டும் சந்தைக்குப் போக ஆயத்தமா னார். போகும் போதே சில உறுதி யான முடிவுகளை எடுத்துச் சென்றார். இன்றும் அவன் தான்.

"மாஸ்ரரின்ர வாழைக்குலை என க்குத் தான் என்று ஓடிவந்து சைக்கி ளைப் பிடித்தான்.

" விலையைச் சொல்லிற்றுப் பொருளை எடு" கறா ராக நின்றார் "என்ன மாஸ்ரர் நாங்க இப் படியா பழகினம்"

வெற்றிலைக்கறை கொண்ட பற்களைக் காட்டிச் சிரித்தான். சட்டென்று குனிந்து வாழைக்குலையைத் தூக்கிச் சென்று நிறுத்தான். பக்கத்தில் நின்ற வியாபாரி ஐந்து விரல்களைக் காட்டினான். உடனே ஆறுமுகத்தார் " கிலோ ஐம்பது ரூபாய்" என்று கத்தினார்.

" உவங்கள் இப்படித்தான் குழப்பு வாங்க. வைக்கோல் பட்டடை நாய்கள்" என்று கத்தினான் காவி தெரிய அவன்.

26 கிலோ. மூன்று கழிவு. 23 கிலோ. 40 ரூபாய் படி 920 ரூபாய்.

காசை நீட்டினான். புதிய ஐந்நூறு ரூபா தாள் உள்ளடங்கலாக இருந்தது.

நாராயணா… நாராயணா… என இப்போதும் அந்த வியாபாரி குரல் கொடுத்தான். தனக்கு இன்றும் நாமம் போடப் பட்டதை உணர்ந்தவாறு மரக்கறிச் சந்தையை நோக்கிச் சென்றார் வாத்தியார். வழியில் கிலோ 100 ரூபாய் வாழைப் பழம் விற்பதை எண்ணிப் பெருமூச்சு ஒன்றை விட்டார்.

என்னதான் பெரிய படிப்பு எல்லாம் படிச்சாலும் இந்த உல கத்தில தான் கற்க வேண்டியது நிறைய இருக்கு என அனுபவத்தில் புரிந்து கொண்டார். மரக்கறிகளை வாங்கிய பின் பணத்தைக் கொடுக்க முயன்றார். என்ன ஆச்சரியம். இரண்டு புதிய 500 ரூபா தாள்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டியவாறு இருந்தன. அது வியாபாரி தந்த காசு. மனதில் சந்தோச இழையோடியது. இது எனக்குரிய காசுதான். கடவுள் அதைத் திருப்பித் தந்துவிட்டார். மரக்கறிக் காசைக் கொடுத்துவிட்டு வீடு திரும்பினார்.

எனினும் அவர் மனதை என்னமோ உறுத்தியது.

" இது ஒரு பகற்கொள்ளை" என ஆழ் மனம் ஊளையிட்டது.

ஆறுமுகத்தாரின் மனக்குழப்பத்தை அறிந்த சரஸ்வதியம்மா "என்ன செய்வதாய் உத்தேசம்". சிறிது நேர யோசனைக்குப் பின் "நாளைக்கு சந்தைக்குப் போய் கொடுக்கப் போறன்"

"இன்றே கொடுத்திருக்கலாமே?"

அவன் மீதுள்ள கோபம் அப்போ தடுத்தது.

"இப்ப கோபம் இல்லையா?"

"இல்லை. இது வியாபாரம். அங்கு வாயும் வல்லமையும் உள்ளவன்தான் முன்னுக்கு வரலாம்"

விரிவுரைப்பாணியில் மேலும் தொடர்ந்தார் ஆறுமுகத்தார்.

" சிலர் வெள்ளையும் சொள்ளையுமாக ஏசி அறையில் இருந்து கொண்டு மக்களின் பணத்தை கோடிக்கணக்கில் சூறையாடுறாங்க. அவங்க மத்தியில் இவங்க எவ்வளவோ மேல்…"

ஆறுமுகத்தாரின் மனம் குழம்பிய குட்டை தெளிவது போல் தெளிவுக்கு வந்தது. பாறாங்கல் போல அழுத்திய மனப்பாரம் குறைந்தது. அவர் மனம் பஞ்சாய்ப் பறந்தது போல் உணர்ந்தார்.

சி.சிறீரங்கன்
உரும்பிராய்

# வாளேந்தி போரிட்ட காலம் போய் வாள்வெட்டில் சீரழிந்து நிற்கிறோம்

## தடம் மாறும் தமிழர் பண்பாடு



வயல் வெளிகளிலும் வடலிக் கூடல்களிலும் தற்காலிகமாய் அமைக்கப்பட்ட தறப்பாள் குடில்களில் வாழ்ந்த போதும் அரைச் சுண்டு அரிசியில் உப்புக் கஞ்சியும் இடித்த சம்பலும் சமைத்து உண்ட போதும் வாழ்ந்த எம் தமிழ் கலாசாரமும் பண்பாடும் இன்று நாகரிகம் என்ற போர்வைக்குள் மறைந்து போய் விட்டது.

"கல் தோன்றி, மண் தோன்றி, கடல் தோன்றாக் காலத்திலே முன் தோன்றியது முத்தமிழ்" என்ற பெருமையைக் கொண்ட எம் தமிழர்களின் பண்பாடு இன்று ஒற்றையடையாளக் கலாசாரம் என்ற மேலைத்தேய கலாசாரத்தின் பிடிக்குள் சிக்கி காணாமல் போய்க்கொண்டிருக்கின்றது.

மன்னர்களாலும் புலவர்களாலும் பாடப்பட்ட, போற்றப்பட்ட தமிழ் இன்று பொலிவிழந்து நிற்கின்றது.

வரவேற்பு, விருந்தோம்பல், உணவுப் பழக்கவழக்கம், ஆடை அலங்காரம், பண்டிகைகள், சடங்கு சம்பிரதாயங்கள், கலைகள், வீரம், மொழி என அனைத்திலுமே தனித்துவம் வாய்ந்த எம் பண்பாடும் கலாசாரமும் இன்று தறிகெட்ட நிலையில் நிற்கின்றது.

தமிழர்களிடையே மன்னராட்சிக் காலங்களில் இருந்தே மற்றோரை இன்முகம்கொண்டு வரவேற்கும் பண்பு காணப்பட்டதாக நாம் பார்க்கின்றோம். ஆத்திசூடியை எமக்கருளிய ஔவையார் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து தமிழுக்கு பணி செய்ய வேண்டுமென அதியமான் தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை ஔவையாருக்கு வழங்கி வரவேற்றதாக நாம் நூல்களிலும் கதைகளிலும் கேட்டிருக்கின்றோம். அவ்வாறான தமிழர் பண்பாட்டில் இன்றும் ஒரு சில இடங்களில் தாகம் என்று தண்ணீர் கேட்டால் கூட தரமறுக்கும் தகுதி பார்த்துப்பழகும் நிலை இருக்கிறது.

ஜீவ காருண்ணியம்என்பது அனைத்து கலாசாரத்திலும் பண்பாட்டிலும் பின்பற்றப்படும் ஓர் அம்சம். மனிதர்களை மட்டுமன்றி ஜீவராசிகள் அனைத்தையும் நேசிப்பதே ஜீவ காருண்ணியம். ஆனால் இன்றைய பண்பாடு அடுத்தவரின் ஜீவனை வலுக்கட்டயமாக பறிப்பதும் உயிரினங்களை துன்புறுத்துவதாயும் மாற்றம் பெற்றுள்ளது.

முன்னைய காலங்களில் கூட ஜீவராசிகள் வேட்டையாடப்பட்டன. ஆனால் யாரும் மனிதர்களை வேட்டையாடியதில்லை. மிருகங்களை வேட்டையாடுவதால் உணவைப் பெற்றுக் கொண்டதோடு, ஜீவராசிகளின் சமநிலையும் பேணப்பட்டது. ஆனால் இன்றைய நாகரிக காலத்தில் மனிதனை மனிதனே வேட்டையாடுவதும் சீரழிப்பதுமான அவலங்கள் அரங்கேறுகின்றன. காமுகர்கள் பெண்களை வேட்டையாடுவது இன்னும் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

தற்போது நாமெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை கூட தமிழனால் தமிழ் பண்பாட்டுக்கு சூட்டப்பட்ட இழுக்கேயாகும். அன்பையும் ஜீவ காருண்ணியத்தையும் போதிக்கும் எம் பண்பாடு நாகரிக மாயைக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளது.

நாம் இன்று மேடைப் பேச்சுக்களிலும் ஊடக வெளிகளிலும் வீரத்தமிழன், மறத்தமிழன் என்றெல்லாம் கூச்சலிடுகின்றோமே அத்தனையும் நவீன கால தமிழன் பெற்ற பெயர்களா? பண்டைத்தமிழன் பெற்ற வெற்றி வாகைகளையே இன்று நமக்கு நாமே சூட்டிக் கொண்டுள்ளோம். வீரத்தில் புகழ் பூத்த பண்பாடு எம் தமிழ்ப் பண்பாடு. சேர, சோழ, பாண்டியர்களின் வீரம் செறிந்த கலாசாரம் எம் கலாசாரம். சிங்கள மன்னர்கள் கூட தலைவணங்கிய எல்லாள மன்னனின் வம்சம் நாங்கள்.

இன்று எம் தமிழ் பண்பாட்டை துவம்சம் செய்யும் பாவிகளாய் நிற்கின்றோம். வாளேந்தி போரிட்டு காப்பாற்றிய தமிழ் கலாசாரத்தை நாம் இன்று வாள்வெட்டுக் கலாசாரத்தால் மழுங்கடித்து விட்டோம்.

முத்தமிழ்களும் எவை? என்ற கேள்விக்கு எம்மில் எத்தனை பேருக்கு பதில் தெரியும். இயல், இசை, நாடகம் சார்ந்த பல கலைகளுக்கும் சொந்தக்காரர் தமிழர்களே. ஆனால், மேலைத்தேய இசையையும் மேலைத்தேச கலைகளையும் கற்பதிலும் நுகர்வதிலும் காட்டும் ஆர்வம் தமிழர் கலைகளில் காட்டப்படுவதில்லை. தமிழர்களின் பெயர் சொல்லும் கலைகளுள் பறையிசை, கூத்து என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் பறை இசைப்பவர்களையும் கூத்துக் கட்டி ஆடுபவர்களையும் நாம் அரிதாகவே காண முடிந்தாலும் அவர்களையும் இழிவாகப் பார்க்கும் சமூகமாய் நாம் மாறிவிட்டோம். இன்று தமிழனின் பெருமையையும் புகழையும் அறிகிறோம் என்றால் அது கலைகளின் ஊடாகவே என்றால் மிகையாகாது.

தமிழருக்கென தனியான பண்டிகைகள் காணப்படுகின்றன. ஆனால் நாம் அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அயல் பண்பாடுகளில் இருந்து கடன் வாங்கியே பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றோம்.

தமிழர்களின் பண்டிகைகள் என தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு, ஆடிப்பூரம், கார்த்திகை தீபம் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஆனால் இப்பண்டிகைகளை இன்று வெகுசன ஊடகங்களுடனும் திரைப்படங்களுடனும் தான் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். முன்னர் பண்டிகை என்றாலே கோலகலமாக வீடுகளில் உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடிக் கொண்டாடினார்கள். ஆனால் இன்று வாழ்த்துக்கள் கூட தொலைபேசி ஊடாகவும் முகநூல் பதிவிலுமே பகிரப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலையிலுள்ளோம். ஆனாலும், எமக்கென இருக்கும் பண்டிகைகளையே கொண்டாடாத நாம் அட்ஷயதிதியை போன்ற ஊடுருவல்களை விமர்சையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம் என்றால் அது வெகுசனக் கலாசாரத்தின் தாக்கம் என்றே சொல்ல வேண்டும்.

சடங்கு, சம்பிரதாயங்கள் என்பன எம் பண்பாட்டில் முன்னோர்களால் கட்டிக்காக்கப்பட்ட பெரு நம்பிக்கைகள் என்றே சொல்ல வேண்டும். தமிழனின் வாழ்வியலில் பிறப்பு முதல் இறப்பு வரையான ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் முக்கியத்துவம் பெற்றவாறேயுள்ளன.

இவ்வகையில், காதுகுத்து, பூப்புனித நீராட்டு விழா, பூநூல் சடங்கு, திருமணச்சடங்கு, ஈமக்கிரியை என்றவாறாக பல சடங்குகள் எம்மவர் மத்தியில் நடைமுறையில் இருக்கின்றன. ஆரம்ப காலங்களில் புனிதத்துவமானதாகவும் பயபக்தியுடனும் மேற்கொள்ளப்பட்ட சடங்குகள் இன்று நவீனமயமாக்கப்பட்ட களியாட்ட நிகழ்வுகளாக மாற்றம் பெற்றுள்ளமையைக் காணலாம். முன்னர் உற்றார், உறவினர்கள் ஒன்றிணைந்து வீடுகளில் கொண்டாடப்பட்ட சடங்குகள் இன்று கோலாகலமாக நவநாகரிக வசதி படைத்த மண்டபங்களில் கொண்டாடப்படுகின்றன. மண்டபங்களிலும் கூட மேற்கத்தேய கலாசாரப்படியே இன்றைய சடங்குகள் எம்மத்தியில் அரங்கேறுவதைக் காணலாம்.

சரி அதுதான் போகட்டும் தமிழர்களின் ஆடை அலங்காரம் கூட இன்று அழியும் தறுவாயில் தானே இருக்கின்றது. திருமண சடங்குகளுக்கு பட்டு வேட்டியும் பட்டுச் சேலையும் கட்டிய காலம் போய் இன்று ஒட்டு வேட்டியும் குர்தாவும் லஹெங்காவும் அணியும் வெகுசனக் கலாசாரம் அல்லவா தமிழர்களிடையே தலைதூக்கியுள்ளது. ஆடைக் கலாசாரம் ஆங்கிலேயர் வந்தவுடன் மாறியது என்கிறார்கள். ஆனால் இன்று நல்லூர்த் திருவிழாவில் தமிழர் கலாசாரத்தை பிரதிபலிப்பது அதே ஆங்கிலேயர்தானே.

அவ்வாறிருக்க எம் ஆண்களும் பெண்களும் அரைகுறை ஆடைகளில் அல்லவா சுற்றுகிறோம். இதிலும் பரிதாபம் தமிழர் பிரதேசங்களில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பருவகால விடுமுறைகளில் நாட்டுக்கு வந்து செல்பவர்களிடம் தான் வெள்ளைக்காரர்கூட ஆடைக் கலாசாரத்தைப் பற்றி அறிய வேண்டியிருக்கின்றது. கணவன் கையால் கட்டப்பட்ட மாங்கல்யத்தை வணங்கி வாழ்ந்த நாம் இன்று அடுத்தவர் தாலியை அழகுக்காக கடன் வாங்கி அணிகின்றோம். மேக்கப் என்ற பெயரில் எம்மை நாமே அலங்கோலப்படுத்திக் கொள்கின்றோம்.

தமிழனின் பாரம்பரிய உணவுப் பழக்கமெல்லாம் இன்றைய எம்மவர்க்கு புதிதானவையே. சமைப்பதற்கு மட்பாண்டங்களையே பயன்படுத்திய எம் முன்னோர்கள் ஆரோக்கியமான, ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளான குரக்கன் மாப்பிட்டு, ஒடியல் மாப்பிட்டு, கூழ், பழஞ்சோற்றுக் கஞ்சி, காட்டு இறைச்சி வகைகள், காய்கள், கீரைகள் போன்றவற்றையே உட்கொண்டதோடு நீண்ட ஆயுளோடும் வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய இளசுகள் மேலைத்தேய உணவுகளான பீட்சா, பேர்ஹர், பிறைட் றைஸ், கொத்து என்பவற்றுடன் இரசாயன கலவை கொண்ட குடிபானங்களையுமே விரும்பி உட்கொள்கின்றார்கள். இது தமிழர்களின் உணவுப் பழக்கவழக்கத்தை சீர்குலைக்கும் அதேநேரம் பல நோய்களையும் எம்மவர் மத்தியில் பரப்பி விடுகின்றன. நிலத்தில் அமர்ந்து வாழையிலையில் உணவருந்தும் பழக்கம் போய் கால்மேல் கால் போட்டு மேசையில் அமர்ந்து வாழையிலை போன்ற பிளாஸ்ரிக் தட்டுக்களில் உணவருந்தும் முறை பழக்கமாயிற்று.

தமிழரின் பண்பாடும், கலாசாரமும் தனித்துவம் வாய்ந்ததேயாகும். ஆனால், தமிழர்களாய் இருக்கும் நாமெல்லாம் எமது கலாசாரத்தை புறந்தள்ளிவிட்டு வெளிநாட்டுக் கலாசாரத்தின் பின்னும் மேலைத்தேய பண்பாட்டின் பின்னுமே ஓடிக் கொண்டிருக்கின்றோம். அன்று எம் முன்னோர்கள் "நீரின்றி அமையாது உலகு" என்றார்கள். ஆனால் நாமோ இன்று "பணம் இன்றி அமையாது உலகு" என்று சொல்லிக் கொண்டு நாகரிகம் என்ற போர்வையில் பண்பாட்டைத் தொலைத்து விட்டு பாவிகளாய் நடமாடிக் கொண்டிருக்கின்றோம்.

இ.கம்ஜினி
யாழ்.பல்கலைக்கழகம்.

## காணாமல் போன கணவனுக்கு நடந்தது என்ன?

# 62 ஒரு மூதாட்டியின் வருட போராட்டம்

**“காணாமல் போன உறவுகளின் நிலை என்ன? அவர்கள் உயிருடன் உள்ளார்களா? இல்லையா? அவர்களுக்கு நடந்தது என்ன என்பதற்கு இலங்கை அரசு பதில் கூறவேண்டும் என பல போராட்டங்கள் நடைபெற்றன. 100 நாட்களைத் தாண்டி இன்றுவரை “எமது உறவுகளை எமக்குத் தா” என்ற கோசத்துடன் உறவுகள் வீதிகளில் அறப்போர் நடத்தி வருகின்றது. மனம் தளராமல் நடத்தப்படும் இப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக காணாமல் போன தன் கணவனுக்கு நடந்த விடயத்தை 62 ஆண்டுகளாகப் போராடி பெற்றுக்கொண்ட ஒரு பெண்ணின் கதை இங்கு பிரசுரமாகிறது”**

பிரான்ஸ் நாட்டில் தன் கணவரின் கொலைக்கு, பிரான்ஸ் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று 62 ஆண்டுகளாகப் போராடிவந்த அல்ஜீரியப் பெண்ணுக்கு நீதி கிடைத்துள்ளது. சில மாதங்களுக்கு முன்பு, பிரான்ஸ்ஜனாதிபதி இம்மானுவல்மேக்ரோன், அந்தப் பெண்ணின் கணவர் கொல்லப்பட்டதை ஒப்புக்கொண்டது மட்டுமல்லாமல், மன்னிப்பும் கேட்டுள்ளார். இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளில், போரின்போது காணாமல்போனது அந்தப் பெண்ணின் கணவர் மட்டுமல்ல் சுமார் 850 பேர் காணாமல் போயிருக்கிறார்கள்



இம்மானுவல் மேக்ரோன்


என்பது தெரியவந்துள்ளது.

அல்ஜீரியா பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றியவர், மௌரிஸ் ஆடின். இவரின் மனைவி ஜோசெட். 1957 இல் மௌரிஸ், டாக்டர் பட்டத்துக்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது, அல்ஜீரியாவில் விடுதலைப் போர் மூண்டது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கட்டுப்படுத்த கொடூரமான அடக்கு முறைகளைக் கையாண்டது பிரான்ஸ் அரசு. இடதுசாரி கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட மௌரிசும், அல்ஜீரியாவின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு அளித்தார்.

இந்த நிலையில் 1957, ஜூன் 11-ம் தேதி நள்ளிரவில் மௌரிஸின் வீட்டுக்குள் புகுந்த பிரான்ஸ் படையினர், அவரை தரதரவென்று இழுத்துச்சென்றனர். அவரின் மனைவி ஜோசெட்டும், குழந்தைகளும் அதிர்ச்சியில் உறைந்தனர். ஜோசெட் படையினரை மறித்து, 'மௌரிஸ் எப்போது வீடு திரும்புவார்?' என்று கேட்டார். 'எல்லாம் சரியாக இருந்தால், அரை மணி நேரத்தில் திரும்புவார்' என்றார்கள். ஆனால், இன்றுவரை வீடு திரும்பவே இல்லை மௌரிஸ். 'குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்' என்பதே மௌரிஸ், தன் மனைவியிடம் பேசிய கடைசி வார்த்தை. அந்த ஒரு வார்த்தைக்காக, ஜோசெட் மறுமணம் செய்து கொள்ளாமல், மூன்று குழந்தைகளைக் காப்பாற்றுவதிலும் கணவரை மீட்பதிலும் கவனம் செலுத்தினார். கணவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதை யூகித்த ஜோசெட், நீதிமன்றத்தில் கொலை வழக்கைத் தொடர்ந்தார். எதுவும் நடக்கவில்லை. கணவரின் பிரச்சினையை வெளிச்சத்துக்குக் கொண்டுவர அரசியல் பிரமுகர்கள், ஆட்சியாளர்கள், சர்வதேச மனித உரிமைச் செயற் பாட்டாளர்கள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள் என்று பல்வேறு தரப்பினருக்கும், தன் கணவருக்கு நேர்ந்த கொடுமை குறித்து கடிதம் எழுதத் தொடங்கினார்.

இதற்கிடையே 1962இல் அல்ஜீரியா விடுதலை அடைந்தது. பிரான்ஸுக்கு குடிபெயர்ந்தார் ஜோசெட். அங்கும் தனது போராட்டத்தைத் தொடர்ந் தார் ஜோசெட். 1966இல் மேல்முறையீட்டு நீதிமன்றம், அவரது வழக்கைத் தள்ளுபடி செய்தது. அப்போதும் தளரவில்லை ஜோசெட். போராட்டத்தைத் தொடர்ந்தார். அவரது கோரிக்கைகளுக்கு பதில் எதுவும் அளிக்காமல் மௌனம் சாதித்தது பிரான்ஸ் அரசு. சில ஆண்டுகளுக்குப் பின்பு, மௌரிஸ் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்தன. தொடர்ந்து, மௌரிஸ் கொலை பற்றிய ஆவணப்படங்களும், புத்தகங்களும், திரைப் படங்களும் வெளிவந்தன. பிரச்னை தீவிரமடைந்தது. நாடு முழுவதும் ஜோசெட்டுக்கு ஆதரவாக பலரும் குரல் கொடுத்தார்கள். 'மௌரிஸ் இடதுசாரி ஆதரவாளரே தவிர, எந்த வன்முறை போராட்டங்களிலும் ஈடுபடவில்லை' என்பதைப் பலரும் சொல்லத் தொடங்கினார்கள்.

பாரீஸ் சதுக்கத்துக்கு 2004இல் மௌரிஸின் பெயர் சூட்டப்பட்டது. இதற்கிடையே பிரான்ஸில் ஏழு ஜனாதிபதிகள் மாறிவிட்டார்கள். அரசின் மௌனம் மட்டும் கலையவில்லை. ஜோசெட்டும் கடிதம் எழுதுவதை நிறுத்தவில்லை. சில ஜனாதிபதிகள் பெயரளவுக்குப் பதிலளித்தனர். அல்ஜீரியப் போரின்போது பிரான்ஸ் உளவுத்துறை தலைமைப் பொறுப்பில் இருந்த ஒருவர், சாகும் தருவாயில் 'மௌரிஸைக் கொல்லக் கட்டளையிட்டது நான்தான்...' என 2014-ல் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பிரச்னை தீவிரமாகியது. தொடர்ந்து, அப்போது பிரான்ஸ் ஜனாதிபதி யாக இருந்த ஃப்ரான்கொய்ஸ் ஹாலண்ட், ராணுவக் காவலில் இருக்கும் போது தான் மௌரிஸ் இறந்தார் என்பதை ஒப்புக்கொண்டார்.



ஜோசெட்

இந்த நிலையில்தான், ஜோசெட்டின் 60 ஆண்டு போராட்டத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார் தற்போதைய ஜனாதிபதியான இம்மானுவல் மேக்ரோன். சில மாதங்களுக்கு முன்பு ஜோசெட்டை நேரடியாகத் தொடர்புகொண்டு பேசியவர், அவருக்கு ஒரு கடிதமும் எழுதினார். அதில் மௌரிசின் மரணத்துக்கு பிரான்ஸ் அரசு பொறுப்பேற்பதாக அறிவித்தார். தொடர்ந்து அவரது இல்லத்துக்குச் சென்றவர், ஜோசெட்டைக் கட்டியணைத்து மன்னிப்பும் கோரினார்.

அத்துடன், தேசிய ஆவணக் காப்பகத்தையும் ஜோசெட்டின் குடும்பத்தாருக்குத் திறந்துவிடும்படிக் கட்டளையிட்டு, அதனால் அவர்களின் வேறுசில கேள்விகளுக்குப் பதில் கிடைக்கலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். இதைத் தொடர்ந்து தான் ஆவணக் காப்பகத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளில், போரின்போது மௌரிஸ் மட்டுமல்ல... சுமார் 850 பேர் காணாமல் போயிருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. அவர்களின் குடும்பத்தினரும் ஜோசெட் வழியில் தங்களது போராட்டங்களைத் தொடங்கியிருக்கிறார்கள். 62 ஆண்டுகளுக்குப் பின்பு தனக்கு நீதி கிடைத்ததுபோல அனைவருக்கும் நீதி கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் ஜோசெட்!

**ஜூனியர் விகடன்**

---

# ஐ லவ் யூ அப்பா

ஒரு அப்பாவும், 4 வயது மகனும் அவர்களுடைய புதிய காரை துடைத்துக் கொண்டிருந்தார்கள்

அப்பொழுது அந்த சிறுவன் ஒரு சிறிய கல்லை எடுத்து காரின் கதவு பக்கத்தில் சுரண்டிக் கொண்டிருந்தான்.

தற்செயலாக கவனித்த அப்பாவுக்கு கோபம் தலைக்கேறியது..

கோபத்தில் மகனுடைய கையை பிடித்து, நான்கு முறை உள்ளங்கையில் விளாசி விட்டார்.

அப்பொழுது தான் கவனித்தார் அவர் அடித்தது ஸ்பேனரை (Spanner) கொண்டு என்பதை.

வலியில் துடித்த மகனை வைத்திய சாலைக்கு தூக்கி கொண்டு ஓடினார்.

“பல எலும்புகள் முறிந்துவிட்டதால், இனி விரல்களை குணமாக்க முடியாது” என்று வைத்தியர்கள் கைவிரித்தனர்.

மகன் வலி நிறைந்த கண்களுடன் அப்பாவை பார்த்து “அப்பா.. என்னோட விரல்கள் திரும்ப வளர்ந்துடும் இல்லப்பா?” என்று கேட்டவுடன்,

கண்ணீருடன் மௌனமாக வெளியே வந்தார்.

வெளியில் நின்றிருந்த தன் காரை பல தடவைகள் எட்டி, எட்டி உதைத்தார்.

கண்ணீருடன் தலையில் கையை வைத்துக் கொண்டு காரின் முன்பு உட்கார்ந்து விட்டார்

அப்பொழுதுதான் தன் மகன் கீறிய அந்த கீறல்களை கவனித்தார், கீறல் மூலம் ஏதோ எழுதியுள்ளது.

அந்த வாசகம்...

“ஐ லவ் யூ அப்பா”.

மனிதர்களை புண்படுத்துகிறோம்! பொருட்களை நேசிக்கிறோம்!!

எப்பொழுதுதான் மனிதனை நேசிப்பது.

# மறுக்கப்பட்ட நீதியும் வழங்கப்பட்ட அவகாசமும்

சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பாதிக்கப்பட்ட இனத்தவர்களுக்கும் நல்லிணக்கத்தையும் உரிமைகளையும் வழங்க தவறிவிட்டதாகவும் இலங்கையை கழுத்திலே கத்திகளை வைத்து மிரட்டுவது போல ஐ.நா. மன்றமும், உலக நாடுகளும் நடந்து கொள்ளும். இலங்கைக்கு நல்ல கிடுக்குப்பிடி கிடைத்து விட்டது, தமிழர்களுக்கு சார்பாக நாடுகள் அணி திரண்டு இருக்கிறது. ஆனால் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படுகின்ற ஒரு பிரேரணையில் இலங்கையும் இணை அனுசரணை வழங்குகிறது என்றால் அதில் இலங்கைக்கு எவ்வளவு அனுகூலமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்பதை உற்று நோக்க வேண்டும்



ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்திலே இலங்கைக்கு மேலும் இரு வருட கால அவகாசம் ஆனது தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வழங்கப்பட்டிருப்பது தமிழர் தரப்பை கொஞ்சம் அதிர வைத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் இலங்கை சார்ந்த வாதம் ஆரம்பமாகிய நாள் முதலே தளத்திலும் சரி புலத்திலும் சரி தமிழர்கள் தங்கள் செயற்பாடுகளை, போராட்டங்களை மக்களை ஒருமித்து நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

இம்முறை பிரதான கோஷமாக இலங்கைக்கு மேலும் கால அவகாசங்கள் வழங்கப்படக்கூடாது என்ற தொனிப் பொருளில் கோஷங்கள்.கோரிக்கைகள் மேலெழுந்து முதன்மை பெற்றிருந்தது. வடக்கு- கிழக்கு மக்களும் உலகத்திலே இருக்கிற தமிழ் மக்களும் ஒன்றுதிரண்ட கோரிக்கையாக இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கை மேலெழுந்து இருந்தது.

ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி இன்று இலங்கையினுடைய இணை அனுசரணையோடு எந்த வாக்கெடுப்புகளும் இன்றி ஏகமனதாக இலங்கைக்கு மேலும் இருவருட கால அவகாசம் வழங்கப்படும் பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

20.03.2019 அன்றைய செய்திகளை அல்லது அண்மைய அமர்வுகளை பார்க்கின்றபோது ஏதோ உலக நாடுகள் ஒன்றிணைந்து பிரிட்டன் தலைமையில் கூடிய வல்லாதிக்க சக்திகள் ஒன்றிணைந்து ஐ.நா. மன்றத்தின் ஊடாக தமிழர்களுக்கு ஒரு நியாயபூர்வமான நிலைப்பாடுகள் வழங்கப்படுவதற்கு ஏதுநிலைகள் இருப்பதற்கான அறிகுறிகள் மெல்ல மெல்ல வெளிக்கிளம்பியே வந்தது. ஆனால் அது முளையிலேயே கருகி பொசுங்கிப் போயுள்ளது.

ஐ.நா. அமர்வுகள் தொடங்கினாலே ஏதோ இலங்கையை மிரட்டி உருட்டுகின்றது போல ஐ.நா. மன்றத்தில் அதிகாரிகளும் சரி வல்லாதிக்க சக்திகளும் சரி நடந்து கொள்ளும். ஆனால் இறுதி முடிவானது அதற்கு நேர் மறையாக தான் இருக்கும்.

ஐ.நா. மன்றத்தில் இது ஒரு சித்து விளையாட்டாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இது ஒரு கண்கட்டு வித்தையாக தமிழர்களை ஒரு சூனியப் புள்ளிக்குள் தள்ளிவிடுகிற ஒரு விநோத விளையாட்டாக தென்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் இலங்கை சார்பாக வாதங்கள் நடைபெறுகின்ற பொழுது ஏதோ இலங்கையை தீண்டத்தகாதவர்களாகவும், அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்களாகவும், அவர்களின் மீது ஏதோ கிடுக்குப்பிடி பிடிப்பதாகவும், சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பாதிக்கப்பட்ட இனத்தவர்களுக்கும் நல்லிணக்கத்தையும் உரிமைகளையும் வழங்க தவறிவிட்டதாகவும் இலங்கையை கழுத்திலே கத்திகளை வைத்து மிரட்டுவது போல ஐ.நா. மன்றமும், உலக நாடுகளும் நடந்து கொள்ளும்.

இதை கண்காணிக்கும் தமிழர் தரப்போ சின்னப் பிள்ளைக்கு முதுகில் தட்டி விட்டால் எவ்வளவு புழுகம் வருமோ அப்படி புளகாங்கிதம் அடைந்து இன்பத்தின் உச்ச நிலையை அடைவார்கள்.

இலங்கைக்கு நல்ல கிடுக்குப்பிடி கிடைத்துவிட்டது. தமிழர்களுக்கு சார்பாக நாடுகள் அணிதிரண்டு இருக்கிறது. என்றெல்லாம் பரவச நிலையை அடைவார்கள். அதில் எந்த பிழையும் இல்லை ஏன் என்றால் அது எம் இனத்திற்கு நீதி வேண்டும் என்ற ஏக்கம்.

இந்த இனத்தினுடைய பலவீனத்தை மற்றைய நாடுகளும், இலங்கையும் பற்றிப் பிடித்துக் கொண்டும் புரிந்து கொண்டும் தங்களுடைய இராஜதந்திர காய்களை நகர்த்திக் கொண்டு தான் இருக்கின்றன.

முதல் நாள் மனித உரிமைகள் மன்றத்தில் இலங்கைக்கு காரசாரமான விமர்சனங்களை முன்வைத்து அம்மையார் பேசியிருந்தார்.

இதைப் பார்த்த தமிழர்கள் எல்லோரும் இதோ நீதி கிடைத்தது என்றவாறு புளகாங்கிதமடைந்து இருந்தார்கள். மகிழ்ச்சி பொங்கினார்கள், மெய்மறந்து இருந்தார்கள். ஆனால் அடுத்த நாள் நிலைமை வேறு...

பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மாசிடோனியா, மென்ரனிக்கோ ஆகிய நாடுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 30/1 பிரேரணைக்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கி இருக்கிறது என்றால் அதனுடைய உள்ளார்ந்த அர்த்தத்தை இன்னும் புரியாத அளவிற்கு தமிழர்கள் அந்தளவு அடிமுட்டாள்களா?

இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படுகின்ற ஒரு பிரேரணையில் இலங்கையும் இணை அனுசரணை வழங்குகிறது என்றால் அதில் இலங்கைக்கு எவ்வளவு அனுகூலமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்பதை உற்று நோக்க வேண்டும்.

30/1 பிரேரணையில் பழைய குருடி கதவைத் திறவடி என்றது போல இலங்கையினுடைய நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பிலான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றன.

2017 ஆண்டில் வழங்கப்பட்ட கால அவகாசத்தில் இலங்கை சாதித்தது என்ன? நல்லிணாங்கங்களை நல்ல முறையிலே அமுல்படுத்தி இருக்கிறதா?

அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளதா?

இல்லை காணாமல் போனவர்களுக்கு பொறுப்புக்கூறலை கூறியிருக்கிறதா? அல்லது அதற்கு மேல் சென்று இப்போது உயிரோடு இருக்கிற அரசியல் கைதிகளை விடுவித்து இன நல்லிணக் கத்தை வெளிப்படுத்தியிருக்கிறதா?

இதிலே ஒன்றுமே நிறைவேறவில்லை; இன்னும் இன்னும் ஏன் கால அவகாசம் வழங்கப்படுகிறது என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

இவர்களுக்கிடையிலான பிணக்குகள் தீர்க்கப்படாத போது இணக்கம் எவ்வாறு ஏற்படும்? இணக்கம் ஏற்படாத போது எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும்? இவ் வாறு தமிழர்களின் மனதில் இருக்கிற உள்ளார்ந்த வினாக்களுக்கு யாரிடம் விடை தேடுவது?

இவ்வாறாக இலங்கையை சாடிக்கொண்டு அதனுடைய இரண்டு காதுகளையும் உலக நாடுகள் முறுக்கிக்கொண்டு தமிழர்களுடைய முதுகில் தட்டி குதூகலத்தை ஏற்படுத்திக் கொண்டு மறு பக்கத்தில் இலங்கைக்கான சாதக விடயங்களை இராஜதந்திர ரீதியில் நகர்த்திக் கொண்டிருக்கிறது.

இதுவெல்லாம் ஒரு புவியியல் நலன் சார்ந்த அந்தந்த அரசுகளுக்கு இடையிலான ஒரு இராஜதந்திர நடவடிக்கைகள் என்பதை தமிழினம் எப்போது புரிந்து கொண்டு தனக்குரிய தனித்துவ பொருளாதாரத்தையும் தனக்குரிய தனித்துவ கலை, கலாசார, பண்பாடுகளையும் தனக்குரிய நில உரிமைகளையும் தனக்குரிய கல்வி மேம்பாட்டையும் எப்போது உச்ச புள்ளியில் தொட்டு நிற்கிறதோ அப்போது உலக நாடுகள் கொஞ்சம் தமிழர்களுக்காக கீழறங்கி வரக்கூடும்.

ஆக, இவ்வளவு நாளும் அமர்வு தொடங்கிய நாள் முதல் போராடி, தொண்டை கிழிய வானதிர கோரிக்கைகளை வைத்து ஐ.நா. மன்றத்திடம் மன்றாடிய தமிழர்களே கொஞ்சம் தண்ணீர் அருந்தி இளைப்பாறுங்கள் 2021 இல் மீண்டும் ஏமாற்றப்பட வேண்டுமல்லவா!


மதுசூதன்

## போட்டிகளின் போரில்

# தெறிக்கட்டும் சிக்ஸர்கள்!







சென்னையின் வீதிகள் மஞ்சள் வண்ணம் பூசத் தயாராகி விட்டன. விசில்களின் ஓசை விண்ணைப் பிளக்கப் போகிறது. நாற்பதாயிரம் ரசிகர்கள் 'சியெஸ்கே... சியெஸ்கே' என்று ஒருசேரக் கூச்சலிட, சேப்பாக்கத்தின் ஒலியை உல கெங்கும் ஏ்டுத்துச் செல்லப் போகின்றனமெரீனாவின்அலைகள். ஆம், இந்த முறை சிங்கத்தின் குகையிலிருந்தே தொடங்குகிறது ஐ.பி.எல்.கோப்பைக்கான வேட்டை. 2019 ஐ.பி.எல்-லின் ஹைலைட்ஸ் மட்டும் இங்கே!

* நாடாளுமன்றத் தேர்தல், கிரிக்கெட் உலகக்கோப்பை என இருபெரும் சிக்கல்களைச் சமாளித்து ஒருவழியாக மார்ச் 23ஆம் திகதி தொடங்கப் போகிறது இந்தியன் பிரீமியர் லீகின் 12ஆவது சீஸன். சில அணிகள் கடந்த ஆண்டைப் போல் அப்படியே இருக்கின் றன. ஓரிரு அணிகள் மொத்த மாக மாறியிருக்கின்றன. ஒரு அணி தன் அடையாளத்தையே மாற்றிக் களமிறங்குகிறது. பின்ச், மேக்ஸ்வெல், ஸ்டார்க் போன்ற வீரர்களை இழந்தி ருக்கும் ஐ.பி.எல், சாம் கரண், ஆஷ்டன் டர்னர், ஹிட்மேயர் என இளைஞர்களை வரவேற் றுப் புதுப்பொலிவடைந்தி ருக்கிறது.

* பிங்க் சிட்டி ஜெய்ப்பூரை மேலும் வண்ணமயமாக்க, இந்த முறை பிங்க் ஜெர்சியோடு களமிறங்குகிறது ராஜஸ்தான் ரோயல்ஸ். டெல்லி டேர்டெவில்ஸ் இப்போது டெல்லி கேபிடல்ஸ் ஆகிவிட்டது. கடந்த ஆண்டுபயிற்சியாளராகஇருந்த மலிங்கா, இப்போது மீண்டும் மும்பை அணிக்காக யார்க்கர்களால் மிரட்டத் தயாராகி விட் டார். ட்ரீம் 11, ஐ.பி.எல் தொடரின் அதிகாரபூர்வ ஸ்பான்சராகியிருக்கிறது.

* உலகக்கோப்பை நெருங்குவதால் சில இந்திய பட்ஸ்மேன் கள் ஓரிரு போட்டிகளில் ஓய்வெடுக்க வாய்ப்பிருக்கிறது. அதனால், பெரும்பாலும் வெளிநாட்டு வீரர்களே அதிக ரன்கள் அடித்து ஆரஞ்சு கேப் வாங்குவார்கள் என எதிர்பார்க்கலாம். வார்னர், ஸ்மித் இருவரின் வருகையும் உலக கிரிக்கெட்ரசிகர்களின்பார்வையை மொத்தமாக ஐ.பி.எல் பக்கமாகத் திருப்பியிருக்கிறது. ஓராண்டு இடைவெளிக்குப் பிறகு இருவரும் தங்களை எப்படி நிரூபிக்கப் போகிறார்கள் என்பதைப் பார்க்க அனைவரும் ஆவலாக இருக்கின்றனர். அவுஸ்திரேலியாவின் உலகக் கோப்பை வாய்ப்பும் இவர்களைச் சார்ந்திருப்பதால், இந்தத் தொடரின் பெரிய அட் ராக்ஷன் இவர்கள் தான். ஸ்மித் ஓரளவு சிறப்பாக ஆடுவார் என்றாலும், 600, 700ரன்களெல்லாம் அடிக்கப்போவ தில்லை. ஆனால், வார்னர் தன் மூன்றாவது ஒரேஞ்சு கோப்பைக் குறி வைப்பது உறுதி.

* வழக்கம்போல் கெய்ல், டி வில்லியர்ஸ் இருவரிடமும் எதிர்பார்க்க நிறைய இருக்கிறது. ஒரு பெரிய இடைவெளிக்குப் பிறகு காம்பஸ் போல் சுழலும் டி வில்லியர்ஸின் பட்டிங்கைப் பார்க்கப் போகிறோம். ஈ சாலா கப் பெங்களூருக்குச் செல்ல அவரின் பங்களிப்பு மிக அவசியம். கிறிஸ் கெய்ல் உலகக் கோப்பைக்குப் பின் ஓய்வை அறிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதனால், தன் கடைசித் தொடரில் முத்திரை பதிக்க விரும்புவார்.

* பும்ரா, புவி, ஷமி யாரும் 14 லீக் போட்டிகளிலும் விளை யாடப் போவதில்லை. அதனால் லீடிங் விக்கெட் டேக்கராக இவர்கள் இருக்க வாய்ப்புகள் குறைவுதான். விக்கெட் வேட்டை நடத்தக்கூடிய பௌ லர்களில் டாப்பில் இருக்கிறார் சென்னையின் லுங்கி எங்கிடி. கடந்த ஓராண்டில் தென்னாபிரிக்காவின் முக்கிய பௌலராக வளர்ந்திருக்கிறார் எங்கிடி. பௌன்ஸ், யார்க்கர், ஸ்லோ பால், லேட் ஸ்விங் என அனைத்திலும் மிரட்டக்கூடியவர். சூப்பர் கிங் ஸின் மிகப் பெரிய அஸ்திரம் இவர்தான்.

* ஜேசன் பெரண்டார்ப் இந்த சீஸனின் எதிர்பாராத ஸ்டாராக உருவெடுக்கலாம். ஈரமான ஆடுகளத்திலும் பந் தைத் தோள்பட்டை உயரத்துக்கு எழுப்பக்கூடியவர். இருபது -20 போட்டிகளுக்கான ரெடிமேட் பௌலர். இவரது உயரமே பட்ஸ்மேன்களின் ஒரு காலை பெவிலியனில் நிறுத்திவிடும். மலிங்கவின் துணையோடு மும்பை இந்தியன்ஸு'க்காக விக்கெட்டுகளை அள்ளப்போகிறார் பெரண்டார்ப்.

* ஐ.பி.எல் ஏலத்தின்போது மொத்த கிரிக்கெட் உலகையும் ஆச்சர்யப்படுத்தினார் தமிழக வீரர் வருண் சக்ரவர்த்தி. அவரது மந்திரச் சுழலுக்காக 8.4 கோடி செலவழித்தது கிங்ஸ் லெவன். அதற்கான மொத்த பலனையும் தரக் காத்திருக்கிறார் இந்த மிஸ்ட்ரி ஸ்பின்னர். ஆப்ஸ்பின், லெக் ஸ்பின், கூக்ளி, தூஸ்ரா, கேரம் பால், டாப் ஸ்பின், டிரிப்டர் என் அனைத்து வேரியேஷன்களையும் காட்டி மிரட்டப்போகிறார். இவரைப்போலவே இன்னொரு மிரட்டலுக்குக் காத்திருப்பவர் ரஷீத் கான். ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணிக்கு ரஷித் கான்தான் பெரும்பலம்!

### உலகக்கோப்பையில் யார்?

* உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் தினேஷ் கார்த்திக், ரிஷப் பண்ட், கே.எல். ராகுல் என மூவரும் பேக் அப் கீப்பர் இடத்துக்குக் கடும் போட்டியிடுகிறார்ககள். அதனால் மூவருமே தங்கள் திறமையை இந்த ஐ.பி. எல்லில் காட்ட முழு பலத்தோடு விளையாடுவார்கள்.

* ஹர்திக் பாண்டியாவுக்கு பேக் அப் யார் என்பதில் ஜடேஜா, விஜய் சங்கருக்கு இடையே பெரும்போட்டி நடக்கிறது. ஆனால், இருவரும் ஒவ்வொரு விடயத்தில் பின்தங்குகிறார்கள். ஏழாவது வீரராகக் களமிறங்க, ஜடேஜா தன் பட்டிங்கை நிரூபிக்க வேண் டும். ஐந்தாவது பௌலராக விளையாட, விஜய் சங்கர் பந்துவீச்சில் பெரிய மாற்றங்கள் செய்தாக வேண்டும். இருவரில் யாருக்கு வாய்ப்பு என்பதை, இந்த ஐ.பி.எல் தொடரின் முதல் இருவாரங்கள்தான் தீர்மானிக்கும்.

### சூப்பர் கிங்ஸ் எப்படியிருக்கும்?

* . கடந்த ஆண்டைப்போல் அப்படியே இருக்கிறது சென் னை சூப்பர் கிங்ஸ். சொல் லிக்கொள்ளும் படியான மாற்றமாக முன்னாள் வீரர் மோஹித் ஷர்மா மீண்டும் அணிக்குத் திரும்பியிருக்கிறார். மற்றபடி டோனி, பிராவோ, வோட்ஸன், இம்ரான் தாஹிர், ஹர்பஜன் சிங் என சீனியர்சிட்டிசன்ஸ்மட்தான்!

* சென்னையின் பேக் அப் வீரர்கள் அசுர பலத்தில் இருக்கிறார்கள். முரளி விஜய், சையது முஸ்தாக் அலி டி-20 தொடரில் சதமடித்து அசத்தியிருக்கிறார். சாம் பில்லிங்ஸ் வெஸ்ட்இண்டீஸ்அணியுடனான தொடரில் அசத்தினார். டேவிட் வில்லி, எங்கிடி, சான்ட் னர் என எல்லோருமே செம பார்மில் இருப்பது சென்னை அணியைக் கடந்த ஆண்டை விட பலப்படுத்தியிருக்கிறது. ஜடேஜா, ஜாதவ், ராயுடு என இவர்கள் மூவருமே இந்திய அணிக்குத் தொடர்ந்து ஆடிக் கொண்டிருப்பதால் அவர்களது அனுபவமும் அணிக்கு பலம் சேர்க்கும்.

* கடந்த ஆண்டைவிட இந்த முறை சென்னை அணிக்கு நிறைய ஆப்ஷன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பொசிஷனுக்கும் இரண்டு டாப் வீரர்கள் இருக்கிறார்கள். எந்த வீரர் காயமடைந்தாலும், எந்த வெளிநாட்டு வீரர் வெளியேறினாலும் சென்னை அணியை அது கொஞ்சம்கூட பாதிக்கப் போவதில்லை.

இதுவரை, ஐ.பி.எல் கோப்பையைத் தக்க வைத்துள்ள ஒரே அணி சூப்பர் கிங்ஸ்தான். மீண்டும் ஒரு முறை அந்தச் சாத னையைப் படைக்கக் காத்திருக் கின்றன சூப்பர் சிங்கங்கள்!





# மலிவு விலை...

அன்பான சங்குநாத வாசகர்களுக்கு அழகான ஜிம்மிக் குட்டியின் இனிய காலை வந்தனங்கள் உரித்தாகட்டும். என்ன ஒரு மாதிரிச் சிரிக்கிற மாதிரிக் கிடக்குது. ஓ...ஓ... அழகான ஜிம்மிக்குட்டி எண்டு என்னை நானே புகழ்ந்து சொல்லுறன் எண்டு யோசிக்கிறியளோ... அதுசரி... அழகு என்றால் என்ன என்று தெரியாத மனிசரை நான் என்னண்டு சொல்லுறது. அழகு நீங்கள் நினைக்கிற மாதிரி தோலிலையும் முகவெட்டிலையும் சுருட்டை முடியிலையும் இல்லைப் பாருங்கோ. மனம் எப்பவும் ஆரோக்கியமா, மகிழ்ச்சியா, திருப்தியா, நிறைவா இருந்தாலே முகம் அழகு பெறும். அதோடை கொஞ்சம் ஆன்மீகமும் கருணையும் சேர்ந்திட்டால் ஒரு தேஜஸ் வந்திடும். அது எங்கை இருக்கோ அங்கை அழகுத் தெய்வம் குடி புகுந்திடும்.



நல்ல நினைவுகளும் பிறர் மேல் நல்ல பார்வையும் ஏற்பட்ட உடனேயே மனத்தின்ரை மூலை முடுக்கிலை இருக்கிற கறுப்பெல்லாம் கரைந்தோடி மறைந்து ஆடிப் பெருக்கு மாதிரி புது வெள்ளம் கரை புரண்டோடத் தொடங்கிடும்- அப்பிடிப்பட்ட மனிதர்கள் நடந்து எதிர் வந்தாலே சுற்றி வர ஒரு இனிய அதிர்வு அலைகள் ஏற்படுமாம். எல்லாம் பெரியவருக்குப் பக்கத்திலை இருக்கிறதாலை தான் என்ரை மனசிலையும் ஏற்பட்டிருக்கு. பொறுங்கோ இன்னும் கொஞ்ச நாளையிலை என்ரை குஞ்சுத் தலையைச் சுற்றி ஒரு ஒளி வெள்ளம் தெரிய வாய்ப்பும் வரலாம். ம்...ஏதோ இறைவன் அருள்தான்...

எப்ப பாருங்கோ இதை வாசிக்கிற எல்லாருக்கும் ஒரு தரமாவது ஒரு நக்கல், நையாண்டி, லொள்ளு எட்டிப் பாக்காம விடாது. என்னமோ தெரியேல்லை இப்பெல்லாம் அறிவு தன்னாலை பெருகிக் கொண்டு வருகுது. ஓமோம் அது...அதுவா வருது...

கதவு திறந்து சத்தம் கேக்குது. யோகம்மாக்கா வாறா... முத்தம்மாக்காவும் முருங்கைக் காய் கொண்டு வாறா. பாலா அண்ணையும் இருக்கிறார். முத்தம்மாக்கா பெரியவரிட்டை முருங்கைக்காயைக் குடுக்கிறா. பெரியவர் கைநீட்டி வாங்கிறார்.

“என்ன முத்தம்மா கிலோ எண்ணூறு தாண்டிட்டுதாம்... எப்பிடி உனக்கு விளைச்சல் நல்லாத்தானே வந்திருக்கு...”

“ஓமய்யா, உங்களுக்கு ஒரு கட்டு எடுத்து வச்சிட்டுத்தான் விடியப்புறம் நாலு மணிக்கே சந்தைக்கு அனுப்பினனான். நல்ல சூடு தான். சந்தோசமாக் கிடக்குது...” பெரியவர் கவனமா அக்கறையா நலன் விசாரிக்கிறார். அவ ஏதோ சொல்ல நினைச்சு கையைப் பிசைஞ்சு கொண்டு நிக்கிறா...ம்... சொல்லுறா...

“ஏன் பெரியைய்யா இந்த மனிசர் இப்பிடி இருக்கினம். எங்கடை கேற்றுக்குள்ளை மூண்டு கண் விடாக்குட்டி அதுதான் பிறந்த உடனேயே தாயை விட்டுப் பிரிச்சுக் கொண்டு வந்து மூண்டு நாய்க்குட்டியளைப் போட்டிட்டு போயிருக்கினம். நாய் தான் குட்டி போடுது எண்டு பார்த்தால் இப்ப மனிசரும் குட்டி போடினம். கேவலம் வளர்ப்பு நாய் மட்டும் வேணும். அது போடுற குட்டியள் வேண்டாமாம். பாவம் பால்குடி மறந்தாப்பிறகு கொண்டு போய் சந்தையளிலை விடலாம் தானே... பிசாசுகள்...” பெரியவர் அவசரமாத் தலையை ஆட்டிறார்...

“வேண்டாம்...நீ ஏன் ஆத்திரப்படுறாய் பிள்ளை. அவை அவை செய்யிறது அவையளோடை. பாவம் பழி எல்லாம் நாங்கள் தேடி விதைச்சு அறுவடை செய்யிற விசயம். இதை வாங்கவும் ஏலாது, குடுக்கவும் ஏலாது...” யோகம்மாக்கா இடையிலை கதைக்கிறா...

“ஓம் பெரியைய்யா எங்கடை வீட்டு வாசலிலையும் ஒரு குட்டியைப் போட்டிருக்கினம். எங்கடை பெரிய பெடியன் தூக்கிக் கொண்டு வந்து கடுதாசிப் பெட்டி ஒண்டுக்கை பழந்துணி போட்டுக் கொட்டிலுக்கை வைச்சுப் பால் பருக்கிப் போட்டு வேலைக்குப் போட்டான்” பெரியவர் சிரிக்கிறார்.

“இந்த அவசரமான உலகத்திலை ஈவு இரக்கம் கருணைக்கெல்லாம் இடமில்லையம்மா. ஒரு நாளைக்கு இந்த றோட்டிலை விபத்திலை சாகிற உயிர்கள்...மனிசர் மனிசரைக் கொல்லுற காட்சி...உயிர் துடிக்கும். சட்டப்படி கிட்டப் போகக்கூடாதாம். உயிர்த் தண்ணி வாக்க மனமிருந்தும் குடிக்கக் குடுக்கக் கூடாதெண்டு தடுக்கிறவை ஒரு பக்கம். அம்புலன்ஸ் வரும் வரைக்கும் காத்திருக்க... உயிர் காக்கும் வண்டி பறந்து வாரதுக்கு முன்னம் உயிர்ப் பறவை பறந்தோடி விடும். ம்...நீங்கள் நாய்க்குட்டி. அதுவும் ஒரு நாய்க்குட்டி பற்றி ஆவேசப்படுறியள். காலன் விரிச்ச கடையிலை உயிர்கள் சரியான மலிவு விலையிலை போகுது-அது மட்டுமில்லை. மிருகமென்ன மனிதனென்ன...உயிர் உயிர் தானே. ஆவாவெண்டு கடைசித் துளிக்கு அங்கலாய்ச்சுப் போட்டு திறந்த வாய் மூடாமலே சீவன் போகுது. நீயோ நானோ இதைத் தடுக்க முடியாதம்மா. எங்கடை கங்கா டீச்சர் வீட்டு சுற்று மதிலுக்குள்ளை தினமொரு பூனைக் குட்டியோ நாய்க்குட்டியோ விடியற்காலையிலை வீச்சு வீச்செண்டு கத்திக் கேக்குமாம். கேவலங்கெட்ட மனிச சாதிதானம்மா. இப்பிடி நடக்கும். இதுக்கு நாங்கள் மிருகத்தனமெண்டு வேறை முத்திரை குத்திறம். மிருகங்கள் அப்பப்பா...இப்பிடி இல்லை. குட்டியை விட்டு நகர மாட்டுதுகள். தெருநாய்க்குத் தீனி போட எங்களுக்கு வேறை வேலை இல்லையோ எண்டு நொடிக்கிற மனிச சாதியிலை தான் ஒரு நல்ல உள்ளம் நாய்கள் காப்பகம் கட்டி ஒரு சரணாலயத்தை உருவாக்கப் போகுதாம். ம்...தெய்வங்கள் சிலைகள் மட்டும் இல்லை மனங்களிலும் உண்டு எண்டு இதைத்தான் சொல்லுறது.

என்ன ஜிம்மி நான் சொல்லுறது சரிதானே...சரி போய்ப்படு. அப்ப போட்டு வாங்கோ...'' ம்...குட்டி போட்ட மனிசரைக் கண்டால்...ம்... என்ன செய்ய முடியும். சரி வாறன்...

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : விஜயபுரி வீரன்
இயற்றியவர் : கே. ஆத்மநாதன்
இசை : டி.ஆர். பாப்பா
பாடியவர்கள் : ஏ.எம். ராஜா




உள்ளத்திலே உரம் வேணுமடா
உள்ளத்திலே உரம் வேணுமடா
உண்மையிலே திறம் காணுமடா
ஒற்றுமையால் வெற்றி ஓங்குமடா

உள்ளத்திலே உரம் வேணுமடா
உள்ளத்திலே உரம் வேணுமடா
உண்மையிலே திறம் காணுமடா
ஒற்றுமையால் வெற்றி ஓங்குமடா

வல்லவன் போலே பேசக்கூடாது
வானரம் போலே சீறக்கூடாது
வல்லவன் போலே பேசக்கூடாது
வானரம் போலே சீறக்கூடாது
வாழத்தெரியாமலே கோழைத்தனமாகவே
வாலிபத்தை விட்டு விட கூடாது
மானமொன்றே பிரதானமென்றே
மறந்துவிடாதே வாழ்வினிலே
மானமொரன்றே பிரதானமென்றே
மறந்துவிடாதே வாழ்வினிலே

வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்
ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்
வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்
ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்
ஏட்டு சுரைக்காயெல்லாம் மூட்டை கட்டியாகணும்
நாட்டினிலே வீரம் பொங்கும் நாள் வரணும்
ஏட்டு சுரைக்காயெல்லாம் மூட்டை கட்டியாகணும்
நாட்டினிலே வீரம் பொங்கும் நாள் வரணும்
மானமொன்றே பிரதானமென்றே
மறந்துவிடாதே வாழ்வினிலே
மானமொன்றே பிரதானமென்றே
மறந்துவிடாதே வாழ்வினிலே

உள்ளத்திலே உரம் வேணுமடா
உள்ளத்திலே உரம் வேணுமடா
உண்மையிலே திறம் காணுமடா
ஒற்றுமையால் வெற்றி ஓங்குமடா

உள்ளத்திலே உரம் வேணுமடா
உள்ளத்திலே உரம் வேணுமடா
உண்மையிலே திறம் காணுமடா
ஒற்றுமையால் வெற்றி ஓங்குமடா




ஹரிஷ் கல்யாண், காளி பட புகழ் ஷில்பா மஞ்சுநாத் ஆகியோர் நடித்துள்ள படம் இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும் படத்தின்தலைப்பை பார்த்தே இது காதல் கதை என அனைவருக்கும் விளங்கியிருக்கும். படம் எப்படி வாருங்கள் பார்ப்போம்.

கவுதம் (ஹரிஷ் கல்யாண்) சின்ன வயதிலேயே தன் அம்மா வேறொருவருடன் ஓடிப்போவதால் பெரிய ஏமாற்றமடைந்து கோபத்துடனேயே வாழ்கிறார். எந்த விடயத்தையும் பொறுமையாக ஹாண்டில் செய்ய தெரியாதவர். அடுத்த உடனேயே அடி தான்.

தாரா (ஷில்பா மஞ்சுநாத்) பெரிய இடத்து பெண். இவர்கள் இருவருக்கும் நடுவில் தமிழ்சினிமா வழக்கம் போல மோதலில் ஆரம்பித்து பின்னர் காதலில் முடிகிறது.

கவுதம்-தாரா இடையிலான காதல், மோதல், பிரிவு, குடும்பத்தின் எதிர்ப்பு தான் இந்த இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும் படம்.

உருகி உருகி காதலிக்கும் இருவருக்குள்ளும் அடிக்கடி பிரச்சினைகள் வர தொடங்குகிறது.

தன் அம் மாவை போல இவளும் நம்மை விட்டு விட்டு போய் விடுவாளோ என்கிற குழப்பம் ஹரிஷ் கல்யாணுக்கு. இவனை நம்பி போகலாமா என்ற குழப்பம் ஹீரோயினுக்கு. இன்னொருவருடன் நிச்சயதார்த்தம் ஆகும் தருவாயிலும் முடிவெடுக்க தயங்குகிறார்.

ஹரிஷ் கல்யாண் கோபத்தில் செய்யும் சில விடயங்கள் தான் அதற்கு காரணம். இவர்கள் இறுதியில் சேர்ந்தார்களா இல்லையா என்பது தான் மீதி கதை.

ஹரிஷ் கல்யாண் இதற்கு முன்பு நடித்த படங்களை விட இந்த படத்தில் வித்யாசமான ரோல். எப்போதும் கோபத்துடனேயே இருக்கும் இளைஞர் ரோலுக்கு கச்சிதமாக பொருந்தியுள்ளார்.

ஷில்பா மஞ்சுநாத் நடிப்பில் மெச்சூரிட்டி இருந்தாலும் படத்தில் அவரது குரல் சில சமயங்களில் படத்திற்கு செட் ஆகாத பீல் தான் கிடைக்கிறது. ஹீரோயின் ரோலும்



ரொம்ப மெச்சூராகத்தான் வடிவமைத்துள்ளார் இயக்குநர். பார்த்தவுடன் காதலிக்காமல் பொறுமை யாக நான் கைந்து முறை யோசித்து முடிவெடுப்பதில் இருந்து அவன் தன்னை துன்புறுத்தும்போது "திஸ் ஐஸ் த எண்டு" என அரை மனதோடு சொல்வது வரை அனைத்திலும் ஈர்க்கிறார்.

ஹரிஷ் கல்யாணின் நண்பர்களாக நடித்துள்ள பால சரவணன், மகபா ஆனந்த் காமெடியில் பெரிதாக எதுவும் இல்லை என்றாலும் ரோலை கச்சிதமாக செய்துள்ளனர்.

ஒரு சாதாரண காதல் கதை, அதில் சில ஏற்ற இறக்கங்களை கொடுத்து வித்யாசமான கிளைமாக்ஸுடன் படத்தை முடித்த இயக்குநர், இன்னும் சில மாற்றங்களை செய்திருந்தால் படம் இரண்டாம் பாதியில் நம் பொறுமையை சோதிக்காமல் இருந்திருக்கும்.

முதல் பாதியில் போர் அடிக்காமல் சொல்லவந்ததை கச்சிதமாக காட்டியிருந்த இயக்குநர், இரண்டாம் பாதியில் பெரிய தடுமாற்றம் அடைந்துள்ளார்.

பாடல்கள் பெரிதாக ஈர்க்கவில்லை என்றாலும் சாம் சி எஸ்சின் பின்னணி இசை படத்திற்கு பெரிதும் உதவியுள்ளது. கவின் ராஜின் ஒளிப்பதிவு பெர்பெக்ட்.

பொறுமையை சோதிக்கும் இரண்டாம் பாதி படம்.

படம் பார்ப்பவர்கள் மனதில் எழும் பல கேள்வி களுக்கு படத்தில் பதில் இல்லை. ஹரிஷ் கல்யாணுக்கு அந்த பெண் பின்னாடி சுத்துவதை தவிர வேறு வேலையே உலகத்தில் இல்லை என்பது போல காட்டியிருப்பது.

மொத்த படத்தையும் சினிமாத்தனம் இல்லாமல் எதார்த்தமாக எடுத்திருந்தாலும் சில விஷயங்களில் இயக்குனர் கோட்டை விட்டுள்ளார்.

மொத்தத்தில் இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும் நாம் நிஜ வாழ்விலேயே பலமுறை பார்த்துள்ள ஒரு சாதாரண காதல் கதையாக இருந்தாலும், நிச்சயம் அனைத்து இளைஞர்களுக்கும் கனெக்ட் ஆகும்.




வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள செய்தி
அனுசரணை: இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம்

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Agency for Development and Cooperation SDC

# இயற்கையோடு ஒன்றிய கல்வி

## -இல்லாது போனதேன்-



காலத்தின் ஓட்டத்தில் மக்களின் வாழ்வியல் முறைகள் மாறியவண்ணம் உள்ளன. அதற்கேற்ப மனிதனும் கடிகாரத்தைப் போல் ஓடிக்கொண்டிருக்கின்றான். இன்று தொழில்நுட்ப வளர்ச்சி விண்ணைத் தொட்டுவிட்டது என்பது எந்தளவு உண்மையோ அதேயளவு உண்மை உண்ண உணவின்றி. உறங்க வீடின்றி வாழும் மக்களும் எம் மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இத்தகைய அடிமட்ட மக்களின் வாழ்வில் மாற்றத்தை உண்டாக்குவதற்கு அவர்களுக்கான ஒரே ஒரு வழி கல்விதான். உலகமயமாதலின் விளைவாக அரசியல், பொருளாதாரம், சமூகம் என அனைத்தும் தொழில்நுட்ப மாற்றங்களால் நிரப்பப்பட கல்வியிலும் தொழில்நுட்பம் பாரிய மாற்றத்துக்கு பல வருடங்களாக உட்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே. அண்மைக்காலமாக எமது நாட்டில் ஸ்மார்ட் தர வகுப்புக்களின் வருகை எமது சமூகத்தில் இடம்பெற்ற பாரிய மாற்றம் என்றே கூற வேண்டும். இத்தகைய திட்டத்தை மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை எதிர்பார்த்து அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஜெயவர்த்தனபுர பாடசாலையில் முதல் ஸ்மார்ட் தர வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு புத்தகப் பயன்பாடு கிடையாது. அனைத்து நடவடிக்கையும் ஸ்மார்ட் ரப் (Tap) மூலமாக செய்வதற்கும், அதனை மின்னஞ்சல் மூலமாக பரிமாறுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலமாக மாணவர்களின் புத்தகச் சுமை குறைக்கப்படுகிறது, புதிய தொழில்நுட்பத்தை இலகுவாக கற்றுக் கொள்கின்றார்கள் என்பதே பலரின் கருத்தாக அமைகின்றது. ஆனால் இன்று எத்தனை பாடசாலைகளில் கணனிகளின்றி மாணவர்கள் கல்விக் கற்கின்றார்கள்? இத்தகைய தொழில்நுட்ப பயன்பாடுகள் வளர்ச்சியடைந்த சமூகத்தாரிடம் மட்டுமே கையளிக்கப்படும். இதனை சாதாரண அடிமட்ட மாணவர்கள் பெற்றுக்கொள்ள இன்னும் பல வருடங்கள் செல்லும். அப்போது அவற்றையும் கடந்து புதிதாக பல தொழில்நுட்ப வளங்கள் பயன்பாட்டுக்குவந்து விடும்.

மாற்றங்கள் மறுக்க முடியாதவை. ஆனால் அத்தகைய மாற்றங்கள் மக்களை மேன்மையடையச் செய்வதாக அமையவேண்டும். தற்போது காணப்படும் வெண் பலகைகளின் வருகை கரும்பலகைகளின் பயன்பாட்டை குறைத்துவிட்டது என்றே கூற வேண்டும். ஆரம்ப காலத்தில் கரும்பலகைகளில் ஒருபுறம் திகதி, மாணவர் எண்ணிக்கை, பாட அலகு என்பன எழுத்தப்பட்டு அன்றைய நாளுக்குரிய திருக்குறளோ அல்லது பொன் மொழியோ எழுதப்பட்டிருக்கும். ஆசிரியர் கற்பிக்கும் போதே மாணவர்களை எழுப்பி கரும்பலகையில் எழுதச் செய்வார். ஆனால் இன்றைய வெண்பலகைகளில் இவை கிடையாது. முழுவதுமாக அது ஆசிரியரின் பொறுப்பில் இருக்கும். அன்று மாணவர்கள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமை, ஆர்வம் என்பன மழுங்கடிக்கப்பட்டு விட்டன என்றே கூற வேண்டும்.

ஆதியில் எமது முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றித்த குருகுலக் கல்வியை பெற்றுக் கொண்டனர். உறவுகளை துறந்து வீட்டை விட்டு வெளியில் வந்து ஆசானின் குடிலில் பல வருடங்களாக அவருக்குச் சேவை புரிந்து கல்வியை பெற்றுச் சென்றார்கள். இத்தகைய கல்வி முறையில் யாவரும் சமமாக மதிக்கப்பட்டனர். மண்ணை ஆண்ட அரசனின் மகனும், சாதாரண ஆண்டியின் மகனும் ஒன்றாக அமர்ந்து கல்வி கற்றகாலம் அது. இத்தகைய குருகுல கல்வி வாழ்வின் இன்ப, துன்பங்களைக் கற்றுக் கொடுத்தன, அனைவரையும் சமமாக மதிக்கக் கற்றுக் கொடுத்தன, சேவை செய்து கல்வியை பெற்றுக் கொண்டதால் கல்வியின் மேன்மையை கற்றுக் கொடுத்தன. இயற்கையோடு ஒன்றித்துப் போன கல்வியை வகுப்பறைக்கு மாற்றியதால் இயற்கையை நேசிக்க மறந்தோம், தொழில்நுட்ப வளர்ச்சியால் புத்தகப் பூச்சிகளானோம். தொலைபேசிகளின் வருகை இணையத் தளப்பாவனையை அதிகரித்தது. நூல்களையும், நூலகங்களையும் மறந்து மணிக்கணக்கில் தொலைபேசிகளுடன் நேரத்தை செலவழிக்கக் கற்றுக் கொண்ட எமது சமுதாயத்துக்கு இன்றைய ஸ்மார்ட் வகுப்பறைகளின் வருகை அறிவை சுமந்து நிற்கும் நூலகங்களை தொல்பொருள் காட்சியகமாக மாற்றிவிடும்.

கல்வியில் பாரிய வளர்ச்சியை தொட்டுவிட்டோம் என்று மார்தட்டிக் கொள்ளும் நாம் எத்தனை விடயங்களை இழந்து தொழில்நுட்பத்துக்கு அடிமையாகியுள்ளோம் என்பதை எண்ண மறந்து விட்டோம். தொழில்நுட்ப மாற்றங்கள் அவசியமானவை தான். ஆனால் அவை மக்களை ஆரோக்கியமானதாக வைத்திருக்க வேண்டும். இன்றைய இணையப் பாவனை மாணவர்களின் சிந்தனை சக்தியை மழுங்கடித்துள்ளதுடன், அவர்களை சோம்பேறிகளாக்கியும் உள்ளது. நல்ல நூல்களின் பயன்பாடு, ஆசானின் வழிகாட்டல்களோடு இணைந்த தொழில்நுட்ப கல்வி முறை என்பன மாணவச் சமுதாயத்தை ஒழுக்கமான பாதையில் இட்டுச் செல்ல வழிவகுக்கும்.

மு.துலாபரணி

# இது நம்ம கதைகள்... 43

## நோய் நிர்ணயம்

"சுவரிருந்தால் தானே சித்திரம் வரையலாம்" என்பது எம் உடல் ஆரோக்கியதுடன் தொடர்புபட்ட முதுமொழியாகும். தேக ஆரோக்கியமே வளமான வாழ்வின் அடித்தளம் என்பதே இதன் கருத்து. எம் முன்னோர் வாழ்வு இயற்கையுடன் இணைந்திருந்தமையால் அவர்கள் ஆரோக்கியமாக் வாழ்ந்தனர். ஆயினும் இன்று வசதிகள், வாய்ப்புக்கள் அதிகரித்த நிலையில் இயல்பான வாழ்வைத் தொலைத்து, இயந்திரமயமான - இலகுவான வாழ்வை நாம் தெரிவு செய்தமையால், எம் ஆரோக்கியமே கேள்விக்குறியாகிவிட்டது.

வியர்வை சிந்தா வாழ்வு வியாதிகளுக்கு அடிகோலியாகிவிட்டது. மனிதர்கள் தம் உழைப்பின் பெரும் பகுதியை மருந்துவத்திற்கு ஒதுக்கீடு செய்யும் நிலைதான் எம் முன்னே நிதர்சனமாகியுள்ளது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆயினும் இன்று செல்வத்திற்கும் குறைவில்லை, நோய்க்கும் பஞ்சமில்லை என்றாகிவிட்டது. இருப்பினும் மருத்துவத் துறையின் வளர்ச்சி, நிபுணத்துவ தேர்ச்சி என்பன எம் வாழ்விற்கு கவசமாகத் திகழ்வது வரப்பிரசாதமே.

நோயை சரியாக இணங்காணல் என்பதே மருத்துவ சிகிச்சையின் முதல் வெற்றிப்படியாகும். பலவிதமான பரிசோதனை முறைகள், கருவிகள் என்பன இன்று நோயைத் துள்ளியமாகக் கண்டறிந்து சிகிச்சைகளுக்கு வலுச்சேர்க்கின்றன. எம்



மருத்துவர்கள் நோயை இனங்காண்பதிலும், பொருத்தமான சிகிச்சை முறைகளைக் கையாள்வதிலும் சிறந்தவர்களாகவே திகழ்வது பாராட்டுதற்குரியதாகும். ஆயினும் சிகிச்சையின் பின்னரான முன்னேற்றங்களைக் கண்காணித்தல் மற்றும் சிகிச்சைக்குப் பின்னரான நோய் முகாமைத்துவம் என்பன தொடர்பிலும் அக்கறை கொள்ளல் அவசியமாகும். இந்த விடயத்தில் எம் வடபுலத்து மருத்துவத்துறையில் துலங்கல் அதிகம் தேவையென்பது நோக்கர்களின் கருத்தாகும்.

ஆரம்பத்திலிருந்தே சகல சிகிச்சை நடைமுறைகளும் சிறப்பாக ஆற்றப்படுகின்ற போதிலும், சிகிச்சையின் பின்னரான நோய் முகாமைத்துவ செயன்முறை சற்றுத் தளர்ந்து போவதால் பெரும்பாலான நோயாளிகள் மீளவும் கடுமையான நோய் உபாதைக்குள்ளாகும் நிலையும், மீளவும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நிலையுமே உருவாகிறது. சிகிச்சையின் பின்னரான நோய் முகாமைத்துவம் தொடர்பிலான கரிசனைகளை நிபுணர்களின் சிந்தனைக்கு சமர்ப்பித்து இவ்வாரக் கதைக்குள் நுழைகின்றேன்.

நைஜிரியாவில் ஒருவர் கடுமையான இருமல் மற்றும் சுவாசப் பாதிப்பிற்கு ஆளானார். அவரைப் பாரிசோதித்த வைத்தியர் அவரது நுரையீரலை "ஊடு கதிர் வீச்சு" படமெடுக்கப் பணித்தார்.

அவரது "எக்ஸ்ரே" படத்தைப் பார்த்த மருத்துவர் அதிர்ந்து போனார். அவரின் நுரையீரல்களுக்கிடையில் உயிருள்ள கரப்பான்பூச்சி ஒன்று அசைந்து திரிந்தது. அம் மனிதனைப் பரிதாபமாகப் பார்த்து மருத்துவர் சொன்னார். "ஐயா உங்கள் சுவாசப் பைகளுக்கிடையில் கரப்பான்பூச்சி ஒன்று நடமாடித் திரிகின்றது. சத்திர சிகிச்சை மூலம் தான் இதை அகற்ற வேண்டும். ஆனாலும் அத்தகைய சத்திர சிகிச்சையை இங்கே செய்யக்கூடிய வசதியில்லை. எனவே நீங்கள் அமெரிக்கா சென்று தான் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும்".

தன் விதியை நொந்து கொண்ட அந்த மனிதன் தன் சொத்துக்களையெல்லாம் விற்று சிகிச்சைக்குப் பணம் சேர்த்தான். மிகுதிக்கு சிலரிடம் கடன் பெற்றுக் கொண்டான். அமெரிக்கா சென்று பெரிய வைத்தியசாலையில் அனுமதியும் பெற்றுக் கொண்டான். முதலில் அங்கும் "எக்ஸ்ரே" படம் எடுக்கப்பட்டது. என்ன ஆச்சரியம். நுரையீரல்களுக்கிடையில் ஊசலாடிய கரப்பான்பூச்சிக் காணவில்லை. அதிசயத்துடன் "என் சுவாசப் பைகளுக்கிடையிலிருந்த கரப்பான்பூச்சி பூச்சியைக் காணவில்லையே டாக்டர். என்ன நடந்தது" என்று கேட்டான் நைஜிரியக்காரன். சிரித்தபடியே அமெரிக்க மருத்துவர் சொன்னார். "அந்தக் கரப்பான்பூச்சி பூச்சி உங்கள் நுரையீரல்களுக்கிடையில் இருக்கவில்லை. அது இருந்தது உங்கள் நைஜிரிய வைத்தியசாலையின் "எக்ஸ்ரே" இயந்திர ஸ்கானருக்குள் (scanner)".

"இந்த உண்மையை அறியத்தான் என் உடைமைகளையெல்லாம் விற்று அமெரிக்கா வந்தேனா?" என நினைத்து தன் நாட்டு மருத்துவத்துறையின் அசண்டையீனத்தை நொந்து கொண்டான் நோயாளி.

**அளவோடு வாழின்,**
**வளமோடு ஓங்கும் நலம்,**


**எப்.எக்ஸ்.அன்ரன்**

# facebook புத்தகங்கள்

சிறிய வயதிலிருந்தே எனக்குத் தமிழ்ப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் அதிகம் உண்டானது.

அதற்கு முழு முதற் காரணம், என் வீட்டில் அப்பா அப்போது வாங்கிப்போட்ட ஜனரஞ்சகப் பத்திரிகைகள் தான்.

அதுதான் எனக்குத் தொடக்கம். அந்தக் காலத்தில் ஆனந்த விகடன் குமுதம், கல்கி, கலைமகள் போன்றவைகள் மிகவும் தரத்துடன் விளங்கின.



ஜெயகாந்தன், சாண்டில்யன் நா.பார்த்தசாரதி லக்ஷ்மி ஜாவர் சீதாராமன், ர.சு நல்லபெருமாள்,மேலாண்மை பொன்னுச்சாமி, சுஜாதா போன்ற எழுத்துலக ஜாம்பவான்கள் நிறைய எழுதிய காலம் அது. தற்போது அவர்கள் அனைவரும் மரித்துப் போயினர்.

இப்போது எல்லா தமிழ்ப் பத்திரிகைகளும் மிகவும் தரமிழந்து சோகத்துடன் சினிமாச் செய்திகளையும், விளம்பரங்களையும் மட்டுமே நம்பி வாழ்கின்றன. நல்ல சிறுகதைகளும், தொடர் கதைகளும்அவற்றில்காணப் படுவதில்லை. அந்தப் பத்திரிகைகள் விற்பனையாவதுமில்லை.

என்னுடைய சிறிய வயதில் எங்கள் தெரிவில் ஆவுடையப்பன் சேர் என்று ஒருத்தர் இருந்தார். அவர் எப்போதும் புன்னகையுடன் இருப்பார். கணீரென்று தெளிவுடன் பேசுவார். நிறைய வாசிப்பார். வாசித்தல் மிக நல்ல பழக்கம் இறக்கும் வரை அதை எல்லோரும் தொடரவேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார்.

அவர் தன் வீட்டில் ஏழு அடி உயரம் ஆறு அடி அகலத்தில் ஒரு பெரிய தேக்கு மர பீரோவிலான நூலகம் வைத்திருந்தார். முதன் முதலில் அவர் வீட்டிற்குச் சென்ற போது அவர் அழகாகப் பராமரித்து வந்த நூலகத்தைப் பார்த்து நான் சொக்கிப் போனேன்.

வீட்டிற்குள்ளேயே ஒரு நூலகம் என்பது பற்றி அந்தச் சிறிய வயதில் நான் கற்பனைகூட செய்து பார்த்தது கிடையாது.

பள பளப்பான கண்ணாடி முகப்புடன் அந்த நூலகம் கம்பீரமாகக் காட்சி தரும். அதில் கிட்டத்தட்ட ஆயிரம் புத்தகங்கள் இருக்கும். சிறுகதைகள்,நாவல்,கவிதைகள்தவிர மருத்துவம், ஆன்மீகம் உலக அரசியல் என்று விதவிதமான புத்தகங்கள் அதில் இருக்கும். அதிகம் படித்து நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும்' என்கிற தேடல் ஆவுடையப்பன் சேருக்கு அதிகம். எல்லாப் புத்தகங்களையும் அவர் விலை கொடுத்து தான் வாங்குவார். செலவைப் பற்றி யோசிக்கவே மாட்டார்.

நல்ல புத்தகங்களை தேடித் தேடி வாங்கிச் சேகரிப்பார். புதிதாக ஒரு புத்தகம் வாங்கியதும், அதன் பக்கங்களை தன் வலது கட்டை விரலால் வேகமாகப் புரட்டி, தன் மூக்கை அதன் அருகில் எடுத்துச்சென்று வாசனை பிடிப்பார்.

புதுப் புத்தகங்களின் வாசனை ரம்மியமானது என்பார். அட்டைக்கு அடுத்த பக்கத்தில்தன் பெயரை எழுதி, புத்தகம் வாங்கிய திகதியையும் பெயருக்கு கீழே குறித்து வைப்பார்.

அவைகளை உடனே படித் தும் முடித்து விடுவார். பிறகு அவைகளை அழகாக அடுக் கிவைத்து ஆர்வத்துடன் பராமரிப்பார்.


சேகுவாரா, பெடல் காஸ்ட்ரோ போன்றவர்களைப் பற்றி நான் நிறைய தெரிந்து கொண்டது ஆவுடையப்பன் சார் வீட்டு நூலகம் மூலமாகத்தான். நான் ஆர்வத்து டன் அவருடையநூலகத்திலிருந்து நிறையப் புத்தகங்களை என் வீடீற்கு எடுத்துச் சென்று படிக்க ஆரம்பித்தேன்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1677

### மயூரன்

உயிருக்கு உயிராக பழகிறேன் என்று சொல்ற தோழியைவிட ஞாயிற்றுக்கிழமை நமக்காக சாகிற கோழிதான் பெருசு!



### சுரேனியன்

அம்மா தனக்காக சமைத்ததும் இல்லை
அப்பா தனக்காக உழைத்ததும் இல்லை



### கவிமாறன்

அதிகம் விட்டுக் கொடுத்து போறவங்க கிட்ட உங்க திமிரைக் காட்டாதீங்க... முடிஞ்சா அவங்க ஏன் உங்களுக்காக விட்டுக் கொடுத்து போறாங்க என்று யோசிங்க



### நிர்மலன்

உயரத்தில் இருந்து பார்த்தால் மற்றவர்கள் சிறியவர்களாக உனக்குத் தெரியலாம்... ஆனால் நீயும் அவர்களில் ஒருவன்தான் என்பதை ஒருபோதும் மறந்து விடாதே...



### சுஜீந்திரன்

வறண்ட நிலத்தில் வற்றாத ஊற்று விவசாயிகளின் கண்ணீர்



### இனியவன்

தூக்கி எறியப்படும் தருணங்களில் தான் சிறகை விரிக்க வாய்ப்பு கிடைக்கிறது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 175

# நாற்பதின் பின் நாம் செய்வோமா?



"ரா ரா ராமையா எட்டுக்குள்ளே வாழ்க்கை இருக்கு ராமையா எட்டு எட்டா வாழ்க்கையைத்தான் பிரிச்சுக்கோ" என்பது ஒரு சினிமாப் பாட்டு. இந்த ஐந்தாம் எட்டில் வருவது தான் எமது நாற்பது வயதுப்பருவம். விஞ்ஞானிகளும் உளவியலாளர்களின் கருத்துப்படியும் இப்பருவமும் மனித வாழ்க்கையில் ஒருதடை தாண்டும் வயதாகும். இந்ந ிலையிலே ஆரோக்கியம். விருப்புகள் .நித்திரை. பொறுப்புகள். பழ க்கங்கள் **(habits)** என்பவையும் சற்று மாற்றம் காணும். இம் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு ஆரோக்கியமாக வாழநாம் என்ன செய்ய வேண்டும்?

* நித்திரை அவசியம் - ஏழுமுதல் ஒன்பது மணித்தியாலம் நித்திரைகொள்ள வேண்டும். இது எம் நிர்ப்பீடனத் தொகுதியை ஊக்கப்படுத்தி நோய்கள் ஏற்படலை தடுக்கும். பதகளிப்பை குறைக்கும்**(Stress)**. இரவில் நித்திரைக்கு வேளைக்கு சென்று அதிகாலையில் எழும்புதல் விரும்பத்தக்கது. நித்திரைக்கு செல்லும் நேரத்தையும் எழும்பும் நேரத்தையும் மணிக்கூடு மூலம் வழக்கப்படுத்தலாம்.

* உடற்பயிற்சி அவசியம். என்பை வன்மையாக்கவும் தசையைப் பேணவும் கிழமைக்கு ஐந்து நாட்கள் தொடர்ந்து முப்பது நிமிடமாவது அவசி யம். சில நோய்நிலைகளில் மருத்துவ ஆலோசனைப்படி செய்தல் வேண்டும்.

* நன்றாக நீர் குடிக்க வேண்டும். ஒவ்வொரு சாப்பாட்டின் போதும் நீர் பருக வேண்டும். இது உடலிழையங்களுக்கும் திரவங்களுக்கும் மேலும் புத்துயிர்ப்பு அளிக்கும்.

* உங்களிடையே உங்கள் பிரதேசத்தில் காணப்படும் பழங்கள். இலைகள். மரக்கறிகளை. தானியங்களைஅதிகள வு உண்ணுங்கள்.

* முக்கியமான மூன்று வேளைஉணவுகளிடையே உண்ணும் உணவாக பழங்கள். தானியங்களை தெரிவு செய்யவேண்டும்.

* உண்ணும் உணவில் அதிகளவு புரதம் சேர்க்கப்பட வேண்டும். இது தசையை பேணவும் இதனால் தோற்றத்தை பாதுகாக்கவும் உதவும். உடலில் எதிர்ப்புத்தன்மையை குறையாது பேணவும் உதவும்.

* எமது பிற்காலத்திற்கு என சிறிதளவு சேம ிப்பு அவசியம்.



திடீரென ஏற்படும் தேவைகளுக்கு உதாரணமாக விபத்து. கொடியநோய் போன்ற வற்றை எதிர்கொள்ளப் பயன்படலாம்.

* ஓய்வுக்காலத்தில்செய்யப் போவதை திட்டமிடல் வேண்டும். சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின்னரான காலத்தை எப்படிநாம் பயனுள்ளதாக வாழப் போகின்றோம் என வழி வகைகளை திட்டமிட்டு வைக்க வேண்டும்.

* எப்போதும் நன்றியோடு நாட்களை (Gratitude) மீட்டுப் பார்க்க வேண்டும். இவ்வளவு காலமும் கிடைத்த அனைத்திற்கும் மனதார நன்றி கூறி உடலுக்கும் உளத்திற்கும் மென் மேலும் புத்துயிர்ப்பூட்டும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

* எமது ஆரோக்கி யத்திற்கு நாமே பொறுப்பு. இக்காலப் பகுதியின் பின் பொதுவாக நித்திரை. போசணை. உடற்பயிற்சி என்பன முக்கியமாகும். கண்பார்வை. பற் சுகாதாரம் போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தவேண்டும். தோலிற் சுருக்கங்கள் ஏற்படஆரம்பிக்கும். இவற்றிற்கான விசேட பராமரிப்பை வைத்திய ஆலோசனைப்படி பெறல் வேண்டும். புகைப்பிடித்தல். மதுபானம் பாவித்தல். வெற்றிலை. பாக்கு. சுண்ணாம்பு பாவனை இருப்பின் இவற்றைப் படிப்படியாக குறைத்து முற்றாக தவிர்க்க வேண்டும். குருதி அமுக்கம். கொலஸ்ரோல். குருதியில் வெல்லமட்டம் என்பவற்றை ஆண்டுக்கு ஒரு முறையாவது மதிப்பீடு செய்தல் வேண்டும். உடல் உயரத்திற்கு ஏற்ப உடற்பருமனைப் பேணல் வேண்டும். நீண்டநேரம் இருப்பதை (sitting) தவிர்க்க வேண்டும். சிறிய இடைவேளைக்காவது எழுந்து நடத்தல் வேண்டும்.

* வாழும் இடம் அழகாக, சுத்தமாக, ஆரோக்கியமாக அமைக்க வேண்டும். விசேடமாக சமையலறை. ஓய்வு அறை. படுக்கை அறை என்பன அடிப்படை வசதிகளைக் கொண்டதாக அமைத்து வாழல் வேண்டும்.

* எமக்குப் பொருத்தமான நல்ல நட்புள்ளங்களுடன் சேர்தல் வேண்டும். **(Good company)** இவர்களால் முன்னேற்றமான. நேரிடையான தகவல்கள். உற்சாகப்படுத்தல். வழிகாட்டுதல்கள் பெறக்கூடியதாக அமைய வேண்டும்.

* எமது வாழ்க்கை எம்முடையது. இந்த வாழ்நாள் நேரம் மட்டும்தான் இவ்வாழ்க்கைக்கு. எனவே ஒவ்வொரு பொழுதையும் நாம் பயனுள்ளதாக. அர்த்தமுள்ளதாக கழிக்க வேண் டும்.



அதற்கு ஏற்ப எமது செயற்பாடுகள் அமையவேண்டு ம். புதிய பல பயிற்சிகளை ஆரம்பிக்கலாம். சிறிய புதிய விளையாட்டுகளில் ஈடுபடலாம். கனவுகாண்பது மனிதனிற்கு உரியது. எனினும் எமது எதிர்கால நற்செயல்கள், முன்னோக்கிய திட்டங்களை நேரிடையாக பகற் கனவுகாண வேண்டும். இது எமக்கு ஒருபுத்துயிர்ப்பை எம் உள்ளத்தில் **(Mind)** உண்டாக்கும்.

* சிரித்து வாழவேண்டும். பிறர் சிரிக்க வாழ்ந்திடக் கூடாது. சிரிப்பதால் நாமும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ வைத்து அந்தச் சூழலையும் அழகாக்குகின்றோம். சிரிப்பு எமக்கு அளிக்கப்பட்ட மிகப்பெரிய கொடை அல்லவா? அதனை நல்லவற்றிற்கே பயன்படுத்தவேண்டும்.

*அதிகாலையில் எழல் வேண்டும். நல்லவற்றை நினைக்க வேண்டும். இது எமது மனதை மேலும் நேரிடையாக்கி உதவும். வெளியில் நடக்கும் நிகழ்வுகளில் பங்கேற்கவேண் டும். **(concerts)** வீட்டில் செல்லப்பிராணி. தாவரங்களை வளர்த்தல் நன்றாகும். பயனுள்ள வழியில் நேரத்தை செலவழித்தல் வேண்டும்.

* பயணம் செய்ய வேண்டும். புதிய கிராமத்திற்கு/ புதிய நாட்டிற்குச் செல்ல வேண்டும். எது எமக்கு இயற்கை காட்சிகளை இரசிக்க உதவும். அ ங்குள்ள புதியவர்களை சந்திக்க சந்தர்ப்பம் தரும். அவர்களின் வாழ்க்கை முறையை காணக் கூடியதாக அமையும். இவற்றிலிருந்து எமது வாழ்க்கைக்குப் பொருத்தமான நல்ல மாற்றங்களை நாம் பெறமுடியும்.

* வாழும் காலத்தை திட்டமிடல் அவசியம். சமூகவட்டத்தில். பொருளாதார ரீதியான. தொழிலில் எமதுந லத்தில உறவுகளைப் பேணுவதில் ஆன்மீக வழியில் என பலவகையாகப் பிரித்து முகாமைப்ப டுத்த வேண்டும். ஆலய வழிபாடு. தியானம். யோகா போன்றவற்றில் ஈடுபாடு கொள்ளல் வேண்டும். ஏதாவது ஒருபுத்தகத்தை வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இதனை நாம் செய்வதனால் நாமும் ஆரோக்கியமாக ஆனந்தமுடன் வாழ்ந்து எம் இளைய தலைமுறையினர்க்கும் நல்லவழிகாட்டிச் செல்பவர்களாக வாழ்வோம்.

திருமதி. சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட போதனாசிரியர்
தாதியக் கல்லூரி



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்